விலை : 20.00 website : www.valampurii.lk
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 புரட்டாதி 25 செவ்வாய்க்கிழமை (11.10.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 297

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம் 1000/= மட்டுமே

# இனியும் அரசியலில் இருந்து அவமானப்படாதீர்கள்!

## மகிந்தவுக்கு அமைச்சர் சம்பிக்க ஆலோசனை

(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தொடர்ந்து அரசியலில் ஈடுபட்டு அவமானப்படுவதை விடுத்து அரசியலில் இருந்து ஓய்வுபெற்றுக் கொள்வதே நல்லது என அரசாங்கத்தின் பாரிய திட்ட மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்,**



மைத்திரி - ரணில் அரசாங்கத்தை ஆட்சியிலிருந்து வெளியேற்றி கூட்டு எதிர்க்கட்சி தலைமையில் புதிய ஆட்சியொன்றை கூடிய விரைவில் அமைப்பதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடந்த 8-ம் திகதி சனிக்கிழமை இரத்தினபுரியில் வைத்து சூளுரைத்திருந்தார்.

இந்த நிலையில் நேற்று கண்டியில், கண்டி மாநகர அபிவிருத்திக்கான திட்டத்தை ஆரம்பித்து வைத்து

24ஆம் பக்கம் பார்க்க....

## 6 இலட்சம் பேர் வரட்சியால் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டிற்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ள வரட்சியான காலநிலை காரணமாக பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஆறு இலட்சத்து 7 ஆயிரத்து 478 ஆக உயர்வடைந்துள்ளது.

பொலநறுவை, அநுராதபுரம், அம்பாறை உள்ளிட்ட 19 மாவட்டங்

23ஆம் பக்கம் பார்க்க....

## ரயிலில் மோதுண்டு குடும்பஸ்தர் காயம்!

(யாழ்ப்பாணம்)

ரயில் மோதியதில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் யாழ்.பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில் உள்ள புகையிரதப் பாதையில் இடம்பெற்றுள்ளது.

23ஆம் பக்கம் பார்க்க....

## புதிய கட்சி தொடர்பில் விரைவில் அறிவிக்கப்படும்

### ஊடகங்களிடம் பசில் கருத்து

(கொழும்பு)

பொது எதிரணியின் சார்பில் புதிய கட்சியை உருவாக்குவதற்கான பணிகள் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டுவருவதோடு, இக்கட்சியின் பெயர் மற்றும் தலைவர் உள்ளிட்ட விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படுமெனவும் முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் நான்கு தடவைகள் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்

23ஆம் பக்கம் பார்க்க....

## சந்திரிகா, மனோவை கைது செய்ய வேண்டும்

### இப்படி கூறுகிறார் உதய கம்மன்பில



(கொழும்பு)

நல்லிணக்கத்திற்கு இடையூறு விளைவிப்பவர்களை கைது செய்ய வேண்டுமாயின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மற்றும் அமைச்சர் மனோ கணேசன் ஆகியோரையே கைது செய்ய வேண்டுமென பிவிதுறு ஹெல

24ஆம் பக்கம் பார்க்க....

## பொதுநலவாய செயலர் இலங்கைக்கு விஜயம்

(கொழும்பு)

பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் பெற்றிசியா ஸ்கொட்லன் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

நாளை புதன்கிழமை ஆரம்பமாகவுள்ள உலக ஏற்றுமதி அபிவிருத்தி ஒன்றியத்தின் 16வது மாநாட்டில் கலந்து கொள்ளும் நோக்கில் இலங்கை வரும் பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம்

23ஆம் பக்கம் பார்க்க....

## பௌத்த மதத்துக்கு முன்னுரிமை த.தே.கூட்டமைப்பும் இணக்கம்

### அரசியல் யாப்பு குறித்து ரணில் தகவல்

(கொழும்பு)

அரசியல் யாப்பில் பௌத்த மதத்திற்கு வழங்கப்பட்டுள்ள முன்னுரிமை தொடர்ந்தும் அவ்வாறே பேணப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மீண்டும் உறுதியளித்துள்ளார்.

புதிய அரசியல் யாப்பிலும் பௌத்த மதத்திற்கு தற்போதைய அரசியல் யாப்பில் வழங்கப்பட்டுள்ள முன்னுரிமையை அவ்வாறே பேணுவதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு உட்பட அனைத்துக் கட்சிகளும் முழுமையான இணக்கத்தை தெரிவித்துள்ளதாகவும் பிரதமர்


23ஆம் பக்கம் பார்க்க....

## சிறுப்பிட்டி இளைஞர்கள் கொலை வழக்கு; 14 இராணுவத்தினருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

சிறுப்பிட்டி பகுதியில் இரு இளைஞர்கள் காணாமல்போய் கொலை செய்யப்பட்ட வழக்கில் கொலை குற்றம் சாட்டப்பட்ட 14 இராணுவத்தினரையும் எதிர்வரும் 24 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ் நீதவான் நீதிமன்ற நீதவான் எஸ்.சதீஸ்தரன் நேற்

24ஆம் பக்கம் பார்க்க....



## ஐ.நா விசேட அறிக்கையாளர் நேற்று கொழும்பு வந்தடைவு



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின சிறுபான்மை இன விவகாரங்களுக்கான விசேட அறிக்கையாளர் றீட்டா இசாக் நாடியா உள்ளிட்ட குழுவினர் கொழும்புக்கு நேற்று வருகை தந்துள்ளனர்.

இதன்போது வெளிவிவ

23ஆம் பக்கம் பார்க்க....

## விமலின் சகோதரருக்கு தொடர் விளக்கமறியல்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்சவின் சகோதரர் சரத் வீரவன்ச மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ஜெயந்த சமரவீர ஆகியோர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் நேற்று கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதனையடுத்து, இவர்களை

24ஆம் பக்கம் பார்க்க....

## தடுப்பில் இருந்த நபர் கொலை 4 பொலிஸ் அதிகாரிகளை கைது செய்ய உத்தரவு!

(கிளிநொச்சி)

யாழ் - சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் ஒருவரை சித்திரவதை செய்து கொலை செய்ததாக கூறப்படும் விவகாரம் தொடர்பில் அப்போதைய சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களை கைது செய்யுமாறு கிளிநொச்சி நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த கொலை சம்பவம் தொடர்

24ஆம் பக்கம் பார்க்க....

# உலகின் பொருளாதார மத்தியாக ஆசியா விரைவில் வளர்ச்சியடையும்

## முன்னோக்கிய பாதையில் இலங்கையும் என ஜனாதிபதி உரை

(கொழும்பு)

ஆசிய புரிந்துணர்வு கலந்துரையாடல் மாநாட்டின் முக்கிய தொனிப்பொருளான, தெற்காசிய பிராந்தியத்தின் விஞ்ஞான தொழில் நுட்பத்திலும், நவீன உற்பத்தித் துறையிலும் இலங்கை முன்னிலை வகிக்க தயார் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தாய்லாந்தின் பாங்கொங் நகரில் ஆரம்பமான ஆசிய புரிந்துணர்வு கலந்துரையாடல் அரச தலைவர்கள் மாநாட்டில் நேற்றுக் காலை உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.



அத்துடன், விஞ்ஞான தொழில் நுட்பத்திலும், நவீன உற்பத்தித் துறையிலும் அபிவிருத்தியை நோக்கி, பிராந்திய நாடுகளுக்கிடையில் அறிவை மேம்படுத்திக் கொள்வதற்கு பரிமாற்று செயல்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி இதன் போது ஆலோசனை முன்வைத்தார்.

வளர்ச்சியடைந்து வரும் ஆசியா எதிர்வரும் சில வருடங்களில் உலகின் பொருளாதார மத்திய நிலையமாகவும் நிதி கேந்திரமாகவும் மேம்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

வளர்ச்சி அடைந்துவரும் பொருளாதாரத்தைக் கொண்ட நாடான இலங்கை, கூடுதல் வருமானம் பெறும் நாடாக மாற்றம் பெறுவதை இலக்காகக் கொண்டுள்ளது, விரைவான பொருளாதார முன்னேற்றத்தை நோக்கி பல்வேறு பாரிய செயற்றிட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

இந்த இலக்குகளை அடைவதற்கு பிராந்திய நாடுகள் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

ஆசிய புரிந்துணர்வு கலந்துரையாடல் மாநாட்டில் பிராந்தியத்திற்குட்பட்ட நாடுகளில் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கு பெரும் வழி வகைகள் இருப்பதாக தனது உரையில் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, நிலைபெறா சமூக கலாசார மற்றும் பொருளாதார வளர்ச்சிக்காக இதனை பயன்படுத்தமுடியும் என்றும் கூறியுள்ளார். (செ-11)


**பணிப்பெண் தேவை**

வெள்ளவத்தையில் வசிக்கும் கௌரவமான சிறிய குடும்பம் ஒன்றுக்கு பணிப்பெண் ஒருவர் உடனே தேவை.

தொடர்பு கொள்ளவும்

T.P NO :- 077 5651122

(6208)



**டிவிகன் ரெக்ஸ்ரைல்ஸ்**

73, நீராவியடி, யாழ்ப்பாணம்

இந்தியாவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்து வாடிக்கையாளரின் நலன் கருதி (மொத்த/ சில்லறை) மாபெரும் விலைத் தள்ளுபடியில் 10.10.2016 முதல் திறந்து வைக்கப்படுகின்றது.

-அருட்குமார்

0777200143

(6187)



**தேசிய லொத்தர் சபையின் மஹஜன லொத்தர் சீட்டின் ஊடாக 20,00,000/- வெல்லப்பட்டமை தொடர்பாக:-**

யாழ். மாவட்ட விற்பனை முகவர் கனகலிங்கம் திலகவதி அவர்களினால் விற்பனை செய்யப்பட்ட 09.10.2016 மஹஜன லொத்தர் சீட்டிழுப்பின் மூலம் யாழ். நகரில் ரூபா இருபது இலட்சம் பரிசு வெல்லப்பட்டுள்ளது என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம். தொடர்ந்து பரிசுகளை வெல்ல கனகலிங்கம் திலகவதி சின்னம் பொறிக்கப்பட்ட ரிக்கட்களை கேட்டு வாங்குங்கள்.

கனகலிங்கம் திலகவதி

முகவர் நிலையம், யாழ்ப்பாணம்.

(6619)


# அரசியல் கைதிகள் விடுதலைக்காக கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

குடிவரவு குடியகல்வு சட்டங்களை மீறி செயற்பட்டமைக்காக கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள முன்னிலை சோசலிச கட்சித் தலைவர் குமார் குணரட்ணம் மற்றும் அரசியல் கைதிகள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டுமெனவும், தொடர்ச்சியாக பிரயோகிக்கப்படுகின்ற அடக்கு முறைகள் உடன் இரத்து செய்யப்பட வேண்டும் எனக் கூறியும் நேற்று கொழும்பில பாரிய பாதயாத்திரையொன்று முன்னெடுக்கப்பட்டது.




கொழும்பு மருதானை டெக்னீகள் சந்தியில் இருந்து ஆரம்பமான குறித்த பாதயாத்திரை கொழும்பு ஒல்கொட் மாவத்தை வரைக்கும் சென்றதோடு கொழும்பின் கோட்டை புகையிரத நிலையத்தில் இருந்து கொழும்பு பிரதான பஸ் நிலையம் வரைக்கு மான பாதை முற்று முழுதாக வாகன நெரிசலுக்கு உள்ளா கியிருந்தது.

குறித்த பாத யாத்திரையில் அகில இலங்கை ஆசிரியர் சேவை சங்கம், இலங்கை பிக்கு முன்னணி, கட்சிகள் கலந்து கொண்டிருந்ததோடு பல்கலைக் கழக மாணவர் ஒன்றியமும் கலந்து கொண்டிருந்தது. (செ-11)


**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

**திருமதி கௌசலாதேவி ஐங்கரலிங்கம்**



மு/வித்தியானந்தா கல்லூரியின் ஆசிரியர்

திருமதி கௌசலாதேவி ஐங்கரலிங்கம்

அவர்கள் உலக ஆசிரியர் தினமான 05.10.2016

அன்று கொழும்பு தாமரைத்தடாக அரங்கில்

மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களால் சிறந்த

ஆசிரியருக்கான குரு பிரதீபா பிரபா விருது

வழங்கி கௌரவிக்கப்பட்டதையிட்டு பாராட்டி

வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-

அரியரத்தினம் நாகம்மா குடும்பம்,

அரசன் குடும்பம், பிரபா குடும்பம்.

வற்றாப்பளை.



## கௌரவ வட மாகாண முதலமைச்சரின் அமைச்சின் அறிவித்தல்

**வட மாகாண சபை அமைச்சரவை அமைச்சர்களுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை விசாரிக்கவென நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு பற்றிய அறிவித்தல்**

வட மாகாண சபையின் அமைச்சரவை அமைச்சர்களுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள ஊழல் மற்றும் ஒழுக்கரீதியான குற்றச்சாட்டுக்களை விசாரிக்கவென இளைப்பாறிய மேல்நீதிமன்ற நீதிபதி திரு.எஸ்.தியாகேந்திரன் அவர்களின் தலைமையில் மூன்று பேர் கொண்ட விசாரணைக்குழு 03.10.2016 இல் இருந்து செயற்படும் வண்ணம் நியமிக்கப்பட்டுள்ளது.

மேற்படி விசாரணைக்குழுவானது இல.63, நல்லூர் குறுக்கு வீதியில் அமைந்துள்ள வட மாகாண சபையின் பிரதம செயலாளரின் அலுவலகத்திலிருந்து தனது அலுவல்களை மேற்கொள்ளும். முறைப்பாடுகளைப் பெற்றுக்கொள்ளும் முறைகளும் விசாரணை நடத்தும் முறைமைகளும் மற்றும் நேர அட்டவணைகளும் குழுவினால் தீர்மானிக்கப்பட்டு அதற்கான அறிவித்தல் விரைவில் குழுவினால் வெளியிடப் படும். இக்குழு நியமனத் திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்கு இயங்கும்.

**வடக்கு மாகாண கௌரவ முதலமைச்சரின் பணிப்பிற்கிணங்க இவ்வறிவித்தல் விடப்படுகின்றது.**

முதலமைச்சர் அலுவலகம்,
ஏ9 வீதி, கைதடி, யாழ்ப்பாணம்.
2016.10.10

திருமதி வி .கேதீஸ்வரன்
முதலமைச்சரின் செயலாளர்



## அறிவித்தல்

**ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை.**
**தரம் 6 அனுமதி – 2017**

எமது கல்லூரியில் தரம் 6 அனுமதிக்கான விண்ணப்பங்கள் 11.10.2016 தொடக்கம் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

விடுதியில் தங்கி கற்க விரும்பும் மாணவர்கள் அதற்குரிய விண்ணப்பப் படிவங்களை தரம் 6 விண்ணப்ப படிவத்துடன் இணைத்து கையளிக்கவும். விண்ணப்ப முடிவுத்திகதி 31.10.2016

**விண்ணப்பங்களை எமது காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.**

- அதிபர்

# ஐக்கிய இலங்கைக்குள் தேசிய பிரச்சினைக்கு தீர்வு

## வழிநடத்தல் குழுவுக்கு கூட்டமைப்பு யோசனை

(கொழும்பு)

***ஐக்கிய இலங்கைக்குள் தேசியப் பிரச்சினைக்குத்தீர்வு காண வேண்டும் என்ற யோசனையை அரசியலமைப்பு நிர்ணய சபையின் பிரதான வழிநடத்தல் குழுவுக்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முன்வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.***



தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முன்வைத்துள்ள இந்த யோசனை தொடர்பில் அரசியலமைப்பு நிர்ணய சபையின் பிரதான வழிநடத்தல் குழு எதிர்வரும் நாட்களில் கலந்துரையாடவுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமை வகிக்கும் இந்த பிரதான வழிநடத்தல் குழுவில் நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்த 21 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடம் பெற்றுள்ளனர்.

புதிய அரசியலமைப்பை தயாரிப்பது தொடர்பில் இந்தக் குழு மூன்று பிரதான விடயங்கள் குறித்து ஆராய்ந்து வருகிறது.

தேர்தல் முறை மாற்றம், இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு மற்றும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை மாற்றம் ஆகிய மூன்று விடயங்கள் தொடர்பில் இந்த பிரதான வழிநடத்தல் குழு ஆராய்ந்து வருகின்றது.

இந்நிலையில், தேர்தல் முறை மாற்றம் தொடர்பில் ஏற்கனவே ஆராய்ந்துள்ள பிரதான வழிநடத்தல் குழு, தற்போது இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் ஆராய்ந்து வருகின்றது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் கடந்த 7 ஆம் திகதி அரசியலமைப்பு நிர்ணய சபையின் பிரதான வழிநடத்தல் குழு பேச்சு நடத்தியிருந்தது. இதனையடுத்து, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கூடிய இந்த பிரதான வழி நடத்தல் குழு இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் ஆராய்ந்திருக்கின்றது.

இதன்போதே ஐக்கிய இலங்கைக்குள் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாணவேண்டும் என்ற யோசனையை அரசியலமைப்பு நிர்ணய சபையின் பிரதான வழிநடத்தல் குழுவுக்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முன்வைத்துள்ளது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் இந்த யோசனை தொடர்பில் அரசியலமைப்பு நிர்ணய சபையின் பிரதான வழிநடத்தல் குழு எதிர்வரும் நாட்களில் கலந்துரையாடவுள்ளதாக கூறப்படுகின்றது.

அரசியலமைப்பு நிர்ணய சபையின் பிரதான வழிநடத்தல் குழுவில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சார்பில் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## புலிகளுக்கு போலி கடவுச்சீட்டை தயாரித்துக் கொடுத்தவர் கைது

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் இலங்கையில் இருந்து தப்பிச் செல்ல பல வருடங்களாக உதவிய டாக்டர் என அழைக்கப்படும் ஒருவரை தாய்லாந்து பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தாய்லாந்து சிறையில் இருக்கும் இந்த நபர் ஆயிரக்கணக்கானவர்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு செல்ல போலி கடவுச்சீட்டுக்களை தயாரித்துக் கொடுத்துள்ளதாக கூறப்படுகிறது.

பல வருடங்களாக மேற்கொள்ளப்பட்டு வந்த புலனாய்வு விசாரணைகளை அடுத்தே இந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாங்கொக் பாதாள உலக குற்றவாளியான இந்த நபர் 2 ஆயிரம் மற்றும் 3 ஆயிரம் அமெரிக்க டொலர்களுக்கு போலி கடவுச்சீட்டுகளை தயாரிந்துக் கொடுத்துள்ளார்.

தாய்லாந்தின் Chachoengsao மாவட்டத்தில் Muang என்ற பிரதேசத்தில் உள்ள வீடொன்றை சுற்றிவளைத்து இந்த நபரை கைது செய்துள்ளனர்.

இந்த நபர் ஈரானில் தாதியாகவும் பணியாற்றியுள்ளார்.

அந்த வீட்டில் இரகசிய இடத்தில் வைக்கப்பட்டிருந்த பிரான்ஸ், இஸ்ரேல், நியூசிலாந்து, ஈரான், சிரியா ஆகிய நாடுகளுக்கு 173 போலி கடவுச்சீட்டுகள், இலத்திரனியல் சிப்கள், விசா முத்திரைகள், அச்சு சாதனங்கள் என்பவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

மியன்மார், லாவோஸ், கம்போடியா நாடுகளுடன் எல்லைகளை பகிர்ந்து கொள்ளும் தாய்லாந்து தென்கிழக்காசிய நாடுகளுடன் சிறந்த தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள இலவச விசா அனுமதிகளை வழங்கி வருகிறது.

இதனைப் பயன்படுத்தி, சர்வதேச குற்றவாளிகள் போதைப்பொருள், ஆயுதங்கள் மற்றும் மாணிக்கக் கற்களை நாடுகளில் எல்லை வழியாக கடத்தி வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7-10)

## பசிலை விடாது துரத்தும் ஜனாதிபதி ஆணைக்குழு

### நேற்றும் விசாரணைக்கு ஆஜர்



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சகோதரரான பசில் ராஜபக்ஷ நேற்றும் பாரிய ஊழல் மோசடிகள் தொடர்பிலான விசாரணைகளை மேற்கொண்டு வரும் ஜனாதிபதி ஆணைக்குழுவினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

கடந்த ஆட்சிக்காலத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக இருந்த பசில் ராஜபக்ஷவிற்கு எதிராக ஊழல் மோசடி மற்றும் அரச நிதியை மோசடி செய்து சொத்துக்களை கொள்வனவு செய்தமை தொடர்பில் பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையிலேயே நேற்றும் ஜனாதிபதி ஆணைக்குழுவினால் அவர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

ஏற்கனவே இந்தக் குற்றச்சாட்டுகளுக்காக நான்கு தடவைகள் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள பசில், நேற்றுக் காலை 9.30 மணியளவில் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகியிருந்தார்.

இதேவேளை இறம்புட்டானுக்கு பிரசித்திபெற்ற இடமான கம்பஹா மாவட்டத்தின் மல்வானை பகுதியில் களனிகங்கையை அண்மித்த பகுதியில் உள்ள 16 ஏக்கர் காணி மற்றும் அங்கு அமைக்கப்பட்டுள்ள அதிசொகுசு மாளிகை தொடர்பிலும் பசில் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்த நிலையில், குறித்த காணியும் மாளிகையும் தனக்கு சொந்தமானது அல்லவெனா பசில் ராஜபக்ஷ கடந்த வெள்ளிக்கிழமை பூகொட நீதிமன்றில் அறிவித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## 200 மில்லியன் நட்டஈடு கோரி நாமல் எம்.பி. வழக்குத் தாக்கல்

ஆதாரமற்ற முறைப்பாடு மற்றும் கைது செய்த குற்றங்களுக்காக நட்டஈடாக ரூபா 200 மில்லியன் கோரி நிதி மோசடி விசாரணைப் பிரிவில் உள்ள இரண்டு அதிகாரிகளுக்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த சமரசிங்க வழங்கிய கிரிஸ் ஒப்பந்த முறைப்பாட்டின் அடிப்படையில் தான் ஒருவாரம் கைது செய்யப்பட்டிருந்ததாக குறித்த மனுவில் நாமல் தெரிவித்துள்ளார்.

எனவே தனது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் நடந்து கொண்ட நிதி மோசடி விசாரணைப் பிரிவின் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் எஸ்.ஐ. ஆகியோரிடம் தலா 100 மில்லியன் ரூபா நட்டஈடு கோரி இந்த வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

மேலும், கிரிஸ் நிறுவனத்தில் இடம்பெற்ற மோசடி தொடர்பில் நாமல் ராஜபக்ஷ, ஜூலை மாதம் 11 ஆம் திகதி கைது செய்யப்பட்டு பின்னர் ஒரு வாரத்தில் பிணையில் விடுதலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## தங்காலை அகுனுகொலபெலெஸ்ஸவில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் கொலை

அம்பாந்தோட்டை தங்காலை அகுனுகொலபெலெஸ்ஸ பகுதியில் தந்தை மற்றும் மகன் ஆகியோர் கொலை செய்யப்பட்டுள்ளதுடன் தாய் மற்றும் மற்றுமொரு மகன் காயமடைந்துள்ளனர்.

இனந்தெரியாத நபர்கள் சிலர் வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து தாக்குதல் மேற்கொண்டதில் இந்த கொலைச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது. இதன்போது 60 வயதுடைய தந்தையும் 25 வயதுடைய மகனும் உயிரிழந்துள்ளதுடன் 52 வயதான தாயும் 28 வயதான மற்றுமொரு மகனும் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் தங்காலை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். சம்பவத்துடன் தொடர்புடைய எவரும் இதுவரை கைது செய்யப்படாத நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7-10)

## அஷ்வினின் 6/81 பந்துவீச்சு பெறுதி கைகொடுக்க

# இந்தூர் டெஸ்டில் 258 ஓட்ட முன்னிலையில் இந்தியா

இந்தூர் டெஸ்டிலும் இந்திய அணியின் ஆதிக்கம் தொடர நியூசிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 299 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. சுழலில் அசத்திய அஷ்வின் 81 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை கைப்பற்ற அசத்தினார்.

இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி, அங்கு 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. கான்பூர், கொல்கத்தா டெஸ்டில் வென்ற இந்திய அணி தொடரை ஏலவே கைப்பற்றிவிட்டது.

இந்நிலையில் இரு அணிகள் மோதும் 3ஆவதும் இறுதியுமான டெஸ்ட் இந்தூரில் நடக்கிறது.

இப்போட்டியில் தமது முதல் இன்னிங்சுக்காக துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 557 ஓட்டங்கள் எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது. தொடர்ந்து தமது முதல் இன்னிங்சுக்காக துடுப்பெடுத்தாட களமிறங்கிய நியூசிலாந்து அணி நேற்று முன் தினம இரண்டாவது நாள் ஆட்ட நேர முடிவில், விக்கெட் இழப்பின்றி 28 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

**இரு அரைசதம்:** மூன்றாம் நாள் ஆட்டத்தில் முதல் இன்னிங்ஸை தொடர்ந்த நியூசிலாந்து அணியின் கப்டில், லேதம் ஜோடி முதல் 14 ஓவர்களில் 29 ஓட்டங்கள் மட்டும் எடுத்தது.

இதன்பின் இருவரும் திடீரென அதிரடிக்கு மாறினர். இருவரும் மாறி மாறி பவுண்டரிகளாக விளாசினர். இதனால் அடுத்த 6 ஓவரில் 45 ஓட்டங்கள் கிடைத்தன. கப்டில் 17, லேதம் 10ஆவது அரைசதம் அடித் தனர்.

**அஷ்வின் எழுச்சி:** முதல் விக்கெட்டுக்கு 118 ஓட்டங்கள் சேர்த்த நிலையில், ஒரு வழியாக அஷ்வின் சுழலில், அவரிடமே பிடிபட்டார் லேதம (53). இதன் பின் பந்துவீச்சில் அசத்தினார் அஷ்வின்.

இத்தொடரில் மூன்றாவது முறையாக அணித் தலைவர் வில்லியம்ஸனை (8) ஆட்டமிழக்கச் செய்த அஷ்வின், றோஸ் டெய்லரையும் (0) விட்டு வைக்கவில்லை. மறுமுனையில் 72 ஓட்டங்கள் எடுத்த கப்டில், ரன் அவுட்டானார். தொடர்ந்து ரோஞ்சியையும் 'டக்' அவுட் செய்தார் அஷ்வின்.

134/1 விக்கெட் என்ற வலுவான நிலையில் இருந்த நியூசிலாந்து அணி, அடுத்து 14 ஓட்டங்கள் எடுப்பதற்குள் 4 விக்கெட்டுகளை (148/5) பறிகொடுத்தது.

வோட்லிங் (23), சான்ட்னர் (22) ஜடேஜாவிடம் 'சரண்' அடைந்தனர். நீண்ட நேரமாக தொல்லை கொடுத்துக் கொண்டிருந்த, அரைசதம்



அடித்த நீஷத்தை (71), அஷ்வின் திருப்பி அனுப்பினார்.

ஜீதன் படேல் (18) ரன் அவுட்டாக, போல்ட் (0) ஏமாற்றினார். நியூசிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 299 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இந்தியா சார்பில் அஷ்வின் 6, ஜடேஜா 2 விக்கெட் வீழ்த்தினர்.

**மீண்டும் துடுப்பாட்டம்:** முதல் இன்னிங்ஸில் 258 ஓட்டங்கள் முன்னிலை பெற்ற போதும், 'பொலோ ஒன்' கொடுக்காத இந்திய அணி, 2ஆவது இன்னிங்ஸை தொடர்ந்தது. முரளி விஜய் பவுண்டரி அடித்து ஓட்டக் கணக்கைத் தொடங்கினார். மறுமுனையில் ஒரு பவுண்டரி அடித்த கம்பிர் (6) வலது தோள் பட்டை வலியால் துடித்தார். பின் இவர் 'ரிட்டயர்டு ஹர்ட்' முறையில் திரும்பினார்.

3ஆவது நாள் ஆட்ட முடிவில், இந்திய அணி இரண்டாவது இன்னிங்ஸில், விக்கெட் இழப்பின்றி 18 ஓட்டங்கள் எடுத்து, 276 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கிறது. முரளி விஜய் (11), புஜாரா (1) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இன்னும் இரு நாட்கள் மீதமுள்ள நிலையில், இப்போட்டி யில் நியூசிலாந்து அணி இந்திய வீரர்களின் பிடியில் இருந்து தப்புவது கடினம்தான்.

**20ஆவது முறையாக 5 விக்கெட் குவியல்**

ஜிம்மி நீஷத்தை ஆட்டமிழக்கச் செய்த அஷ்வின், இந்தூர் டெஸ்ட் முதல் இன்னிங்சில் 6 விக்கெட் வீழ்த்தினார். தவிர, 39 டெஸ்டில், 20 ஆவது முறையாக அஷ்வின், 5 அல்லது அதற்கு மேல் விக்கெட் வீழ்த்தி அசத்தினார். (க)


---

## சீன ஓபன் டென்னிஸ்

# முர்ரே, ரட்வன்ஸ்கா சம்பியன்

சீன ஓபன் டென்னிஸ் தொடரில் மகளிர் ஒற்றையர் பிரிவில் அசத்திய போலந்தின் ரட்வன்ஸ்காவும் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் அசத்திய பிரிட்டனின் அன்டி முர்ரேயும் சம்பியன் பட்டம் வென்றனர்.

சீன தலைநகர் பீஜிங்கில் சர்வதேச ஓபன் டென்னிஸ் தொடர்



நடந்தது. இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதியில் போலந்தின் ரட்வன்ஸ்கா, பிரிட்டனின் ஜோகன்னா கோன்டாவை எதிர்கொண்டார். முதல் செட்டை 6:4 என கைப்பற்றிய ரட்வன்ஸ்கா, அடுத்த செட்டையும் 6:2 என எளிதாக வென்றார். ஒரு மணி நேரம் 35 நிமிடம் நீடித்த



போட்டியின் முடிவில, ரட்வன்ஸ்கா 6:4, 6:2 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றினார்.

இதன்மூலம் இத்தொடரில் 2ஆவது முறையாக பட்டம் வென்றார். ஏற்கனவே, கடந்த 2011இல் வாகை சூடியிருந்தார்.

பெண்கள் இரட்டையர் பிரிவு இறுதியில் அமெரிக்காவின் பெதானி மட்டக்-சாண்ட்ஸ், செக் குடியரசின் லூசி சபரோவா ஜோடி 6:4, 6:4 என்ற நேர் செட் கணக்கில் பிரான்ஸின் கரோலின் கார்சியா, கிறிஸ்டினா ஜோடியை வீழ்த்தி, சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

**முர்ரே சம்பியன்**

ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதியில் பிரிட்டனின் ஆண்டி முர்ரே, பல்கேரியாவின் டிமிட்ரோவ் மோதினர். அபாரமாக ஆடிய முர்ரே 6:4, 7:6 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று முதன்முறையாக சம்பியனானார்.

நடால் ஜோடி அசத்தல்

ஆண்கள் இரட்டையர் பிரிவு பைனலில் ஸ்பெயினின் நடால்-பாப்லோ ஜோடி 6:7, 6:2, 10:8 என்ற செட் கணக்கில் அமெரிக்காவின் ஜாக் சாக், அவுஸ்திரேலியாவின் பெர்னார்ட் ஜோடியை வீழ்த்தியது. (க)

---

## மோர்டஷா சகலதுறையிலும் பிரகாசிப்பு

# இங்கிலாந்தை வீழ்த்தியது பங்களாதேஷ்

இங்கிலாந்து அணிக்கு எதிரான 2ஆவது ஒருநாள் போட்டியில் அணித் தலைவர் மஷ்ரபி மோர்டஷாவின் சகலதுறை பெறுபேறுகள் கைகொடுக்க 34 ஓட்டங்களால் இங்கிலாந்தை வீழ்த்தி அசத்தல் வெற்றியை பதிவு செய்தது பங்களாதேஷ்.

பங்களாதேசுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி, அங்கு 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. முதலாவது போட்டியில் இங்கிலாந்து வென்றிருந்த நிலையில் நேற்று இரண்டாவது போட்டி மிர்பூரில் நடந்தது. நாணயச் சுழற்சியில வென்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

பங்களாதேஷ் அணிக்கு தமிம் இக்பால் (14), இம்ருல் ஹெய்ஸ் (11), சபிர் ரஹ்மான் (3) ஏமாற்றினர். முஷ்பிகுர் ரஹிம் (21) பெரிய அளவில் சோபிக்கவில்லை. சகிப் அல் ஹசன (3) சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். பொறுப்பாக ஆடிய மகமதுல்லா (75) அரைசதம் கடந்து நம்பிக்கை தந்தார்.

மொசாதக் ஹொசைன் (29), நாசிர் ஹொசைன் (27*), கேப்டன் மோர்டசா (44) ஓரளவு கைகொடுத்தனர். 50 ஓவர்கள் நிறைவில் பங்களாதேஷ் 8 விக்கெட்டுக்களை



இழந்து 238 ஓட்டங்களை எடுத்தது.

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய இங்கிலாந்து அணிக்கு ஜேம்ஸ் வின்ஸ் (5), ஜேசன் ரோய் (13), டக்கீட் (0) சொதப்பினர். பென் ஸ்ரோக்ஸ் 'டக் அவுட்' ஆனார். அணித் தலைவர் ஜோஸ் பட்லர் (57) அரைசதம் கடந்தார். பேர்ஸ்டோவ் (35) ஆறுதல் தந்தார். மொயீன் அலி (4), வோக்ஸ் (7), வில்லே (9) நிலைக்கவில்லை. ஜாக் பால் (28), அடில் ரஷித் (33*) ஓரளவு ஓட்டங்கள் சேர்த்த போதும்,

இங்கிலாந்து அணி 44.4 ஓவரில் 204 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து 34 ஓட்டங்களால் தோல்வியைச் சந்தித்தது.

பந்துவீச்சில் பங்களாதேஷ் அணி சார்பில் மோர்டசா 4, டஸ்கின் அகமட் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இதன்மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் 1:1 என்ற கணக்கில் சமநிலையில் உள்ளது. போட்டியின் ஆட்டநாயகனாக பங்களாதேஷின் அணித்தலைவர் மோர்டஷா தெரிவானார்.

இரு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவது மற்றும் கடைசிப் போட்டி நாளை சிட்டகொங்கில் நடக்கிறது. இதில் வெற்றி பெறும் அணி, தொடரை கைப்பற்றி கிண்ணத்தை கைப்பற்றும். (க)

---

## ஜப்பான் போர்முலா 1

# ரோஸ்பேர்க் சம்பியன்



ஜப்பான் 'பார்முலா 1' கார்பந்தயத்தில் மெர்சிடஸ் அணியின் நிகோ ரோஸ்பேர்க் முதன்முறையாக சம்பியன் பட்டம் வென்றார்.

ஜப்பானில் உள்ள சுசூகா நகரில், நடப்பு ஆண்டின் 17ஆவது 'கிராண்ட் பிரிக்ஸ் பார்முலா 1' கார் பந்தயம் நடந்தது. இதில் ஹமில்டன், ரோஸ்பேர்க், வெட்டல் உள்ளிட்ட முன்னணி நட்சத்திரங்கள் பங்கேற்றனர்.

பந்தய தூரத்தை ஒரு மணி நேரம், 26 நிமிடம், 43.333 வினாடியில் கடந்த மெர்சிடஸ் அணியின் ஜெர்மனி வீரர் நிகோ ராஸ்பர்க் முதலிடம் பிடித்து, முதன்முறையாக கிண்ணம் வென்றார்.

இது, இந்த ஆண்டு ராஸ்பர்க் வென்ற 9வது பட்டம். இதற்கு முன் அவுஸ்திரேலியா, பஹ்ரைன், சீனா, ரஷ்யா, ஐரோப்பியா, பெல்ஜியம், இத்தாலி, சிங்கப்பூரில் நடந்த போட்டிகளில் கோப்பை வென்றார். இந்த வெற்றியின்மூலம், உலக சம்பியனஷிப் பட்டம் வெல்லும் சிறந்த டிரைவருக்கான பட்டியலில் 313 புள்ளிகளுடன் முதலிடம் பிடித்தார். இரண்டாவது இடத்தில் மற்றொரு மெர்சிடஸ் அணி வீரர் லீவிஸ் ஹமில்டன் (280 புள்ளி) உள்ளார்.

இப்போட்டியில், ரெட் புல் ரேசிங் அணியின் மேக்ஸ் வெர்ஸ்டாபன் இரண்டாவது இடம் பிடித்தார். மூன்றாவது இடத்தை மெர்சிடஸ் அணியின் லீவிஸ் ஹமில்டன் வென்றார்.

போர்ஸ் இந்தியா அணி சார்பில் பங்கேற்ற பெரஸ், ஹல்கன்பர்க் முறையே 7, 8வது இடங்களை கைப்பற்றினர்.

# பயங்கரவாத தடைச்சட்டத்துக்கு பதிலான புதிய சட்டமூலம் இவ்வாரம் அமைச்சரவைக்கு வரும்

பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு பதிலான தயாரிக்கப்பட்டுள்ள புதிய சட்டமூலம் இவ்வாரம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது. சர்வதேச தரத்தில் தயாரிக்கப்பட்டுள்ள இச் சட்டமூலம் தற்போது அமைச்சரவை செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு ஆராயப்பட்டு வருகிறது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் சாகல ரட்நாயக்க முப்படைகளின் தளபதிகள், பாதுகாப்பு செயலாளர்,பொலிஸ்மா அதிபர் ஆகியோரின் ஆலோசனைகள் பெறப்பட்டு மேற்படி சட்டமூலம் தொடர்பான நகல் தயாரிக்கப்பட்டு அமைச்சரவை செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் கொண்டு வரப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டம் அரசியலமைப்பில் இருந்து நீக்கப்படும் என்றும் அதற்கு பதிலாக சர்வதேச தரப்பில் அமைந்த புதிய சட்டம் உருவாக்கப்படும் என்றும் ஐ.நாவிடமும் சர்வதேசத்திடமும் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர உறுதியளித்துள்ளார். (இ-7-10)

## மின்னுற்பத்தி குறைவடைந்தது மின்வெட்டு அமுல்படுத்தப்படாது

(கொழும்பு)

இலங்கையின் நீர் மின் உற்பத்தியின் அளவு குறைவடைந்து வருவதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

நாட்டில் நிலவும் வரட்சியுடனான காலநிலை காரணமாக, நீர் மின் உற்பத்தி நிலையங்களை அண்டிய நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் வெகுவாக குறைவடைந்துள்ளமையே இதற்கு காரணமென அந்த சபை சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, மின்னுற்பத்திக்கான செலவு அதிகரித்துள்ளதாக மின்சக்தி எரிசக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். இந்நிலையில் மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்துமாறு பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறெனினும் நாட்டில் மின்வெட்டை அமுல் படுத்தாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் மின்சக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

கேலிச்சித்திரம்




## அடுத்த வருடம் மார்ச் மாதம் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்

உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஒரு வருடத்துக்கும் மேலாக நடத்தப்படாமல் இழுத்தடிக்கப்படுகின்ற நிலையில் அதை அடுத்த வருடம் மார்ச் மாதம் நடத்துவதற்கான வாய்ப்புகள் அதிகம் இருக்கின்றன என்றும். அதற்கு ஏற்பவே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பிரதி அமைச்சர் அஜித்பி.பெரேரா தெரிவித்தார்.

இந்தத் தேர்தலை நடத்துவதற்குத் தடையாக இருக்கின்ற திருத்தங்கள் ஜனவரியில் மேற்கொள்ளப்பட்டு விடும் என்றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்.

ஒரு வருடத்தைக் கடந்தும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் இன்னும் நடத்தப்படாமல் உள்ளது. சில சட்ட சிக்கல்களே அதற்கு காரணம். இது தொடர்பில் 57 திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட வேண்டியுள்ளன. தேர்தல் திணைக்களமும் இதைச் சுட்டிக்காட்டியது.

நாடாளுமன்றில் இந்தத் திருத்தங்களை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் தற்போது இடம்பெறுகின்றன. அடுத்த வருடம் ஜனவரி மாதம் இந்தத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுமுடிந்துவிடும்.

மார்ச் மாதம் தேர்தலை நடத்த முடியும். அதற்கு ஏற்பவே இப்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றார். (இ-7-10)


# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி


## அமரர் சோமசேகரம் தர்சன்

மண்ணில் 23.01.1988

விண்ணில் 22.10.2015



காலமெல்லாம் அழுகின்றோம்
கண்ணான என்மகனே
உன்னை எண்ணி
பெற்றெடுத்த என் வயிறே
பெரு நெருப்பாய் எரியுதையா!
உன் பிரிவு தாங்காது உள்ளத்தால்
உருகுகின்றார் உன் தந்தை
இரக்கமற்ற இயமன் அவன் உன்
இதயத்தின் துடிப்பதனை
நிறுத்தினாலும்
எம் இறுதி மூச்சு
உள்ளவரை நாம் மறவோம்



உடையார் ஒழுங்கை
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(6164)

என்றும் உம் நினைவில்
தாய், தந்தை, அக்காமார்,
அத்தான்மார்.


# இராசி பலன்

11.10.2016
(புரட்டாதி 25, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு
தசமி மாலை 6.11 மணிவரை
திருவோணம் பிற்பகல் 4.46 மணிவரை
சுபநேரம் 10.32-12.02 மணிவரை
இராகுகாலம் 3.02-4.32 மணிவரை
கேதாரகௌரி விரதாரம்பம்,
விஜயதசமி

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் புனர்பூசம் இரவு 4.48 மணிக்கு கும்-சந் | | |
| | | | ராகு |
| செவ் | சனி | சுக் | குரு, சூரி புதன் |

**மீனம்** அதிர்ஷ்டகரமான நாள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், அம்பிகை வழிபாட்டால் ஆனந்தம் பெறுவீர்கள்.

**மேடம்** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், தொழில் ரீதியாக புதிய கூட்டாளிகள் வந்திணைவர்.

**இடபம்** செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம், மனக்குழப்பம் அகன்று மனதில் இனம் புரியாத சந்தோசம் குடிகொள்ளும்.

**மிதுனம்** ஆலய வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், பேச்சில் நிதானம் தேவை, தேவையற்ற செலவுகள் ஏற்படலாம்.

**கும்பம்** பசுமையான எண்ணங்கள் மனதில் தோன்றும், சுப செலவுகள் ஏற்படலாம், ஒரு காரியத்தை முடிக்க ஒரு முறைக்கு இருமுறை அலைய நேரிடலாம்.

**கடகம்** காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், உங்களின் கருத்துக்களை பலரும் கேட்டு நடக்க முன் வருவர், போசன சுகமுண்டு.

**மகரம்** வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், உடல்நலன் சீராகும், போசன சுகமுண்டு.

**சிம்மம்** வழிபாட்டின் மூலம் வளர்ச்சி காண வேண்டிய நாள், பழைய கடன்களை வசூலிக்க புதிய வழியைக் கையாள்வீர்கள், அரசியல்வாதிகளால் அனுகூலமுண்டு.

**தனுசு** மனதில் இருந்த பாரம் குறையும், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்** வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், பெரிய மனிதர்கள் வீடு தேடி வருவர், பாராட்டும் புகழும் கூடும் நாள்.

**துலாம்** பேச்சில் கனிவு பிறக்கும், வெளியூர் பயணங்கள் திருப்திகரமாக அமையும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்கள் கைகூடும்.

**கன்னி** பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், சுறுசுறுப்புடன் செயற்படுவீர்கள், போசன சுகமுண்டு.

# மயானத்தை அகற்றக்கோரி மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம்




புன்னாலைக்கட்டுவன் வடக்கு திடற்புல கிராமமக்கள் நேற்று திங்கட்கிழமை குடியிருப்புக்கு மத்தியிலுள்ள மயானத்தை அகற்றக்கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பாக தெரிய வருவதாவது,

நீண்டகாலமாக புன்னாலைக்கட்டுவன் வடக்கு திடற்புலம் ஒளிநிலா சனசமூக நிலையத்துக்கு அருகிலுள்ள சுற்றிவர குடியிருப்புக்கள் உள்ள காணியில் அப்பிரதேச மக்கள் தகனம் செய்யும் மயானம் அன்றி அயற் பிரதேச மக்களின் தகனம் செய்யும் மயானமாக இருந்து வந்துள்ளது.

இதனால் மயானத்தை சுற்றியுள்ள மக்கள் மிகவும் சுகாதார சீர்கேட்டுக்கு உள்ளாகியிருந்தனர்.

இதனால் இம்மயானத்தை அகற்றுவ தற்கு சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் 06.09.2016 அன்று நேரில் சென்று பார்வையிட்டதுடன் கிராமத்தின் மத்தியில் மயானம் அமைந்திருப்பதனால் சுகாதார சீர்கேட்டுக்கு கிராமம் உள்ளாகி வருவதனாலும் இம் மயானத்தை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதிமொழி கூறியதுடன் கடித மூலம் உறுதி கூறியுள்ளார்.

அதன்பிறகு கடந்த சில நாட்களுக்கு முன்பு வலி தெற்கு பிரதேசசபையால் மயான புனரமைப்பு வேலைகளுக்காக மயானத்தில் மணல், சல்லி என்பன பறிக்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இதனை தடுத்து நிறுத்திய அப்பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டதோடு உடுவில் பிரதேச செயலகத்துக்கு முன்பாகவும் நின்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பிரதேச செயலாளரே தூங்காதேதூங்காதேபோன்ற கோஷங்கள் எழுப்பியவாறு பிரதேச செயலக பிரதான நுழைவாயிலை வழிமறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் மக்கள் வெளியே செல்ல முடியாமல் சுமார் ஒரு மணி நேரம் காத்திருந்தனர். பின் னர் மாற்றுவழி திறந்து விடப்பட்டு அங்கு உள்ளே நின்றவர்களை வெளியே அனுப்பியுள்ளனர்.

இதனைக்கண்ட ஆர்ப்பாட்டம் செய்த மக்கள் அந்த நுழைவாயிலுக்கும் சென்று கதவை பூட்டி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் பிரதேச செயலகத்தால் சுன்னாகம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

இதனை தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் ஆர்ப்பாட்டத்தை அமைதி நிலைக்கு கொண்டு வந்ததுடன் உடுவில் பிரதேச செயலர் மு.நந்தகோபனிடம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்களின் முக்கியமான மூன்று பேரை அழைத்து கதைப்பதற்கு அனுமதித்ததுடன் இது தொடர்பாக வலி. தெற்கு பிரதேச சபையுடன் பேசுமாறு கூறி அனுப்பியதுடன் அங்கு நின்ற செய்தியாளர்களை உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை.

இதனால் வலி.தெற்கு பிரதேச சபைக்கு சென்ற மக்கள் பிரதேச சபை செயலாளர் சுதர்சனுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இதனைத்தொடர்ந்து பிரதேச சபை செயலாளர் தாம் மயானப்புனரமைப்பு வேலைகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அரசாங்க காணி என்பதனால் அத்துமீறி குடியிருப்புக்கள் வருவதனால் அதனை தடுப்பதற்காகவே சுற்றி மதில் கட்டுவதற்கே மணல் சல்லிகள் பறிக்கப்பட்டதாகவும் கூறியுள்ளதுடன் மயானத்தைப் பாவிக்கின்ற அயற்கிராம மக்கள் சார்பாக அப்பிரதேசத்திலுள்ள மூன்று பேரையும் ஒளிநிலா சனசமூக நிலையத்திலிருந்து மூன்று பேரையும் அழைத்து தீர்மானம் ஒன்றை எடுக்கவுள்ள தாகவும் இது தொடர்பாக தங்களுக்கு அறிவிப்பதாகவும் கூறி அனுப்பியுள்ளார்.

இதனைத்தொடர்ந்து ஆர்ப்பாட்டம் செய்த மக்கள் யாழ்ப்பாணமாவட்டம் செயலகத்துச் சென்று மாவட்ட செயலரிடம் மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளனர். (இ-78)

## வாழைவெட்டு இன்று

சரித்திரப் பிரசித்தி பெற்ற மாவிட்டபுரம் கந்தசாமி ஆலய முருகப் பெருமான், தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்திற்கு வருகை தந்து வாழை வெட்டும் நிகழ்வு இன்று இடம்பெறும். இந் நிகழ்வு மாலை 5.30 மணிக்கு இடம்பெறும் வியாக்கிர அசுர வதம் நிறைவு செய்து பின் இரவு 7 மணிக்கு மீண்டும் பெரு வீதியாக கோவிலை அடையும். (இ-3)

## வித்தியாரம்பம்

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் ஏடு தொடக்கும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறும்.காலை 8 மணி பூசையைத் தொடர்ந்து செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகனால் சிறார்களுக்கு ஏடு தொடக்கப்படும். (இ-3)

++++++++++++++

யாழ்ப்பாணம் சின்மயா மிஷனின் நவராத்திரி செயற்பாடுகளில் இன்று செவ்வாய்க்கிழமை விஜயதசமியை முன்னிட்டு முற்பகல் 10.30-12.00 மணி வரையான காலப் பகுதியில் குழந்தைகளுக்கான வித்தியாரம்பம் (ஏடு தொடக்கல்) மற்றும் சமஸ்கிருத அக்ஷர ஆரம்பம் என்பன சின்மய ஞானவேல் ஆச்சிரமத்தில் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்கிரத சைதன்யாவால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. அத்துடன் மாலை 5.30 மணிக்கு கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (இ-7-10)

## வயற்காணி பதிவு செய்தல்

வரணி வடக்கு விவசாய சம்மேளனத்தின் 2016/2017 கால போக நெற்செய்கை வயற்காணி பதிவு செய்யும் நடவடிக்கை எதிர்வரும் 13ம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு வரணி வடக்கு விநாயகர் சனசமூக நிலையத்தில் இடம் பெறும். பதிவினை மேற்கொள்வதற்கு கடவுச் சீட்டுக்குரிய புகைப் படம் இலங்கை வங்கி/மக்கள் வங்கி /தேசிய சேமிப்பு வங்கி இவற்றில் ஏதாவது ஒரு வங்கிக் கணக்கு புத்தக போட்டோ பிரதி-1 தேசிய அடையாள அட்டை போட்டோ பிரதி -1 , ஏக்கர் வரி கட்டிய பற்றுச் சீட்டு என்பவற்றுடன் வருகை தருமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி பதிவினை மேற்கொண்டு உரமானியத்திற்கான பணத்தைப் பெற்றுக் கொள்ளுமாறும் செயலாளர் க. தியாகராசா அறிவித்துள்ளார். (இ-3)

## சிவதொண்டன் வெளியீடு

யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையத்தினால்வெளியிடப்படும்சிவதொண்டன்மலர் -80வெளிவந்துள்ளது. (இ-3)

## கற்றல் உபகரணங்கள் பொலிஸாரால் வழங்கல்



சர்வதேச சிறுவர் தினத்தினை முன்னிட்டு நெல்லியடிப் பொலிஸாரினால் வதிரி பரமானந்தா ஆச்சிரமத்திலுள்ள மாணவர்களிற்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டுள் ளன. கடந்த 7 ஆம் திகதி நெல்லியடிப் பொலிஸ் பொறுப்பதிகாரி ஆர்.பி.ஏ. பிரியந்த தலைமையில் சென்ற சிறுவர் பராமரிப்பு பொலிஸ் உத்தியோகத்தர்கள் இவ் உபகரணங்களை வழங்கினர்.

அங்கிருந்து பாடசாலையில் கல்வி பயிலும் 45 மாணவர்களுக்கே இவ்வாறான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (இ-60)

## நான்கு பேர் கொண்ட கும்பல் இளைஞன் மீது துரத்தி வெட்டு

தும்பளைப் பகுதியில் வீதியால் சென்ற இளைஞன் ஒருவரை நான்கு பேர் கொண்ட கும்பல் துரத்தி வெட்டிய நிலையில் படுகாயங்களுக்குள்ளான இளைஞர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் தும்பளைப் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் தும்பளை கிழக்கு அரசடி வீதியைச் சேர்ந்த கனகரத்தினம் சுரேந்திரன் வயது - 36 என்பவரே படுகாயங்களுக்கு உள்ளானார்.

இது தொடர்பில் 5.30 மணியளவில் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம் அதே இடத்தைச்சேர்ந்த 22,24 வயதுடைய இருவரை தாம் கைது செய்ததாக தெரிவித்த பருத்தித்துறைப் பொலிஸார் இருவர் தலைமறைவாகி உள்ளதாகவும் தெரிவித்தனர். (இ-60)

## பொலிஸ் அதிகாரி நியமனம்

(கரணவாய்)

காங்கேசன்துறை பிராந்தியத்திற்கு பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகராக சி.ஏ.பி.ஜெயசுந்தர பொலிஸ்மா அதிபரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.



காங்கேசன்துறைப் பிராந்தியத்திற்கு பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகராக கடமையாற்றி வந்த ஏ.எம்.ஜஃபார் கொழும்பு தலைமையகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டதையடுத்து குருநாகல் மாவட்டத்தில் கடமையாற்றி வந்த சி.ஏ.பி.ஜெயசுந்தர கடந்த வாரத்தில் இருந்து காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகராக பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவினால் நியமிக்கப்பட்டுள்ளார். (இ-60)





வடக்கு மாகாண முதலமைச்சர் விருது மற்றும் யாழ். மாவட்ட கலாசாரப் பேரவையின் யாழ். முத்து ஆகிய விருதுகளைப் பெற்ற இலக்கிய அறிஞர் மட்டுவில் நா. நல்லதம்பியைப் பாராட்டும் வைபவம் நேற்று முன்தினம் மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயத்தில் சிறப்புற இடம்பெற்றது.

# நலம் நல்கும் நவராத்திரி விழா


இந்து மதம் பரந்த நோக்கோடு மனித வாழ்வை மேம்படுத்தத்தக்க வகையிலுள்ளது. ''முன்னைப் பழம் பொருட்கும்'' முன்னிப்பழமையாய் பின்னை புதுமைக்கும் புதுமையாக விளங்குகின்ற ஒரு வாழ்வியல் நெறியாகும். சமய வழியூடான சமய, சமூக விழாக்கள், விரதங்கள், பண்டிகைகளை வகுத்து சமூக கலாசார ஒன்றிணைப்பின் ஊடாக மகிழ்ச்சியான நல்வாழ்விற்கு வழிகாட்டுகின்றது. அந்த வகையிலே நவராத்திரி விழா பல்வேறு சமயத்தவரையும் கவர்ந்து ஈர்க்கின்ற ஒரு தொழில் நிறுவனங்கள், பொது நிறுவனங்கள், இல்லங்கள் என மக்களால் எங்கும் கொண்டாடப்படுகின்றது. நவராத்திரி வருடத்தில் நான்கு மாதங்களில் வருகின்றது. தை மாதத்து அமாவாசையை

நவராத்திரி காலத்தில் சக்தியை ஆவாகனம் பண்ணி கும்பம் வைத்தலுடன் நவராத்திரி ஆரம்பமானது.

முதல் மூன்று நாட்களும் கிரியா சக்தியான அன்னை துர்க்கைக்கும் அடுத்த மூன்று நாட்கள் இச்சா சக்தியாகிய திருமகளிற்கும் இறுதி மூன்று நாட்களும் ஞானா சக்தியாகிய கலைமகளையும் வழிபடுகின்றோம்.

இந்து சமய வழிபாட்டு முறைகள் இந்திய துணைக் கண்டத்தில் இந்தியாவை அடிப்படையாக வைத்து ஆரம்பமானவை. இது சமய, சமூக விழாவாக இருப்பதனால் வட இந்தியாவில் விழாக்கள் ஒரு விதமாகவும் தென்னிந்தியாவில் வேறுபட்டும் கொண்டாடப்படும். முதல் நாள் அம்பிகையை குமாரி வடிவமாக அலங்கரித்து மல்லிகை மலர் சூடி வெண் பொங்கல் படைத்து வணங்குதல்

றால் அலங்கரித்து எலுமிச்சை சாதம் படைத்து வழிபடலாம். 8 ஆம் நாள் அட்ட தேவிகளும் எழுந்தருளும் துர்க்கையாக றோஜாப் பூ, செந்நிறப் பூக்களால் அலங்கரித்து பாயாசம் படைத்து வழிபடலாம். 9 ஆம் நாள் சிவசக்தியாகவும் சுமத்திரா தேவி, காமேஸ்வரியாக உருவகித்து செந்தாமரை மலர்களால் அலங்கரித்து பால் சாதம் படையல் செய்யலாம். நவராத்திரி காலங்களில் செந்தாமரை, செவ்வலரி, றோஜா, செம்பகப் பூ, செம்பருத்திப் பூ, கதம்பம் பூ, மல்லிகைப்பூ, சம்பங்கி, மரிக் கொழுந்து, துளசி ஆகிய மலர்களால் ஆதிபராசக்தியின் வடிவான முத்தேவியரையும் வணங்கி வழிபடும் இச்சமய, சமூக விழாவின் போது தமிழர் கலை, பண்பாடு, கலாசாரம் ஆகியவற்




அடுத்துவரும் பிரதமை முதல் நவமி ஈறாக ஒன்பது நாட்களும் வரும் நாட்களை மகா நவராத்திரி என்று அழைப்பர். பங்குனி மாத வளர்பிறை முதல் வரும் ஒன்பது நாட்களும் வசந்த நவராத்திரி என்றும் ஆனி மாத வளர்பிறை பிரதமை முதல் வரும் ஒன்பது நாட்களும் ஆஷாட நவராத்திரி என்றும் புரட்டாதி மாதத்திலே வளர்பிறையை அடுத்து வரும் ஒன்பது நாட்களும் சாரதா நவராத்திரி என்றும் பத்தாம் நாள் விஜயதசமி என்றும் கொண்டாடுகின்றோம். சக்தி விரதங்களிலே நவராத்திரி விரதம் மிகவும் முக்கியத்துவம் உடையது. இந்த வருடம் நவராத்திரி விழா பதினொரு நாட்கள் வருகின்றன. அதற்கான காரண காரியங்களை நோக்குவோம்.

- சமய விழாக்கள்
- கிழமை, மாதம்
- நட்சத்திரம், திதி ஆகியவற்றை அடிப்படையாக வைத்து அனுஷ்டிக்கப்படுகின்றது.

அந்த வகையில் இவ்வருடம் புரட்டாதி மாதத்து பூர்வபட்ச பிரதமை அதாவது 01.10.2016 காலை 6 மணிக்கு ஆரம்பமாகியது. எனவே கும்பம் வைத்தல் நிகழ்வு காலை சூரிய உதயம் 6.05 இற்கு பின் ஆரம்பிக்கப்பட்டது. விஜயதசமி என்பது இரு காரியங்களுடன் தொடர்புபட்டது.

1) ஏடு தொடக்கலும் விஜயதசமி பூசையும்
2) மானம்பூ திருவிழா (மகிடாசுர சங்காரம்)

ஏடு தொடக்கல் மதியத்தின் முன் வருவது சிறந்ததாகவும் மானம் பூ திருவிழா பிற்பகல் 3 மணியளவிலும் முன்னிரவு வரை நடத்தப்படும். எனவே இன்று மாலை 6 மணிக்கு முன்பாக மகிடா சூரசங்காரம் இம்முறை செய்ய வேண்டும்.



வேண்டும். இரண்டாம் நாள் இராஜ இராஜேஸ்வரியாக மல்லிகை, துளசி மாலை சார்த்தியும் புளியோதரை படைக்கலாம். 3 ஆம் நாள் அம்பிகையை கல்யாணியாக உருவகித்து சம்பங்கி, மரிக்கொழுந்து மாலையால் அலங்கரித்து, சக்கரைப் பொங்கல் படைக்கலாம். 4 ஆம் நாள் ரோகினி தேவியாக உருவகித்து யாதி, மல்லிகை, முல்லை ஆகியவற்றால் அலங்கரித்து கதம்ப சாதம் படைத்து வழிபடலாம். 5 ஆம் நாள் காளி தேவியாக உருவகித்து பாரிபாத மலர்களால் அலங்கரித்து தயிர் சாதம் படைத்து வழிபடலாம். 6 ஆம் நாளில் சந்தியா தேவியாக உருவகித்து செம்பருத்திப்பூ, தேங்காய்ச் சாதம் படைத்து வழிபடலாம். 7 ஆம் நாளில் அன்னபூரணியாக மாதுளம் பூ, தாளம் பூ ஆகியவற்

றைப் பேணி பாதுகாத்து தங்கள் கலைகளை அரங்கேற்றுவர். மகிடாசூர சம்காரம். சாமுண்டி, சங்கரி, காளி, துர்க்கை போன்ற திருநாமம் பெறும் தேவியானவள் மகிடாசூரனை வதம் செய்ய மகிடாசூர வர்த்தினியாக துஷ்டரை அழித்து நல்வரம் அருள் துர்க்கையாகத் தமது மும்மூர்த்திகளின் சக்தியை ஒன்றிணைத்து எழுந்தருளி நமக்கு நல்லருள் புரிகிறாள்.

இவ்விரத விழா பற்றி தேவி புராணங்கள், மகாபாரதம், இராமாயணம் போன்றவற்றிலும் கூறப்பட்டுள்ளது. அதர்மம் அழித்து தர்மம் வென்று செழிக்க இறைவியை வேண்டுவோமாக.

திருச்செல்வம் நவரத்தினம்
சடையாளி, காரைநகர்.

## நவராத்திரி பாமாலை

இன்று விஜயதசமி



## நவராத்திரி நாயகிகள்

ஒன்பது இரவுகளுக்கும்
ஒளிமயமாய் விளக்கேற்றி
கும்பத்துடன் கொலுவைத்து
கும்பிட்டு நவதானியங்களுடன் கோலமிட்டு
நவராத்திரி நாயகிகளான
வீரத்தை தரும் துர்க்கைக்கு
முதல் மூன்று நாட்களும் விரதமிருந்து
செல்வத்தின் தாயாம் இலக்குமிக்கு
அடுத்து மூன்று நாட்களும் பூசை வைத்து
இறுதி மூன்று நாட்களும்
கல்வித் தெய்வம் சரஸ்வதியை
கனிவுடன் போற்றி வணங்கிடுவோம்
பத்தாம் நாள் விஜயதசமி
பல வித்தைகள் யாவும் பயின்று
பக்தியுடன் ஏடு தொடக்கி
பாடசாலை தோறும் கொண்டாடி மகிழ்ந்திடுவோம்.

பா.கலாதேவி–யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி.

## பதினாறு செல்வம் தருவாய்

பதினாறு செல்வம் தருவாய்
சிவசக்தி நீயே மூவுருக் கொண்டாய்
சரஸ்வதி, இலக்குமி, துர்க்கை ஆனாய்
தக்கனின் யாகத்தை அழித்தவள் நீயே
தரணியில் உன்னையே வேண்டுகின்றோமே
உம்பர் குறையை நீயே போக்கி
உத்தம ஞானத்தை எமக்களித்தாயே
பத்து நாட்கள் உன் விரதம் கொண்டால்
பதினாறு செல்வமும் எமக்கருளாயோ.

ஆ. தேனுஜா –ஆவரங்கால்.

## நான்முகனின் நாயகியே!

நாமகளே நல்லணங்கே நான்முகனின் நாயகியே
தாமரை மீதமரும் தாயவளே–தேமதுரம்
யாழிசைத்து பண்ணோடு பாமாலை சூட என்
நாவில் உறைவாய் நயந்து
ஆயகலைகள் அறுபத்து நான்கையும்
அருளுகின்ற அம்மையே அகிலாண்டேஸ்வரியே
தாயவளாய் நின்றெம்மை தாங்கி நிற்கும்
தயாபரியே சரஸ்வதி தாயே
நாயகனாய்த் தோன்றி ஞாலத்தை படைத்த
நம் பெருமான் நாதனாம் நான்முகனின்
நாயகியே நாமகளே நாமும்மையே நம்பித்
துதிக்கின்றோம் நல்லருள் தருவாயே.

வே.இராமர் –மாதகல், நாவற்குழி

## நானிலம் போற்றும் நாமகள்

நானிலம் போற்றும் நாமகளே
நான்முகன் துணைவியே.
கல்லாத விடயம் தனை கற்கவைத்தாய்
எல்லையில்லா ஆனந்தத்தில் மூழ்க வைத்தாய்
செல்லுமிடமெல்லாம் புகழும் தந்தாய்
செங்கதிர் போல் வாழ்வில் ஒளியும் தந்தாய்
ஊமைதனை பேசவைத்தாய்
உலகமே உன் புகழை அறிய வைத்தாய்.

நி.சிந்துஜா–அளவெட்டி

# எந்தத் தடைகள் ஏற்பட்டாலும் அரசு தமிழ் மக்களை கைவிடாது



## கிளிநொச்சியில் அமைச்சர் சுவாமிநாதன் திட்டவட்டம்

தமிழ் மக்களுக்கு தேவையானவற்றை இந்த அரசு மேற்கொண்டு வருகிறது. இதன்போது பல்வேறு தடைகள் அரசியல் ரீதியாக ஏற்படுகின்றன. இருந்தும் அரசு ஒரு போதும் தமிழ் மக்களை கைவிடாது என மீள்குடியேற்ற, புனர்வாழ்வு சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, இந்து சமய விவகார அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.




யுத்த காலத்தில் வங்கி ஆவணங்களை தொலைத்த தமது வாடிக்கையாளர்கள் 54 பேருக்கு அதனை வழங்கி வைக்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

யோகர் சுவாமிகள் தன்னுடைய காலத்திலேயே கூறியிருக்கின்றார் தமிழ் மக்கள் சிங்கள மக்களின் அட்டூழியங்களுக்கு உட்படுவார்கள் என்றும் தமிழ் மக்கள் சிங்கள மக்களுக்கு அடிமைப்பட்டு வாழும் சந்தர்ப்பம் ஏற்படும். தமிழ் மக்கள் அடிவாங்குவார்கள் என்றும் அவர் கூறியிருந்தார். அவர் சொன்னது போல தமிழ் மக்கள் கொடூரமான போரை சந்தித்து எல்லாவற்றையும் அனுபவித்து விட்டார்கள்.

ஆனாலும் தமிழ் மக்கள் தங்களுடைய மரபு,மொழி, பண்பாடு, கலாசாரம், கருத்துக்கள் என்பன பேணி வாழ்ந்து வருகிறார்கள். இது உண்மையான பெருமைக்குரிய விடயம். வடக்கு மாகாணம் வேகமாக வளர்ச்சிப்பெற்று வருகிறது. இன்னும் நான்கு அல்லது ஐந்து வருடங்களில் இந்த மாவட்டங்கள் முன்னேற்றம் அடையும். அதற்கு எங்களுடைய அரசு முன்வந்திருக்கிறது.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் இருவரும் சேர்ந்து தமிழ் மக்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளை முன்வந்து செய்து வருகின்றார்கள் என்பதனை நான் கூற விரும்புகின்றேன். அதனை தமிழ் மக்கள் மறுக்க முடியாது. இன்று ஜனாதிபதி ஜனாதிபதியாக இருப்பதற்குக் காரணம் தமிழ் மக்களின் வாக்குகளே. ஆதலினால் அவர்கள் ஒருபோதும் தமிழ் மக்களை கைவிடமாட்டார்கள். எங்களுடைய அரசாங்கம் ஒருபோதும் தமிழ் மக்களை கைவிடமாட்டார்கள் என்பதை நான் உறுதியாகக் கூற விரும்புகிறேன். இவ்வாறு நாங்கள் முற்போக்காக எங்களுடைய வேலைகளை செய்யும் போது பல தடைகள் இருக்கின்றன. அவை அரசியல் ரீதியான தடைகளாக இருக்கின்றன.

முப்பது வருடங்களாக யுத்தத்தால் அழிவடைந்த தமிழ் மக்களின் வாழ்க்கையை கட்டியெழுப்ப வேண்டும் என்பதற்காக அரசாங்கம் தங்களுடைய கடமையைச் செய்ய முன்வந்திருக்கிறது.

அதற்காக தமிழ் மக்கள் இந்த அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். அரசு பிழை செய்தால் அதனை மக்கள் தாராளமாகக் கூறலாம். ஆனால் அபிவிருத்திப் பணிகளைச் செய்ய முன்னும் செய்கின்ற போதும் அதனை எதிர்க்கிறதை நாம் ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்பதனை நான் கூற விரும்புகிறேன்.

தமிழர்கள் வாழ வேண்டும் என்றால் சமுதாயம் முன்னேற வேண்டும். அதற்காக நாங்கள் எங்கள் கடமையைச் செய்கின்றோம் என்பதுதான் எமது கருத்து. இதற்கு அரசியல் வேறுபாடு இருக்கக் கூடாது. எந்தக் கட்சியாக இருந்தாலும் சமுதாய முன்னேற்றத்திற்காக உழைக்கின்றவர்களை நாம் ஆதரிப்போம் என்றும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் தேசிய சேமிப்பு வங்கியின் தலைவர் அஸ்வின் டி சில்வா, முகாமையாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-312)

# ஈழத்தின் சைவத் தமிழர்களின் மரபுரிமைகளை பாதுகாக்கும் சிவசேனை அமைப்பு அங்குரார்ப்பணம்



ஈழத்தின் சைவத் தமிழர்களின் மரபுரிமைகளை பாதுகாக்கும் வகையில் "சிவசேனை அமைப்பின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வவுனியா வேப்பம் குளம் வைரவர் ஆலய மகா மண்டபத்தில் நடைபெற்றது.

வடக்கு கிழக்கு மலையகம் என சகல சிவ மாவட்டங்களிலிருந்தும் கலந்து கொண்ட நூற்றுக்கு மேற்பட்ட செயற்பட்டாளர்கள் கூடி இந்த செயற்பாட்டு அமைப்பை உருவாக்கியுள்ளனர்.

இந்த அமைப்பின் இணைத்தலைமை ஒருங்கிணைப்பாளர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவத்திரு யோகேசுவரன், சைவத்தின் வீர முரசு மறவன்புலவு சச்சிதானந்தன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் குருபீடாதிபதியாக தென் கையிலை ஆதீனம், இணைப்புச்செயலாளராக அடிகளாரின் சீடன் சிவத்திரு கோடீசுவரன் தெரிவு செய்யப்பட்டதுடன் தலைமைத்தொடர்பு நிலையமாக திருகோணமலை கன்னியா வில் அமைந்துள்ள தென்கையிலை ஆதீனம் இயங்குவது எனவும் முடிவெடுக்கப்பட்டது.

மேலும் 5 சிவப்பிராந்தியங்களுக்கும் 9 சிவ மாவட்டங்களுக்கான அமைப்பாளர்கள் தெரிவு செய்யப்பட்ட நிலையில் ஏனைய மாவட்டங்களுக்கும் பிரதேச மட்ட துணை அமைப்பாளர்களும் கிராமிய மட்ட இணைப்பாளர்களும் கார்த்திகை மாதத்துக்குள் தேர்வு செய்வது எனவும் முடிவு எடுக்கப்பட்டது.

இந்த அங்குரார்ப்பண நிகழ்வில் ஆதீனம், நாடாளுமன்ற, மாகாண சபை உறுப்பினர்கள், சைவ அமைப்புக்களின் தலைவர்கள், சிவதொண்டர்கள்,வைத்திய கலாநிதிகள், கல்விப் புலம் சார்ந்தோர், ஊடகவியலாளர்கள், விவசாயிகள், வர்த்தகர்கள், அரச, அரச சார்பற்ற உத்தியோகத்தர்கள் , தொழிற் சங்கப் பிரதிநிதிகள் என பல தரப்பட்டோரும் கலந்து கொண்டு பல்வேறு கோணங்களில் தாங்கள் கருத்துப் பகிர்வுகளை முன் வைத்தனர்

நிறைவாக சைவத் தமிழர்கள் எதிர்நோக்கும் சவால்களில் விட்டுக் கொடுப்பற்ற வகையில் செயற்றிட்டங்களை முன்னெடுப்பது எனவும் உரிமைக்குரலை கல்வி, நிர்வாகம், அரசியல் என அனைத்து தளங்களிலும் ஒலிப்பது எனவும் ஏகமனதாக உறுதிப் பிரமாணம் எடுத்துக் கொள்ளப்பட்டது. (2-9)

ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவிலுள்ள

# 7 கிராம அலுவலர் பிரிவுகளுக்கு நிரந்தர கிராம அலுவலர்கள் நியமிக்கப்படவில்லை

## பாதிக்கப்பட்ட மக்கள் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவிலுள்ள 27 கிராம அலுவலர் பிரிவுகளில் 7 கிராம அலுவலர் பிரிவுகளுக்கு நிரந்தர கிராம அலுவலர்கள் இல்லாது இருப்பதுடன் நிரந்தர கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரும் (RDO) நியமிக்கப்படாதுள்ளதால் தமக்கான தேவைகளை நிறைவேற்றுவதற்கு தமது பகுதிக்குரிய பதில் கடமையாற்றும் அலுவலர்களைத் தேடி அலையும் நிலை காணப்படுவதாக மேற்படி பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். இது தொடர்பில் தெரிய வருவதாவது,

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவில் இடப்பெயர்வின் பின்னரான மக்கள் மீள்குடியேற்றத்தின்போது இங்குள்ள 27 கிராம அலுவலர் பிரிவுகளிலும் தமிழ் குடும்பங்கள் 5 ஆயிரத்து தொளாயிரத்தைச் சேர்ந்த 19 ஆயிரத்து 274 அங்கத்தவர்களும் 41 முஸ்லிம் குடும்பங்களைச் சேர்ந்த 121 அங்கத்தவர்களும் ஏழு சிங்களக் குடும்பங்களைச் சேர்ந்த 20 அங்கத்தவர்களுமாக மொத்தம் 5 ஆயிரத்து தொளாயிரத்து 61 குடும்பங்களைச் சேர்ந்த 19 ஆயிரத்து 415 அங்கத்தவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் 7 நிரந்தர கிராம அலுவலர் பிரிவுகளான பெரிய இத்திமடு, முத்து விநாயகர் புரம், பெரியகுளம், கூழாமுறிப்பு, ஒதியமலை, அம்பகாமம் ஆகிய ஏழு கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் நிரந்தர கிராம அலுவலர்கள் நியமிக்கப்படவில்லை.

இக்கிராம மக்களின் கடமைகளை அயல் கிராமங்களில் கடமையாற்றுகின்ற கிராம அலுவலர்களே பதில் கடமையாற்றி வருகின்றனர்.

இதேபோல் நிரந்தர கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமிக்கப்படாமையால் கிளிநொச்சி, பூநகரி பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் வாரத்தில் சில நாட்கள் பதில் கடமையாற்றி வருகின்றார்.

இவ்வாறான நிலையில் தமது அடிப்படைத் தேவைகள் தொடக்கம் வாழ்வாதார உதவித்திட்டங்கள், கிராம அபிவிருத்தித் திட்டங்கள், நுண்கடன் திட்டம் உட்பட பல்வேறு தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு தமது கிராமத்திற்கான பதில் கடமை புரியும் அலுவலர்களைத் தேடி அலைந்து திரிவதாக பாதிக்கப்பட்ட மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

எனவே மேற்படி விடயம் தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் கவனத்தில் எடுத்து தமது பகுதிக்கான நிரந்தர அலுவலர்களை நியமித்துத் தர நடவடிக்கை மேற்கொண்டு உதவ வேண்டுமென பாதிக்கப்பட்டுள்ள மேற்படி கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-15

# நிதிசேகரிக்கும் நடைபயணத்திற்கு கிளிநொச்சி மக்களும் நேசக்கரம்

காலி கராப்பிட்டிய பகுதியில் புற்றுநோய் வைத்தியசாலை அமைப்பதற்காக நாடு தழுவிய ரீதியில் நிதி சேகரிக்கும் நடைபயணம் கடந்த 5 ஆம் திகதி யாழ்ப் பாணம் பருத்தித்துறை பகுதியில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது .

இதன்பிரகாரம் ஐந்தாம் நாளான நேற்று இந்த ரயில் நடைப்பயண அணியினர் கிளிநொச்சி இயக்கச்சி சந்தியில் இருந்து இரணை மடு சந்தி வரையான நடை பயணத்தை இலங்கையின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் மஹேல ஜயவர்த்தன மற்றும் சமூகப் பிரதிநிதிகள் கலந்து கொண்டு அதிகாலையில் ஆரம்பித்தனர்.

கிளிநொச்சி இயக்கச்சியில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட இந்த நடைபயணம் ஏ-9 வீதியூடாக இயக்கச்சி, ஆனையிறவு, பரந்தன், கிளிநொச்சி நகர் ஊடாக இரணைமடு சந்தியை வந்தடைந்தது.

இந்த நடைபயண அணியினர் காலை 8.30 மணியளவில் கிளிநொச்சி கரடிப் போக்கு சந்தியை வந்தடைந்தபோது கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம்சிறிதரன், பாடசாலை மாணவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டு வரவேற்பு அளித்ததுடன் அந்த வைத்தியசாலை அமைப்பதற்கான நிதியுதவியும் வழங்கி நடைபயணத்திலும் கலந்து கொண்டார்கள்.

இதில் கலந்து கொண்ட தமிழ்த்தேசிய நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் இந்த மனிதநேயப் பணிக்கு இலங்கைத்தீவின் அனைத்து சமூகத்தினரும் திரண்டுள்ளது ஆரோக்கியமான ஒரு விடயமாக கருகின்றேன். இவ்வாறான ஒருங்கிணைந்த ஒற்றுமையான செயற்பாடுகள் நாட்டின் நல்லிணக்கத்திற்கு முன்மாதிரியான விடயமாக அமையும் என நம்புகின்றேன் என்று தெரிவித்தார். (2-3.12-15)





காலி கராப்பிட்டிய பகுதியில் புற்றுநோய் வைத்தியசாலை அமைப்பதற்கான நிதிசேகரிக்கும் மனிதநேய நடை பயணம் நேற்று அதிகாலை 5.30 மணியளவில் இயக்கச்சியில் இருந்து ஆரம்பமாகி காலை 8:30 மணியளவில் கிளிநொச்சி கரடிப்போக்கு சந்தியை வந்தடைந்தபோது...
(படங்கள்:-மல்லாவி, பரந்தன் செய்தியாளர்கள்)

# திடீரென ஏற்பட்ட தீயினால் வீடொன்று எரிந்து நாசம்



(முல்லைத்தீவு)

கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பூதன்வயல் கிராமத்தில் வீடொன்று திடீரென தீப்பற்றி எரிந்து முற்றாக நாசமானது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்றது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது, அடுப்பிற்கு மூட்டப்பட்டிருந்த தீவிபத்திற்கு காரணமாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்ற போதிலும் மேலதிக விசாரணைகளை முள்ளியவளை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

இதேவேளை வீடு எரிந்து நிர்க்கதியாக நிற்கும் குடும்பத்திற்குமுள்ளியவளைபொலிஸ் நிலையபொறுப்பதிகாரிரமேஷ் இரத்தினசிங்கம் அவசர மனிதாபிமான உதவிகளை செய்து கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-310)

# புளியங்குளம் இந்துக் கல்லூரியில் சரஸ்வதி சிலை நிர்மாணிக்கப்பட்டது



வவுனியா, புளியங்குளம் இந்துக்கல்லூரியில் சரஸ்வதி நிலை நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பாடசாலை அதிபர் தலைமையில் இந் நிகழ்வு இடம்பெற்றது.

தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) அமைப்பின் லண்டனைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவரின் நிதி உதவியில் அமைக்கப்பட்ட இந்த சரஸ்வதி சிலையை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற குழுக்களின்பிரதித்தலைவருமான செல்வம் அடைக்கல நாதன் திரைநீக்கம்செய்து வைத்தார்.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் செ.மயூரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கம், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-250)










தேசிய சேமிப்பு வங்கி கிளிநொச்சி கிளையில் யுத்த காலத்தின் போது நிலையான வைப்பில் இடப்பட்டு பணத்திற்கான வைப்புச் சான்றிதழ்களை தவறவிட்ட வாடிக்கையாளர்களுக்கு புதிய வைப்புச் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சி பாரதி விடுதியில் நடைபெற்றது. இதன் போது மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன், தேசிய சேமிப்பு வங்கியின் தலைவர் அஸ்வின் டி.சில்வா மற்றும் வங்கியின் பணிப்பாளர், பொது முகாமையாளர் எனப் பல தரப்பினர்களும் கலந்து கொண்டனர். (படங்கள்:-கிளிநொச்சி -1 செய்தியாளர்)

### திருமுறிகண்டி பிள்ளையார் ஆலயச் சுற்றாடலில்

# அனுமதியின்றி அரச சாராயத்தை விற்பனை செய்த நபர் கைதானார்

## தடயப் பொருட்கள் மீட்பு

(மல்லாவி)

மாங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட திருமுறிகண்டி பிள்ளையார் ஆலய புனித சுற்றாடல் பகுதிக்குள் அனுமதியின்றி அரச சாராயத்தை விற்பனை செய்த துவிச்சக்கரவண்டி திருத்தக உரிமையாளர் ஒருவரை தடயப் பொருட்களுடன் கைது செய்துள்ளதாக மாங்குளம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

ஏ-9 வீதி திருமுறிகண்டி பிள்ளையார் ஆலய புனித பிரதேசத்தினுள் துவிச்சக்கர வண்டி திருத்தகம் ஒன்றினுள் வைத்து கடந்த மூன்று மாதங்களுக்கு மேல் அரச சாராயம் அனுமதியின்றி விற்பனை செய்யப்படுவதாக மாங்குளம் பொலிஸ் நிலையத்தின் 021 206 0003 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக பொதுமகன் ஒருவர் வழங்கிய தகவலையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த மாங்குளம் பொலிஸார் 250 மில்லி லீற்றர் கொண்ட 16 சாராயப் போத்தல்களையும் சந்தேகத்தின் பேரில் அதன் உரிமையாளரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதன் போது மாங்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மாலின் பெரேரா தலைமையிலான பொலிஸ் கொஸ்தாபல்களான மகிந்த (51601), சமரஜீவ (21688), நிசங்க (6711), பொலிஸ்கொஸ்தாபல் (சாரதி)சஜந்தன் (89789) ஆகியோர் அடங்கிய பொலிஸ் அணியினர் சுற்றிவளைப்பை மேற்கொண்டிருந்தனர்.

கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருளையும் கைது செய்யப்பட்ட சந்தேக நபரையும் விசாரணைகளின் பின்னர் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளதாக மாங்கும் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# வவு.நகரசபை செயலாளர் வெற்றிடத்தை நிரப்புங்கள்

### வரியிறுப்பாளர் சங்கம், வர்த்தக சங்கம் இணைந்து கோரிக்கை

வவுனியா நகரசபைக்கு காணப்பட்டு வரும் செயலாளர் வெற்றிடத்திற்கு அனுபவமும் செயற்றிறனும் உள்ள செயலாளரொருவரை நியமிக்குமாறு வவுனியா நகர வரியிறுப்பாளர் சங்கமும் வர்த்தகர் சங்கமும் இணைந்து வடக்குமாகாண முதலமைச்சரிடம் கோரிக்கை விடுக்கவுள்ளன.

வவுனியா வாடி வீட்டில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வரியிறுப்பாளர் சங்கத்திற்கும் வர்த்தகர் சங்கத்திற்கும் இடையிலான சந்திப்பின்போதே இவ் இணக்கப்பாடு எட்டப்பட்டு கோரிக்கை விடவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வவுனியா நகரசபையின் செயலாளர் யாழ்ப்பாணம் உள்ளூராட்சி திணைக்களத்திற்கு மாற்றப்பட்டதையடுத்து நகரசபையின் செயலாளர் வெற்றிடம் காணப்பட்டு வருகின்றது. இதன் காரணமாக நகரசபையின் செயற்பாடுகளில் மந்த நிலை காணப்பட்டு வரும் நிலையிலேயே இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் வடக்கு மாகாண முதலமைச்சருக்கு அனுபவமும் செயற்றிறனும் உள்ள செயலாளரொருவரை நியமிக்குமாறு கோரிக்கை விடுவது என தீர்மானிக்கப்பட்டுள்ளது. (2-250)

### தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை-2016 பெறுபேறுகள்

2016 ஆம் ஆண்டிற்கான தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வவுனியா மாவட்டத்தில் சித்தியடைந்த மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு,

வவு.சேனைப்புலவு உமையாள் வித்தியாலயம்

ஜெ. செந்தீபன் -180, கோ. ஜதுர்சன்- 156, ஜோ. திலக்சன் -158, அ. சேரிக்கா -155, ச. மயூரி 152. (2-250)

# வட மாகாணத்தில் 54 ஆயிரத்து 532 பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள்

(பரந்தன்)

வடக்கு மாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களிலும் 54 ஆயிரத்து 532 பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் இருப்பதாக யாழ்.மகளிர் அபிவிருத்தி நிலையம் மேற்கொண்டுள்ள புள்ளி விபர கணிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் யாழ்ப்பாணத்தில் 29ஆயிரத்து 378 குடும்பங்களும் வவுனியா மாவட்டத்தில் 5 ஆயிரத்து 802 குடும்பங்களும், மன்னார் மாவட்டத்தில் 6 ஆயிரத்து 388 குடும்பங்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 6 ஆயிரத்து 294 குடும்பங்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் 6ஆயிரத்து 170 குடும்பங்களும் காணப்படுவதாக குறித்த புள்ளி விபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது

வடக்கு மாகாணத்தில் உள்ள பிரதேச செயலகங்களில் பெறப்பட்ட தரவுகளை ஆதாரமாக கொண்டு மேற்படி ஆய்வுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக மகளிர் அபிவிருத்தி நிலையம் குறிப்பிட்டுள்ளது. (2-312)

### புறாக்களை களவாட முயன்ற

# சிறுவர்கள் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைப்பு

(கிளிநொச்சி-1)

கிளிநொச்சி பகுதியில் நேற்று முன்தினமிரவு 10 மணியளவில் வளர்ப்பு புறாக்களை களவாடுவதற்கு முயற்சிசெய்த மூன்று 14 வயதுடைய சிறுவர்கள் சம்பவ இடத்தில் பிடிக்கப்பட்டு கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

இச் சிறுவர்கள் மூவரும் நேற்றுக் காலை கிளிநொச்சி நீதிமன்ற நீதவான் ஏ.ஏ ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது இவர்களை அச்சுவேலி யாழ்ப்பாணத்திலுள்ள சிறுவர் சீர்திருத்தப் பள்ளியில் இணைக்குமாறும் இவர்களின் பெற்றோரை நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறும் நீதவான் பொலிஸார், சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள் ஆகியோருக்கு பணித்தார்.

இதே நேரம் நேற்று முன்தினமிரவு பரந்தன் பகுதியில் இருந்து வெள்ளவத்தை கொழும்பிற்கு வேலைக்காக அழைத்து செல்வதற்கு ஆயத்த நிலையில் இருந்த நான்கு சிறுவர்கள் கிளிநொச்சி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் இவர்களை அச்சுவேலி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சீர்திருத்தப் பள்ளியில் இணைக்குமாறும் பெற்றோரை நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறும் நீதவான் பொலிஸாருக்கும் சிறுவர் நன்னடத்தை அதிகாரிகளுக்கும் ஏ.ஏ. ஆனந்தராஜா உத்தரவிட்டார். (2-277)



தமிழீழ விடுதலை இயக்கத்தின் விசுவமடு பிரதேசத்திற்கான அலுவலகம் நேற்று முன்தினம் முற்பகல் 11 மணிக்கு 12ஆம் கட்டை விசுவமடுவில் கட்சியின் தலைவரும், பாராளுமன்ற குழுக்களின் பிரதி தலைவரும், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதனினால் திறந்து வைக்கப்பட்டது. (படம்:-வற்றாப்பளை செய்தியாளர்)

# மேற்குலகின் நண்பனாகும் வாய்ப்பை போரை நடத்தியதால் இழந்தேன்

## மகிந்த ராஜபக்ஷ கூறுகிறார்



(கொழும்பு)

**நான் யுத்தத்தை இடை நிறுத்தியிருந்தால் மேற்குலகம் என்னுடைய நண்பனாக இருந்திருக்கும் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

ஆங்கில ஊடகமொன்றுக்கு அளித்த விசேட செவ்வியிலேயே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார்

யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது யுத்தத்தை நிறுத்துமாறு சில மேற்கு நாடுகள் என்னிடம் வலியுறுத்தின. ஆனால் நான் அதனை நிராகரித்து விட்டேன்.

அதனால் தான் மேற்கு நாடுகள் என்னுடன் சிக்கலுக்குள்ளாகின.

அந்த வலியுறுத்தலை கேட்டு நான் யுத்தத்தை நிறுத்தியிருந்தால் மேற்குலகம் என்னுடைய நண்பனாக இருந்திருக்கும் என்று அவர் தெரிவித்துள்ளார். (இ-7-10)

## திட்டமிட்ட தீ விபத்து

### அரச இரசாயன பகுப்பாய்வு அறிக்கை உறுதிப்படுத்தல்



எப்பாவல, அரச பொஸ்பேட் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்து இயற்கையானது அல்ல என்று அரச இரசாயன பகுப்பாய்வு அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஏதாவது ஒரு வகையான எரிபொருள் பயன்படுத்தப்பட்டதன் மூலம் இந்த தீ ஏற்படுத்தப்பட்டுள்ளதாக, அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்தின் மேலதிக பகுப்பாய்வாளர் ஆரியநந்த வெலியங்கேவினால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் இந்த விடயம் தெரிய வந்துள்ளது.

கடந்த ஜுன் மாதம் 21 ஆம் திகதி எப்பாவல, அரச பொஸ்பேட் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தினால், விநியோக பிரிவு, கணக்காய்வு பிரிவு மற்றும் ஆவண காப்பகங்கள் மற்றும் ஊழியர் ஓய்வுப்பகுதி என்பன முழுமையாக எரிந்து நாசமாகின.

நிறுவனத்தின் முக்கியமான பல ஆவணங்கள் அழிவடைந்த இந்த தீ விபத்து தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு தம்புத்தேகம நீதவான் நீதிமன்றம் அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்திற்கு உத்தரவிட்டிருந்தது.

அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள இவ் அறிக்கையின் படி, எப்பாவல, அரச பொஸ்பேட் நிறுவனத்தில் இடம்பெற்றுள்ளதாக கூறப்படும் நிதி மோசடிகளை மறைப்பதற்காக யாராவது ஒரு தனிநபர் அல்லது குழுவினரால் குறித்த ஆவணங்களை அழிக்கும் நோக்கில் இந்த சம்பவம் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என்று அநுராதபுரம் வலய குற்றப் புலனாய்வு பிரிவினர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

தீப்பரவல் சம்பவம் தொடர்பாக நிறுவனத்தின் ஊழியர்கள் பலரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதுடன், தொடர்புடைய சந்தேக நபர்களை கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகள் அநுராதபுரம் வலய குற்றப் புலனாய்வு பிரிவினரால் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7-10)

## மருந்துப் பொருட்கள் உற்பத்தி; ரஷ்யாவும் இந்தியாவும் முதலீடு

(கொழும்பு)


இரண்டு வெளிநாட்டு நிறுவனங்கள் இலங்கையில் மருந்துப் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை நிறுவவுள்ளன. 10 மில்லியன் டொலர் பெறுமதியான இந்த இரண்டு திட்டங்களிலும், ரஷ்யா மற்றும் இந்திய நிறுவனங்கள் முதலீடு செய்யவுள்ளன.

இலங்கையின் தேவையை ஈடுசெய்யும் மருந்துப் பொருட்கள் மற்றும் மருந்துவத் தேவைக்கான பொருட்களை உற்பத்தி செய்யும் இந்த தொழிற்சாலைகளை நிறுவும் உடன்பாட்டில் ரஷ்ய மற்றும் இந்திய நிறுவனங்கள் அதிகாரிகளுடன் உடன்பாடு செய்துள்ளனர்.

இலங்கையில் மருந்து உற்பத்தித் துறையில் முதலீடுகளை மேற்கொள்ள 28 உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் விருப்பம் தெரிவித்துள்ளதாக இலங்கையின் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அவற்றில் ரஷ்யா, இந்தியா, இஸ்ரேல் நிறுவனங்களும் அடங்கும் என்றும், இந்த நிறுவனங்கள் ஆயுர்வேத மருந்துகளையும் உற்பத்தி செய்து இலங்கையின் தேவையை ஈடு செய்து கொண்டு மிகுதியை ஏற்றுமதி செய்யவிருப்பதாக அரச மருந்துக் கூட்டுத்தாபன தலைவர் சயுர சமரசுந்தர தெரிவித்துள்ளார். (இ-7-10)

## ஆஷூரா நோன்பு



இஸ்லாமிய மார்க்கத்தில் மிகவும் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ள புனித ரம்ழானை அடுத்து (இரண்டாவது இடத்தை இஸ்லாமிய வருடக் கணிப்பில் முதலாவது மாதமான முஹர்ரம் மாதம் பெறுகிறது. அல்குர் ஆன் அருளப்பட்ட ஆரம்பித்த மாதமான ரம்ழான் மாதத்தில் நோன்பு நோற்பதை இறைவன் முஸ்லிம்களுக்குக் கட்டாயமாக்கியுள்ளார். என்றாலும் முஹம்மது (ஸல்) அவர்கள் ரம்ழான் மாத நோன்புக் கடமையை நிறைவேற்றுவதன் மூலம் அடைந்து கொள்கின்ற நன்மைகளுக்கு மேலதிகமான நன்மைகளை அல்லாஹ்விடம் பெற்றுக்கொள்ளும் நோக்கில் உபரியான (ஸுன்னத்) நோன்புகளை ரம்ழான் மாதம் தவிர்ந்த இதர மாதங்களில் நோற்றுள்ளார்கள். அவ்வாறு நோற்றப்பட்டதும் நோற்றப்பட ஊக்குவிக்கப்பட்டதுமான நோன்புகளில் ஆஷூரா நோன்பும் அடங்கும். முஹர்ரம் மாதத்தின் பத்தாம் நாள் நோற்கப்படுவதே ஆஷூரா நோன்பு. இது கட்டாயக் கடமையல்ல. ஆனால் அல்லாஹ்விடம் அதிக நன்மைகளைப் பெற்றுத் தரக் கூடியது. இஸ்லாத்துக்கு முன்னர் யூதர்களும் கிறிஸ்தவர்களும் இத்தினத்தில் நோன்பு நோற்கக்கூடியவர்களாக இருந்துள்ளனர்.

மக்காவைத் துறந்து மதீனாவுக்கு முஹம்மது நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் சென்ற சமயம் இத்தினத்தில் (முஹர்ரம் 10ஆம் நாள்) யூதர்கள் நோன்பு நோற்பதைக் கண்டார்கள். அதற்கான காரணத்தை யூதர்களிடம் வினவிய போது பிர் அவ்னையும் அவனது கூட்டத்தையும் (நைல் நதியில்) மூழ்கடித்து மூஸா (அலை) அவர்களையும் அவர்களது கூட்டத்தினரையும் காப்பாற்றி அல்லாஹ் தஆலா கண்ணியப்படுத்திய தினம் இது. அதனால் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்த மூஸா (அலை) அவர்கள் இத்தினத்தில் நோன்பு நோற்றார்கள். அதனால் நாங்களும் இத்தினத்தில் நோன்பு நோற்கிறோம் என்றார்கள்.

அப்போது முஹம்மது (ஸல்) அவர்கள் மூஸா (அலை) அவர்களைக் கண்ணியப்படுத்துவதற்கு உங்களை விடவும் நாங்களே சிறந்தவர்கள் என்று கூறிவிட்டு ஸஹாபாக்களை நோக்கி முஹர்ரம் பத்தாம் நாள் நோன்பு நோற்குமாறு கூறினார்கள். அச்சமயம் ஸஹாபாக்கள் யூதர்களும் கிறிஸ்தவர்களும் இத்தினத்தில் நோன்பு நோற்று அதனை கண்ணியப்படுத்துகின்றனரே என்றனர். அப்போது முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ் நாடினால் அடுத்த வருடம் ஒன்பதாம் நாளும் நான் நோன்பு நோற்பேன் என்றார்கள். ஆனால் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் அடுத்த வருட (முஹர்ரம் மாதம்) வருவதற்குள் வபாத்தாகிவிட்டார்கள்.

எனவே முஹம்மது நபி (ஸல்) அவர்கள் நீங்கள் ஆஷூரா தினத்தில் (முஹர்ரம் பத்தாம் நாள்) நோன்பு பிடியுங்கள் அவர்களுக்கு மாறு செய்வதற்கு (யூதர்களது நோன்பிலிருந்து எமது நோன்பு வித்தியாசப்பட வேண்டும் என்பதற்காக முஹர்ரம் பத்தாம் நாளுக்கு முந்திய நாள் அல்லது பிந்திய நாளிலும் நோன்பு பிடியுங்கள் என்று கூறியதாகவும் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவித்துள்ளார்கள். ஆஷூரா தினத்தில் முஹர்ரம் 9, 10, 11 ஆம் தினங்களில் நோற்கப்படும் நோன்பு கடந்த வருடத்தில் செய்த சிறிய பாவங்களை அழித்துவிடும் என முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

இந்த முஹர்ரம் மாதத்தில் தான் முஸ்லிம்களின் மக்காவிலிருந்து மதீனா நோக்கிய, ஹிஜ்ரா பயணம் அன்னை அல்லாஹ் அழித்தமை, இப்ராஹிம் நபி அவர்களை அல்லாஹ் நெருப்பிலிருந்து பாதுகாத்தமை, கர்பலா யுத்தம் போன்ற பல இஸ்லாமிய நிகழ்வுகள் நடந்தேறியுள்ளன.

நபி மூஸா (அலை) அவர்களைக் கண்ணியப்படுத்திய அல்லாஹ்வை மேன்மைப்படுத்தி நன்றியுள்ளவர்களாக நடந்து கொள்ளவேண்டியது ஒவ்வொரு முஸ்லிமினதும் கடமையாகும். அதுவும் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் எதிர்வுகூறிய அந்த நாட்களில் குறிப்பிட்ட ஆஷூரா நோன்பை நோற்க வேண்டியது மிகப் பிரதானமாகும். இதனை ஒவ்வொரு முஸ்லிமும் அறிந்திருக்கவேண்டும்.

முஹம்மது (ஸல்) வழிகாட்டலில் நோன்பு நோற்போம்

**அல்ஹாஜ் மௌலவி ஏ.எம்.ஏ.அஸீஸ் (காஸிமி) யாழ்.கிளிநொச்சி மாவட்ட ஜம்மியத்துல் உலமா சபை, சர்வமத சபை தலைவர்**

# நீண்டகாலம் வாழ தண்ணீர் குடியுங்கள்



மனிதனோ அல்லது வேறு எந்த உயிரினமாவது ஒருநாளைக்குத் தண்ணீர் பருகாமல் வாழ்வது என்பது கடினமான விடயமாகும். மனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறைவிடத்திற்கு அப்பால் காற்று, நீர் என்பன மிகவும் அத்தியாவசியமாக விளங்குகின்றன. இந்த உலகு தண்ணீரால் சூழப்பட்டிருந்தாலும் இன்று தண்ணீர் தான் மனிதனுக்குப் பெரிய பிரச்சினையாக மாறிவிட்டது.

இன்றைய காலத்தில் குழந்தைகளும் சரி, பெரியவர்களும் சரி நீர் அருந்துவதை ஒரு பழக்கமாகக் கொள்வது மிகவும் அரிதாகி விட்டது. இதன் முக்கியத்துவம் அறியாமல் இருந்தால் நாம் சுகாதாரப் பாதிப்புகளுக்கு உள்ளாகின்றோம். எங்கள் வாழ்வில் நாம் இதைக் கடைப்பிடிக்கிறோமா?... என்றால் மிகக் குறைந்த தொகையினரே கடைப் பிடிக்கிறார்கள் எனக்கூறலாம்.

ஆனால் சிலர் நீர் குடிப்பதை ஒரு அன்றாட நிச்சயமான பழக்கத்திற்குக் கொண்டு வந்துள்ளனர். குறிப்பாகக் காலையில் எழுந்தவுடன் இரண்டு கிளாஸ் தண்ணீரும் இரவு படுக்கைக்குப் போகுமுன்னர் இரண்டு கிளாஸ் தண்ணீர் அருந்துதல் என்பது நமது உடலாரோக்கியத்திற்கு அத்தியாவசியமான ஒன்றாக விளங்குகின்றது. காரணம் உடலுக்கு மிகவும் அத்தியாவசியமான உணவும் தண்ணீரும் முக்கியத்துவம் பெறுகின்றன. உணவு இல்லாமல் மனிதன் நாலு ஐந்து நாட்கள் வாழலாம். ஆனால் தண்ணீர் குடியாமல் ஒரு நாள் வாழ்வதே முடியாத காரியமாகும். விரதம், நோன்பு இருப்பவர்கள்கூட சாப்பிடமாட்டார்களே தவிர ஒரு குறிப்பிட்ட நேரத்தின்பின் நீர் அருந்துவார்கள்.




நமது உடலில் எழுபது சதவீதம் தண்ணீர் இருக்கின்றது. ஒருவரது உடல்எடையில் எழுபது வீதம் தண்ணீர் தான். தண்ணீரானது உடல் இயக்கத்தின் செயற்பாட்டிற்கு உதவுகின்றது. உடலின் தட்ப-வெப்ப நிலையைச் சமன் செய்து பராமரிக்கின்றது. நாம் ஒவ்வொருவரும் உடலுக்குத் தேவையான தண்ணீரை எப்படிப் பயன்படுத்துகிறோம்.

அதாவது எவ்வளவு அருந்துகிறோம், எவ்வளவு வெளியேற்றுகிறோம் என்பது மிக முக்கியமானது. காலையில் எழுந்தவுடன் குறைந்தது இரண்டு கிளாஸ் தண்ணீர் குடிக்கவேண்டும். இதைப் பழக்கத்திற்குக் கொண்டுவருதல் வேண்டும். அது சிறுநீரகத்திற்கு மிகவும் நல்லது.

அத்துடன் காலைக்கடன்களை இலகுவாக முடிக்கக்கூடிய நிலையும் இயல்பாகவே வந்துவிடும். அதாவது மலச்சிக்கல் வராது என்பதும் உண்மையான விடயமாகும். சாப்பிடுவதற்கு முன்னர் தண்ணீர் குடிக்கக்கூடாது. சாப்பிடும்போது தேவைப்பட்டால் சிறிது அருந்தலாம். சாப்பிட்ட பிறகு சிறிது தண்ணீர் குடிக்கலாம். இரண்டு அல்லது மூன்று மணிநேரம் கழித்து நிறையத்தண்ணீர் குடிக்கவேண்டும். அதைத் தண்ணீராகத்தான் அருந்தவேண்டுமென்றில்லை. ஆரோக்கியமான பழச்சாறுகள் அருந்தலாம். ஆனால் தண்ணீர்தான் எல்லாவற்றிற்கும் சிறந்த பானமாகும். இதைப் பழக்கத்தில் ஏற்படுத்த வேண்டும்.

இன்றைய உலகம் வேகமாகச் சுழன்று கொண்டிருக்கின்றது. மனிதனின் வேலைகளும், தேடல்களும் பெருகியதால் அவசரம் நிறைந்த உலகமாக மாறிவிட்டது. இதனால் மனிதன் தண்ணீர், உணவு, சாப்பாடுகளைக்கூட நேரத்திற்கு உண்ணாமல், குடிக்காமல் பணத்தைச் சம்பாதித்துவிட்டு இறுதியில் நோயாளியாகி விரைவாகவே தனது ஆயுளை முடித்துக்கொள்ளும் நிலை தோற்றம் பெற்று வளர்ந்து வருவதை நாம் சிந்திக்கிறோமா? சற்று சிந்திக்க வேண்டும்.

இன்றைய போக்கில் அவசரமாக ஓடிக்கொண்டிருக்கும் மனிதன் தண்ணீர் குடிப்பதைக் கூட்டிக்கொள்ளல் வேண்டும். எவ்வளவு கூடுதலாகத் தண்ணீரைக் குடிக்கிறோமோ... அவ்வளவுக்கு நமது உடல் ஆரோக்கியம் பெறும். இனிக் குளிர்காலம் வெளிநாடுகளில் ஆரம்பமாகப்போகின்றன.

ஆகவே குளிரைக்கண்டு அஞ்ச வேண்டாம். தண்ணீர் குடிப்பதைக் குறைக்க வேண்டாம். நிறையவே குடித்துக் கொண்டே இருங்கள். எங்கே சென்றாலும் ஒரு தண்ணீர்ப் போத்தலை எடுத்துச் செல்லுங்கள். வேலைத் தலங்களிலும் ஏனைய தொழில்புரியும் காரியாலயங்களிலும் தண்ணீரை நன்றாகக் குடியுங்கள். நொறுக் குத்தீனி சாப்பிட வேண்டும் என்று விருப்பம் ஏற்பட்டால் முதலில் தண்ணீர் அருந்துங்கள். அப்பொழுது நொறுக் குத் தீனிகளைக் குறைவாக உண்ணலாம். இதனால் பல நோய்களையும் விரட்டலாம். ஆகவே எல்லாவற்றிற்கும் மருந்து இந்தத் தண்ணீர் ஒன்றுதான் என்பது உண்மையான விடயமாகும்.

ஆகவே நாம் வாழும் பூமியும் இன்று மனிதனால் மாசுபடுத்தி சுத்தம், சுகாதாரம் பேணப்படாமல் இருந்து வருகையில் நாம் குடிக்கும் தண்ணீரையும் மாசுபடுத்தி குடிநீருக்குக்கூட இந்த உலகம் அல்லப்படும் நிலை மிக விரைவில் வந்துவிடும் என ஆராய்ச்சியாளர்கள் அன்றாடம் தெரிவித்து வருகிறார்கள் என்பதை நம் மனங்களில் நிலை நிறுத்திடுவோம்.

எனவே நாம் நீண்டகாலம் வாழ்வதற்கு நல்ல ஆரோக்கியமான உணவுகள் மட்டுமல்ல நல்ல குடிநீரும் நமக்குத் தேவை. எனவே நீர் நிலைகளைப் பேணிப்பாதுகாக்க வேண்டும்.

எப்பொழுதும் நல்ல தண்ணீரைக் குடியுங்கோ!... குடித்துக்கொண்டே இருங்கள் தண்ணீரை!...

வ.சிவராசா-ஜேர்மனி

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ/து)
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி

## வெற்றுக் கான் விற்பனை

சங்கத்தில் வெற்று பிளாஸ்ரிக் கான் (20L) விற்பனைக்கு உண்டு. தேவையானோர் இதற்கான கூறு விலையினை 16.10.2016 இற்கு முன்னர் சமர்ப்பிக்கவும்.

தொடர்புகளுக்கு
021 222 2143
பொதுமுகாமையாளர்.
(இ-6066)

இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 4<br>கி.பா: 34 செவ் 1 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: கடை (சொந்தம்)<br>தொ.இ: B/768 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 4<br>கி.பா: 32.5 செவ் 12 இல்<br>உயரம்: 160cm<br>தகைமை/தொழில்: BA அபிவிருத்தி உத்தியோகத்தர் (அரச)<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் முக்கியம்<br>தொ.இ: G/3618 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 3<br>கி.பா: 28 சூரிசெவ் 12 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L<br>கனடா PR<br>தொ.இ: B/1773 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 3<br>கி.பா: 12.75<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: A/L வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/5370 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 2<br>கி.பா: 30 சூரிசெவ் 3 இல்<br>உயரம்: 5'6"<br>தொ.இ: B/1949 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 1<br>கி.பா: 13<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BA, HNDM<br>தொ.இ: G/2445 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 1<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: ILT வியாபார முகாமைத்துவம், சொந்தக் கம்பனி (ஹோட்டல் உரிமையாளர்)<br>தொ.இ: B/3671 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 3<br>கி.பா: 81 செவ் 8 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:BCA வாடிக்கையாளர் அனுசரணைப் பிரதிநிதி<br>தொ.இ: G/807 |

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005,021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதையும் அறியத்தருகின்றோம்)

## வடமராட்சியில்....

ஆங்கிலக் கல்விக்கு என தனித்துவமான ஒரே நிறுவனம்

## OXFORD ENGLISH ACADEMY

P.K. Lane, Point pedro.

**புதிய பிரிவுகள் ஆரம்பம் : 12.10.2016 (Wednesday)**

- A/L எடுத்தவர்களுக்கான விசேட ஆங்கில வகுப்புக்கள் - பிரிவு - II ஆரம்பம் : 12.10.2016 (5pm)
- 2016 ஆம் ஆண்டு O/L ஆங்கில பாடப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான விசேட பயிற்சி வகுப்பு (paper class) ஆரம்பம்: 12.10.2016 (4pm)

**By : B.Jothy**

அனுமதிக்கு முந்துங்கள் (C-6023) - நிர்வாகி

# 400 ஐ.எஸ். தீவிரவாதிகள் பிரிட்டனுக்குள் ஊடுருவல்

## அதிர்ச்சியில் பொதுமக்கள்

(டமாஸ்கஸ்)

**சிரியா மற்றும் ஈராக்கில் பயிற்சி பெற்ற 400 ஐ.எஸ் பயங்கரவாதிகள் பிரித்தானியாவுக்குள் ஊடுருவியுள்ளதாக வெளியான தகவல் பொதுமக்களிடையே கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.**

இதில் 14 பயங்கரவாதிகளை கைது செய்து நாட்டு நலன் கருதி சிறையில் அடைத்துள்ளதாக அரசு தெரிவித்திருந்தது.

இந்த விவகாரம் தொடர்பாக அப்போது விளக்கமளித்த அரசு, சிரியா மற்றும் ஈராக் நாட்டில் இருந்து ஆயுத பயிற்சி பெற்ற பிரித்தானியர்கள் 54 பேர் மட்டுமே ஊடுருவியுள்ளதாகவும் அவர்களில் 14 பேரை கைது செய்துள்ளதாகவும், எஞ்சிய நபர்களை வெகுவிரைவில் கைது செய்யும் நடவடிக்கை துரிதப்படுத்தப்படும் எனவும் உறுதி அளித்தனர்.

ஆனால், இந்த விவகாரம் தொடர்பாக அரசு தவறான தகவல்களை அளித்திருந்ததாக தற்போது உறுதிப் படுத்தப் பட்டுள்ளது.

இதுவரை ஈராக் மற்றும் சிரியாவில் ஆயுதப் பயிற்சிகள் மேற்கொண்ட 400 பயங்கரவாதிகள் தற்போது நாட்டுக்குள் ஊடுருவியுள்ளதாக உறுதியான தகவல்கள் வெளியாகி பொதுமக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பிட்ட பயங்கர வாதிகள் ஆயுதங்கள், வெடி குண்டுகள் மற்றும் பெரும் நாசத்தை விளைவிக்கும் திறமை பெற்றவர்கள் எனவும் பாரிஸ் மற்றும் பிரசல்ஸ் உள்ளிட்ட நகரங்களில் நடத்தப்பட்ட தாக்குதல்கள் போன்று பிரித்தானியாவிலும் நடத்த திட்டமிட்டுள்ளதாகவும் நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

உள்விவகாரத்துறை அமைச்சு பாராளுமன்றத்தில் குறிப்பிட்டுள்ளது போன்று இதுவரை 850 பிரித்தானியர்கள் ஐ.எஸ் அமைப்பில் இணைந்து போரிடச் சென்றுள்ளதாகவும், அதில் பெரும்பாலானவர்கள் யுத்தக்களத்திலும் ட்ரோன் தாக்குதல்களிலும் கொல்லப்பட்டுள்ளதாகவும் எஞ்சிய 400 பேர்



தற்போது பல கட்டங்களாக பிரித்தானியாவுக்குள் ஊடுருவியுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.


ஆனால் அமைச்சர்கள் இந்த எண்ணிக்கையை உறுதிப்படுத்த மறுத்துள்ளது மட்டுமின்றி தற்போது சிறையில் அடைபட்டுள்ள 14 பேர் மட்டுமே ஐ.எஸ் அமைப்பிற்காக ஈராக் மற்றும் சிரியாவில் போராடினர் என்றும் தெரிவித்துள்ளனர். (இ-7)

## போதைப்பொருள் குற்றம்

# 100 நாட்கள் ஆட்சியில் 3,700பேர் படுகொலை

## 26 ஆயிரம் பேர் அதிரடியாகக் கைது





பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி ரோட்ரிகோ டுடர்டியின் நூறு நாள் ஆட்சியில் இது வரை போதை மருந்து கடத்தல்காரர்கள், குற்றம் புரிவோர் என 3700 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

பிலிப்பைன்ஸ் நாட்டில் போதை மருந்தின் ஆதிக்கமும், அந்த பழக்கத்தில் ஈடுபடுவோர் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

metham phetamine என்னும் போதை வஸ்துவுக்கு அந்நாட்டில் 3.7 மிலலியன் மக்கள் அடிமையாகியுள்ளதாக அந்நாட்டு சுகாதாரத்துறை அறிக்கை கூறுகிறது.

இந்நிலையில் அந்நாட்டின் புதிய ஜனாதிபதியாக ரோட்ரிகோ டுடர்டி கடந்த மே மாதம் பதவியேற்றார்.

தேர்தல் பிரசாரத்தின் போது நாட்டில் குற்றங்களை குறைப்பேன், போதை மருந்து கடத்தலில் ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பேன் என உறுதியளித்திருந்தார்.

அதன்படி பிலிப்பைன்ஸ் நாட்டின் ஜனாதிபதியாக அவர் பதவி ஏற்றதிலிருந்தே போதை மருந்துகள் கடத்தும் ஆசாமிகளுக்கு மரண தண்டனையை அதிரடியாக வழங்கி வருகிறார்.

துப்பாக்கி சுடுதல் மூலம் ஒரு நாளைக்கு நாற்பது பேர் என தனது நூறு நாள் ஆட்சிக்குள் 3700 பேரை அந்நாட்டு பொலிஸார் கொன்று குவித்துள்ளனர்.

மேலும் இது சம்பந்தமாக 26 ஆயிரம் பேர் அதிரடியாக கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனிடையில் இது மனித உரிமை மீறல் என அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா பிலிப்பைன்ஸ் நாட்டு ஜனாதிபதிக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதற்குப் பதிலடி கொடுத்துள்ள ரோட்ரிகோ டுடர்டி எங்கள் நாட்டை அமெரிக்கா துச்சமாக மதிக்கிறது. அமெரிக்கா, பிலிப்பைன்ஸ் இடையில் உள்ள உறவை வெட்டி கொள்ள கூட நாங்கள் தயங்கமாட்டோம் என அவர் கூறியுள்ளார். (இ-7)




## எதியோப்பியாவில் வன்முறை அவசரநிலை பிரகடனம்



ஆபிரிக்க நாடான எதியோப்பியாவில் அரசுக்கு எதிராக பல்வேறு போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

தொடர் போராட்டங்கள் பல இடங்களில் வன்முறைச் சம்பவங்களாக மாறுவதால் பதற்றமான சூழல் நிலவி வருகிறது.

மக்கள் வீதிகளில் திரண்டு போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். குறிப்பாக ஒரோமியா பகுதியில் அதிக அளவிலான போராட்டங்கள் மற்றும் வன்முறை சம்பவங்கள் நிகழ்ந்து வருகின்றன.

இந்நிலையில், தொடர் வன்முறை சம்பவங்களின் எதிரொலியாக, எதியோப்பியா அரசு அவசர நிலை பிரகடனம் அறிவித்துள்ளது.

நாட்டு மக்களுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் காரணமாகவே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு பிரதமர் ஹாய்லிமரியம் தேசலிக்கன் தெரிவித்துள்ளார்.

கடந்த 25 வருடங்களில் முதன் முறையாக அவசர நிலை பிரகடனம் அறிவிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்த அவசர நிலை பிரகடன உத்தரவு 6 மாதங்களுக்கு அமுலில் இருக்கும்.

முன்னதாக நாட்டில் ஏற்பட்டுள்ள சேத நிலவரம் குறித்து ஆலோசனை நடத்திய அந்நாட்டு அமைச்சர்கள் பின்னர் அவசர நிலை பிரகடன உத்தரவு பிறப்பிக்கும் முடிவிற்கு வந்தனர். (இ-7)

# அலெப்போவில் தொடரும் தாக்குதல்களை முடிவுக்கு கொண்டுவர ஐ.நா. அழைப்பு

**(டமாஸ்கஸ்)**

**சிரியாவின் அலெப்போ நகரில் நிலவும் தொடர் தாக்குதல்களை முடிவுக்கு கொண்டு வர, ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் (யுனிசெப்) அழைப்பு விடுத்துள்ளது.**









கடந்த பெப்ரவரி மாதம் அமெரிக்கா, ரஷ்யா உள்ளிட்ட 17 நாடுகளின் தலைவர்கள் பேச்சுவார்த்தை நடத்தி கிளர்ச்சியாளர்களுக்கும் அரச படைக்கும் இடையில் போர் நிறுத்தம் கொண்டு வரப்பட்டபோதும், அலெப்போ நகர் உள்ளிட்ட சில பகுதிகளில் மட்டும் இருதரப்பினரும் உடன்படிக்கையை மீறி மோதல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால், பல சிறுவர்கள் உட்பட ஆயிரக்கணக்கான அப்பாவி பொதுமக்கள் உயிரிழக்கின்றனர். இதனால், அலெப்போவில் நிலவி வரும் பயங்கரமான சூழல் மனிதநேய நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டு நகரை துண்டாடியுள்ளதாக சிரியாவிற்கான யுனிசெப் பிரதிநிதி தெரிவித்துள்ளார். மேலும் இந்நிலைமையை முடிவுக்கு கொண்டுவரவும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

முன்னதாக, அலெப்போ பகுதியில் நடைபெற்று வரும் விமான தாக்குதல்களுக்கு முடிவுகட்டி, அங்கு போர் நிறுத்தத்தை ஏற்படுத்தவும் மனிதநேய அடிப்படையில் நிவாரணப் பொருட்களை அனுப்பி வைக்கவும் ஐ.நா. பாதுகாப்பு சபையில் பிரான்ஸ் கொண்டுவந்த தீர்மானத்தை, வீட்டோ அதிகாரத்தால் ரஷ்யா முறியடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஹிலாரியை சிறையில் தள்ளுவேன்




அமெரிக்காவின் ஜனாதிபதியாக தான் பொறுப்பேற்றால் ஹிலாரி கிளின்டனை சிறையில் தள்ளுவேன் என அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் குடியரசு கட்சி வேட்பாளர் டொனால்ட் டிரம்ப் ஆவேசமாக தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் பதவிக் காலம் இந்த ஆண்டுடன் முடிவடைகிறது. இதனையடுத்து புதிய ஜனாதிபதியை தேர்ந்தெடுக்க எதிர்வரும் நவம்பர் மாதம் 8ஆம்திகதி தேர்தல் நடக்கிறது. இதில் களம்காண உள்ள குடியரசு கட்சி மற்றும் ஜனநாயக கட்சி வேட்பாளர்களை தேர்வு செய்வதற்கான தேர்தல்கள் பல்வேறு மாகாணங்களில் நடந்து வந்தன. இதில் ஜனநாயக கட்சி வேட்பாளராக, முன்னாள் ஜனாதிபதி கிளின்டனின் மனைவியும், முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சருமான ஹிலாரி கிளின்டன் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன் அரசு அலுவல்களுக்கு தனது தனிப்பட்ட 'ஈமெயில்' முகவரியை பயன்படுத்தியது தொடர்பாக அவரது அரசியல் எதிரிகள் சர்ச்சையை கிளப்பி வருகின்றனர். குறிப்பாக, இந்த ஈமெயில் சர்ச்சை தொடர்பாக ஹிலாரியிடம் விசாரணை நடத்தி அவரை ஜனாதிபதி வேட்பாளர் போட்டியில் இருந்து தகுதி நீக்கம் செய்ய வேண்டும் என குடியரசு கட்சியின் வேட்பாளரான டொனால்ட் டிரம்ப் வலியுறுத்தி வருகிறார்.

ஊழல் மற்றும் வரி ஏய்ப்பு செய்த ஆதாரங்கள் அடங்கிய 33,000 ஈமெயில்களை அமெரிக்க பொலிஸாரின் விசாரணையிலிருந்து தப்பிப்பதற்காக ஜனநாயக கட்சியின் வேட்பாளர் ஹிலாரி கிளின்டன் நீக்கியுள்ளதாக குடியரசு கட்சி குற்றம்சாட்டி வருகிறது.

இது தொடர்பாக, ஹிலாரியின் அரசு உதவியாளர் மற்றும் வெளியுறவுத்துறை அதிகாரிகளிடம் தேசிய புலனாய்வு பொலிஸார் (எப்.பி.ஐ.) ஏற்கனவே விசாரணை நடத்தியுள்ளனர். ஹிலாரியிடமும் அண்மையில் விசாரித்தனர்.

இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் ஹிலாரி கிளின்டனும், டொனால்ட் டிரம்பும் மக்களிடையே இரண்டாவது முறையாக நேரடி விவாத நிகழ்ச்சியில் பங்கேற்று விவாதித்தனர்.

செயிண்ட் லூயிஸ் நகரில் நடைபெற்ற இந்த 90 நிமிட விவாத நிகழ்ச்சியின்போது பெண்களைப் பற்றி தரக்குறைவாக விமர்சித்த டொனால்ட் டிரம்ப்பை ஹிலாரி கடுமையாக தாக்கி குற்றம் சாட்டினார்.

அது, நடந்து முடிந்த பழைய கதை என்று பதிலளித்த டிரம்ப், நான் வெள்ளை மாளிகையில் ஜனாதிபதியாக பொறுப்பேற்றவுடன் அரசு அலுவல்களுக்காக தனிப்பட்ட ஈமெயில் கணக்குகளை பயன்படுத்தி, அதன்வழியாக நாட்டின் முக்கிய இரகசியங்கள் கொண்ட சுமார் 30 ஆயிரம் முக்கிய கடிதங்களை கசிய விட்டு, நாட்டின் பாதுகாப்பை கேள்வி குறியாக்கி விட்டீர்கள். இதற்காக நீங்கள் அவமானப்பட வேண்டும் என குற்றம்சாட்டினார்.

இதற்கு பதிலடி கொடுத்த ஹிலாரி, இவ்வளவு ஆவேசம் கொண்ட நபரை இந்த நாட்டின் சட்டத்தை பாதுகாப்பவராக வெள்ளை மாளிகைக்கு நீங்கள் (வாக்காளர்கள்) அனுப்பாமல் இருப்பது நல்லது என்றார்.

இதற்கு நெற்றியடியாக தனது கருத்தை பதிவு செய்த டிரம்ப், (நான் வெள்ளை மாளிகையில் சட்டத்தை பாதுகாக்கும் ஜனாதிபதி பொறுப்புக்கு வந்து விட்டால்) ஏனென்றால், நீங்கள் சிறைக்கு போக வேண்டியதாகிவிடும் என்று தெரிவித்தார். எதிர்வரும் 19ஆம் திகதியும் டிரம்ப்-ஹிலாரி ஆகியோருக்கு இடையிலான நேரடி விவாத நிகழ்ச்சி நடைபெறுகிறது. (இ-7)

## காஷ்மீரில் மீண்டும் கலவரம்; அரச அலுவலகங்களை

# தீயிட்டு எரித்த தீவிரவாதிகளுடன் பாதுகாப்பு படையினர் கடும் மோதல்




ஜம்மு-காஷ்மீர் மாநில தலைநகரான ஸ்ரீநகரிலுள்ள அரச அலுவலகத்தை நேற்று தீயிட்டு எரித்த தீவிரவாதிகளுடன் பாதுகாப்பு படையினர் துப்பாக்கிச் சண்டையில் ஈடுபட்டனர்.

ஜம்மு-காஷ்மீர் மாநில தலைநகரான ஸ்ரீநகரின் புறநகர் பகுதியான செம்போரா என்ற இடத்தில் மாநில அரசுக்கு சொந்தமான தொழில்முனைவோர் மேம்பாட்டு பயிலகத்தின் தலைமை அலுவலகம் அமைந்துள்ளது.

இந்த கட்டட வளாகத்தில் நேற்றுக் காலை திடீரென தீ விபத்து ஏற்பட்டது.

தகவல் அறிந்து விரைந்து வந்த தீயணைப்பு வாகனங்கள் பாதுகாப்பு கருதி உள்ளே அனுமதிக்கப்படவில்லை.

தீப்பற்றி எரிந்த அந்த கட்டடத்தில் இருந்து துப்பாக்கி வெடிக்கும் சப்தம் கேட்டதாக அப்பகுதியை சேர்ந்த ஒரு இராணுவ வீரர் குறிப்பிட்டிருந்தார்.


இந்நிலையில், இந்த கட்டட வளாகத்தில் சில தீவிரவாதிகள் பதுங்கி இருப்பதாகவும், பாதுகாப்பு படையினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையில் பயங்கரமான துப்பாக்கிச் சண்டை நீடித்து வருவதாகவும் ஸ்ரீநகரில் இருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7)

# கேதாரகௌரி விரதாரம்பம் இன்று



துர்முகி வருஷ 2016 ஆம் ஆண்டிற்குரிய கேதாரகௌரி விரதாரம்பம் புரட்டாதி 25 ஆம் நாள் (11.10.2016) இன்று செவ்வாய்க்கிழமை கோவில்களிலும் வீடுகளிலும் மிகவும் பக்தி பூர்வமாக ஆரம்பமாகின்றது.





புரட்டாதி மாதத்தில் வளர்பிறையில் வரும் அட்டமி திதி முதலாக தொடங்கி அமாவாசை வரும் வரையில் இந்த விரதத்தை கடைப்பிடிப்பது முறை. இம்முறை தசமி திதியில் இவ் விரதம் ஆரம்பமாகின்றது. உலகிலே வசிக்கின்ற இந்துமத மக்கள் பெரும்பாலோரால் இவ்விரதம் முறையாக அனுஷ்டிக்கப்படுகின்றது. அம்பிகை உமாதேவியானவள் பரமேஸ்வரனை விட்டுப் பிரியாமல் இருக்க வேண்டும், அவர் இடப்பாகத்தில் ஐக்கியம் பெறவேண்டும் என்பதற்காக திருக்கேதாரம் என்ற திருத்தலத்தை சென்றடைந்தார். அங்கு கௌதம முனிவரைச் சந்தித்து தன் வருகையைப் பற்றிக் கூற அவர் அப்போது அம்பிகை உமா தேவியாருக்கு சொல்லும் முகமாக நமக்கு உபதேசித்ததே கேதார கௌரிவிரதமாகும்.

நன்றாக இழைத்து தயார்செய்யப்பட்ட 21 இழைகள் கொண்ட சரடை (நூலை) சங்கல்பத்தோடு (வேண்டுதல் நிறைவேண்டும்) இடக்கையில் கட்டிக்கொள்ளல் வேண்டும். புண்ணிய தீர்த்தத்தில், கேணியில் ஸ்நானம் செய்து இயலுமானவரை சிவன் கோவில் சென்று வழிபட வேண்டும். இயலாதவர்கள் மற்ற கோவில்களிலும் வழிபடலாம். சூரியன் மறைந்தபின் இரவில் மட்டும் ஒரு வேளை உண்ண வேண்டும். தூங்கும் போது கூட அவ சிந்தனை இல்லாமல் சிவ சிந்தனையோடு தூங்க வேண்டும். இதுவே நடைமுறை. இப்படி விரதமிருந்து தேய்பிறைச் சதுர்த்தி அன்று கோயில் சென்று பூக்களால் அலங்காரம் செய்ய வேண்டும். கோயிலில் ஒரு குறித்த இடம் (யோக மண்டபம்) ஒரு மரைக்கால் அளவு செந்நெல்லைச் சதுரமாகப் பரப்பி அதன் நடுவே மந்திர பூர்வமாகப் பிரணவ எழுத்தை எழுதி அதன் நடுவில் பூரண கும்பம் வைக்க வேண்டும். கும்பத்தில் தர்ப்பையை முறைப்படி சாத்தி கும்பத்தில் சிவபெருமானை ஆவாகணம் செய்ய வேண்டும். பின்பு பக்தியுடன் முறையாகப் பூஜை செய்து அம்பிகையின் பாடல்களைப் பாடி வணங்க வேண்டும். பூஜையின் போது நெய் விளக்கு ஏற்றுவது சிறப்பு. இப்படி அன்றைய தினம் பூஜை முடிந்த பிறகு மறுநாள் முன்னர் கையில் கட்டிக் கொண்ட சரடை (நூலை) அவிழ்த்து விட்டு பரமேஸ்வரனை வணங்க வேண்டும். கௌதம முனிவர் உபதேசித்த இந்தக் கேதார கௌரி விரதத்தை அம்பிகை உமாதேவியானவள் முறையாகக் கடைப்பிடித்துப் பரமேஸ்வரரின் இடப் பாகத்தைப் பெற்றார்.

அத்துடன்தான் கடைப்பிடித்த இந்த கேதாரகௌரி விரதத்தை யார் கடைப்பிடித்தாலும் அவர்களுக்கு சகல சௌபாக்கியங்களையும் தந்து முடிவில் சிவன் திருவடிப் பேற்றையும் அனுக்கிரகம் செய்ய வேண்டும் என்று பரமேஸ்வரரிடம் நமக்காக வேண்டிக் கொண்டார். அம்பிகையானவள் குழந்தைக்காக தாய் பத்தியம் இருப்பது போல நம்மக்களுக்காக அம்பிகை செய்து வழிகாட்டிய விரதம் இதுவாகும். பூசையன்று சாயங் காலமோ அல்லது மறுநாள் காலையிலோ தன்னால் இயன்றதை நிவேதனம் செய்து தூப தீபம் கற்பூரம் காட்டி அஸ்மாத் பிம் மாத் ஸ்ரீ கேதாரே ஸ்வரம் யதா ஸ்தானம் ப்ரதிஸ்டாபயாம் மோய புனராகமனாயச என்று வடக்கு முகமாக கேதாரேஸ்வரரை நகர்த்தி வைக்கவும்.

கௌரி பூசையை விவாகம் ஆக வேண்டிய இளம் கன்னிகைகள் தமக்கு நல்ல வரன் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்தனை புண்ணி குத்து விளக்கில் செய்ய வேண்டிய பூசை. இந்தப் பூசையை தவறாமல் பன்னிரண்டு தினங்களோ அல்லது 24 தினங்களோ அல்லது நாற்பத்தைந்து தினங்களோ தவறாமல் செய்தால் நல்ல பலனை அடையலாம்.

இந்த விரதத்தை இந்து மக்களாகிய நாம் அனைவரும் பக்தி சிரத்தையுடன் முறையாகக் கடைப்பிடித்து சகல செல்வங்களையும் சகல சௌபாக்கியங்களையும் அடைய பரமேஸ்வரரின் திருப்பாதங்களைப் பணிந்து இந்த மண்ணில் பிறந்த அனைவரும் மண்ணில் நல்ல வண்ணம் வாழ பிரார்த்திப்போமாக!

**திருமதி மலர்விழி-கனகசபை**
உதவிக்கல்விப் பணிப்பாளர் (அழகியல்)
தீவக கல்வி வலயம், வேலணை.



சிறுநீரகங்கள் செயலிழந்த இன்பநாதன் விஜயராணிக்கு பிரான்சில் வசிக்கும் இராசதுரை ஜோன்சன் தனது பிறந்த நாளை முன்னிட்டு நிதியுதவியை 'தகனகசபை' மூலம் வழங்கினார்.

## மாலபே கல்லூரியில் மீட்கப்பட்ட உடற்பாகங்கள் வேறு சில வழக்குகளுடன் தொடர்புடையவை

அண்மையில் புலனாய்வுப் பிரிவினர் மாலபே தனியார் மருத்துவ கல்லூரியிலிருந்து மீட்ட உடல் பாகங்களில், சில வேறு வழக்குகளுடன் தொடர்புடையவை என தெரிவிக்கப்படுகிறது.

வழக்கு விசாரணைக்கான வழக்குப் பண்டல்களாக இலக்கமிடப்பட்டவையே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

தனியார் மருத்துவ கல்லூரியிலிருந்து சுமார் 26 உடல் பாகங்கள் மீட்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு நீதிமன்ற வழக்குகளுடன் தொடர்புடைய உடல் பாகங்கள், அரசாங்கத்திற்கு உடைமையான பொருட்களாகும். அரசாங்கத்திற்கு சொந்தமான பொருட்கள் தனியார் மருத்துவக் கல்லூரியில் வைக்கப்பட்டிருந்தமை குறித்து வழக்குத் தொடரப்படவுள்ளது. அரச சொத்துக்களை திருடிய குற்றச்சாட்டின் அடிப்படையில் வழக்குத் தொடரப்படவுள்ளது.

ரகர் வீரர் வசீம் தாஜுடின் கொலை தொடர்பிலான விசாரணைகளின் அடிப்படையில் மாலபே தனியார் மருத்துவ கல்லூரியின் உடல் பாகங்கள் மீட்கப்பட்டிருந்தன.

உடல்பாகங்கள் சட்டவிரோதமாக எடுத்துச் செல்லப்பட்டமை தொடர்பில் கொழும்பு மாவட்ட முன்னாள் சட்ட வைத்திய அதிகாரி மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (இ-7-10)

## விடுதியின் மீது தாக்குதல்; அனைத்து அறிக்கைகளும் பிரதமரிடம் ஒப்படைப்பு

கொழும்பில் உள்ள பிரபல Clique விடுதியில் கடந்த சனிக்கிழமை அதிகாலை மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தின் அறிக்கை பிரதமரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த தாக்குதலை மேற்கொண்டதாக கூறப்படும் அரசியல்வாதியின் மகன் தொடர்பிலான அனைத்து தகவல்களும் கொண்ட அறிக்கை பிரதமர் செயலகத்திற்கு கிடைத்துள்ளதாக மக்கிய தேசிய கட்சி தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

குறித்த அரசியல்வாதியின் மகன் தனது உறவினரான பாதுகாப்பு உமைக்குழு செயற்பாட்டாளர் மற்றும் தனது தந்தையின் பாதுகாப்பு பிரிவு சிலருடன் இந்த விடுதிக்கு சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த விடுதிக்குள் நுழைய மேற்கொண்ட முயற்சியை தடுத்தமையினாலேயே இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. (இ-7-10)

## பிறக்கப்போகும் பிள்ளைகளையும் அடகு வைத்த முன்னாள் ஜனாதிபதி

நாட்டில் இனிப் பிறக்கப் போகும் பிள்ளைகளையும் அடகு வைத்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது பிள்ளைகளை வளர்த்ததாக அனர்த்த முகாமைத்துவ பிரதி அமைச்சர் துனேஷ் கன்கந்த தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற மகளிர் அமைப்பு கூட்டமொன்றில் அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

மகிந்த ராஜபக்ஷவை தேசத்தின் தந்தை என கூறுவதனை விடவும் சிறிய தந்தை என்றே கூற வேண்டும்.

மகிந்த ராஜபக்ஷ தனது குடும்பம், தனது பிள்ளைகள், தனது சகோதரர்களின் நலனை முன்னிலைப்படுத்தியே செயற்பட்டார். சுருக்கமாக கூறின், மெதமுலன இல்லத்தின் எதிர்கால நலனை அடிப்படையாகக்கொண்டே செயற்பட்டார்.

மகிந்த, பசில் விமல் உதய, வெல்கம, ஜீஎல்பீரிஸ் போன்ற சர்ச்சைக்குரியவர்களைக் கொண்டு எவ்வாறு புதிய சக்தியொன்றை உருவாக்க முடியும்? அண்மையில் இரத்தினபுரியில் நடைபெற்ற கூட்டமானது சுதந்திரக் கட்சியின் உட்கட்சி பூசலாகவே கருதப்பட வேண்டும்.

பவித்ரா வன்னியாராச்சி தனது பலத்தை நிரூபிக்க இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார் என பிரதி அமைச்சர் துனேஷ் கன்கந்த மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

## பிணக்கு விசாரணை இடம்பெறமாட்டாது

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை மத்தியஸ்தர் சபையினால் (இணக்க சபை) எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த பிணக்கு விசாரணைகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் நடைபெறாது எனவும் அன்றைய தினம் நடைபெறவிருந்த பிணக்கு விசாரணைகள் எதிர்வரும் 23.10.2016 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் எனவும் மத்தியஸ்தர் சபை தவிசாளர் எஸ். வாசுதேவன் அறிவித்துள்ளார். (இ-3)

### கடலுக்கு அடியில் மின்சார பரிமாற்ற கட்டமைப்பு மூலம்

# இலங்கைக்கு இந்தியா மின்சாரம் வழங்க திட்டம்

(கொழும்பு)

**இலங்கைக்கு மின்சாரத்தை ஏற்றுமதி செய்யும் வகையில் கடலுக்கு அடியில் மின்சார பரிமாற்ற கட்டமைப்பு ஒன்றை உருவாக்கும் திட்டம் குறித்து பரிசீலிக்கப்பட்டு வருவதாக இந்தியாவின் மின்சக்தி அமைச்சின் செயலர் பி.கே.புஜாரி தெரிவித்துள்ளார்.**

இலங்கையில் உள்நாட்டுத் தேவையை ஈடுசெய்ய 500 மெகாவோல்ட் மின்சாரத்தை இந்தியாவிடம் கோரியுள்ளது.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான மின்சார இணைப்பு வசதிகள் இல்லாமையால் இதுகுறித்து எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

இந்த நிலையில் தற்போது, துணை-கடல் சக்தி இணைப்பு தொழில்நுட்பத்தை பயன்படுத்துவது குறித்து இந்திய மின்சக்தி அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

இதுதொடர்பாக கருத்து வெளியிட்ட இந்தியாவின் மின்சக்தி அமைச்சின் செயலர் பி.கே.புஜாரி,

"தற்போது நாம் பங்களாதேஷ், நேபாளம், மியன்மார், பூட்டான் ஆகிய நாடுகளுக்கு மின்சாரத்தை ஏற்றுமதி செய்கிறோம்.

கடலுக்கடியிலான மின் இணைப்பு கட்டமைப்பின் மூலம் இலங்கைக்கும் மின்சார விநியோகத்தை மேற்கொள்வது குறித்து தற்போது ஆலோசிக்கிறோம்.

இன்னமும் இதற்கான திட்டங்கள் ஆரம்பிக்கப்படவில்லை. ஆனால், நாம் துணை கடல்இணைப்புதொடர்பான புதிய தொழில்நுட்பத்தைக் கண்டறிந்துள்ளோம்.

இலங்கைக்கு மின்சார விநியோகம் செய்வது குறித்து முன்னர் இந்தியா ஆலோசனை நடத்தியது. ஆனால் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. அந்தத் திட்டம் சாத்தியமானதாக இருக்கவில்லை என்பதே அதற்குக் காரணம். அப்போது நல்ல தொழில் நுட்பம் இருக்கவில்லை. அது செலவுமிக்கதாகவும் இருந்தது.

இப்போது தொழில்நுட்பம் பெருமளவில் உயர்ந்துள்ளது. புதுப்பிக்கத்தக்க சக்தியை இறக்குமதி செய்வதற்கு ஐரோப்பிய நாடுகள் இந்த தொழில்நுட்பத்தை பயன்படுத்துகின்றன.

எனவே இலங்கைக்காக இதனை நாம் மீளப் பரிசீலிக்கிறோம். கடலுக்கடியில் மின் இணைப்பு கட்டமைப்பை ஏற்படுத்துவது சாத்தியமா? என்று ஆராய்கிறோம்.

இது நல்ல தொழில்நுட்பம் மாத்திரமன்றி செலவும் குறைவானது" என்றும் தெரிவித்தார். (இ-7-10)


# இன முரண்பாடுகள் இலங்கையில் இல்லை

### மல்வத்துபீட மகாநாயக்க தேரர் கூறுகிறார்

(கொழும்பு)

இலங்கையில் இன, மத வேறுபாடுகளோ, முரண்பாடுகளோ இல்லையென மல்வதுபீட மகாநாயக்கர் திப்படுவாவே ஸ்ரீசத்தாதிஸ்ஸ சுமங்கலதேரர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள சுவிட்சர்லாந்தின் சபாநாயகர் கிறிஸ்டா மார்க்வெல்டர் நேற்றுமுன்தினம் மல்வத்து பீட மகாநாயக்க தேரரை சந்தித்த போதே அவர் இந்தக் கருத்துக்களை தெரிவித்திருக்கின்றார்.



தற்போதைய அரசாங்கம் நாட்டில் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ள மகாநாயக்கர், இதன் ஊடாக இனங்களுக்கிடையில் நிலவிய சிறு, சிறு முரண்பாடுகளும் களையப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழர் தரப்பினரால் யாழ்ப்பாணத்தில் கடந்த செப்டெம்பர் 24 ஆம் திகதி எழுக தமிழ் என்ற பெயரில் பேரணியொன்று நடத்தப்பட்டது. இதில் வடக்கில் பௌத்த விஹாரைகளோ அல்லது பௌத்த சிலைகளோ வைக்க இடமளிக்க முடியாது என்று முதலமைச்சர் பகிரங்கமாக அறிவிக்கும் அளவிற்கு நாட்டில் சுமுகமான நிலை ஏற்பட்டுள்ளதாகவும் சுவிட்சர்லாந்து சபாநாயகரிடம் மல்வதுபீட மகாநாயக்கர் சுட்டிக்காட்டினார். (இ-7-10)

# விமானப் போக்குவரத்து குறித்து கனடாவுடன் விரைவில் ஒப்பந்தம்

(கொழும்பு)

இலங்கைக்கும் கனடாவிற்குமிடையில் விமானப் போக்குவரத்து தொடர்பாக புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை மேற்கொள்ள தீர்மானம் எட்டப்பட்டதாகவும் அதற்கான பேச்சுவார்த்தைகள் நிறைவுபெற்றுள்ளதாகவும் இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் அஹமட் ஏ. ஜவாட் தெரிவித்துள்ளார்.

சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்தின் 39 ஆவது மாநாட்டு அமர்வு கனடாவின் மொன்றியல் நகரில் நடைபெற்று வருகின்றது. குறித்த மாநாட்டிலேயே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் சிறப்பு முகவராண்மை நிறுவனமாக செயற்படும் சர்வதேச விமான போக்குவரத்து தாபனம் 1944 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. 191உறுப்பு நாடுகளைக் கொண்ட இவ்வமைப்பில் 1948 ஆம் ஆண்டு முதல் இலங்கை அங்கத்துவம் வகிக்கின்றது.

இம்மாநாட்டில் கலந்துகொண்ட இலங்கைப் பிரதிநிதிகள் முகவர்களிடம் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டனர். இதன்போது விமானப் போக்குவரத்து தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கைக்கான தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

இதன் மூலம் விமானப் போக்குவரத்து மற்றும் சிக்காகோ உடன்படிக்கை மூலம் ஏற்படவுள்ள இலங்கைக்கான எதிர்கால சவால்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படவுள்ளது.

இந்நிலையில் இம் மாதம் 21 ஆம் திகதி தொடக்கம் 23 ஆம் திகதி வரை மொன்றியலில் நடைபெறவுள்ள சர்வதேச சுற்றுலாத்துறை தொடர்பான விசேட நிகழ்விலும் இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் கலந்து கொள்ளவுள்ளார்.

கடந்த வருடத்தில் மாத்திரம் கனடாவிலிருந்து 37 ஆயிரத்து 732 பேர் உல்லாசப்பிரயாணிகளாக இலங்கை வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்ற நிலையில் இம்மாநாட்டின் மூலம் பல தீர்க்கமான முடிவுகள் எட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (இ-7-10)

## இன்று ஒரு தகவல்

### அகத்தின் அழகு முகத்தில் தெரியக்கூடாது!

வீட்டில் கறுப்புப் பண வேட்டை நடந்திருக்கிறது. நடிகரோ நகைச் சுவைக் காட்சியில் நடிக்க வேண்டியிருக்கிறது. என்னால் முடியாதுப்பா என்று ஒரு நடிகர் சொல்லுவதில்லை. நடித்து முடித்துப் பிரமாதம் என்று பாராட்டுக் கூடப் பெற்று விடுகிறார். இது எப்படிச் சாத்தியம் ? பயிற்சியும் தேவையும் இதைச் சாத்தியமாக்குகின்றன.

நமக்குள் எண்ணற்ற மனப் போராட்டங்கள் இருக்கலாம். ஆனால் அவற்றை நம் முகரேகைகள் காட்டிக்கொடுத்துவிடக்கூடாது. நம்முடைய அன்புக்கு உரியவர்களுக்கு இது புரிவதில்லை. நம்மீது தான் கோபமாக இருக்கிறார். - ஏன் இப்படி சரியாகப் பேசமாட்டேன் என்கிறார்களே, நம்மையும் வெறுக்கிறார்களோ என்றெல்லாம் கவலை கொண்டு மனம் வெறுத்துப் போகிறார்கள்.

மித மிஞ்சிய கவலையோ மித மிஞ்சிய மகிழ்ச்சியோ நம்மைக் காண்பித்துக் கொடுத்துவிடவே செய்யும். ஆனால், ஒரு கண்ணாடி டம்ளரைக்கீழே போட்டு உடைத்துவிட்டோம் என்பதற்காக, உடைத்த ஐந்தாவது நிமிடம் நம் வீட்டில் நுழையும் ஒருவரை உற்சாகம் குறைவாக வரவேற்கக் கூடாது அல்லவா? அவர் மனம் எப்படிப் போகும்? நம் வருகையை இவர் விரும்பவில்லை என்று தானே? மகிழ்ச்சி மற்றும் கவலைகளை இதயத்தில் தாங்கிக் கொண்டிருந்தாலும் அதை முகத்தில் காண்பிக்காமல் எப்போதும் ஒரே மாதிரி - களைப்பைக் கூட வெளிக்காட்டிக் கொள்ளாமல் இருக்கிறவர்கள் உங்கள் வட்டத்தில் இருக்கிறார்களா? இல்லையா? நன்கு சிந்தித்துச் சொல்லுங்கள் நிச்சயம் இருக்கிறார்கள்.

ஒரு கிராப் படத்தைக் கற்பனை செய்து கொள்ள வேண்டும். சோகம் என்பது கீழே இறங்கும் கோடு. மகிழ்ச்சி என்பது மேலே ஏறும் கோடு. இவை இரண்டிற்குமே இடம் தராமல் நம் மன நிலை சம கோட்டில் இருக்க வேண்டும்.

எப்போதும் ஒரே மாதிரியாக இருப்பது என்பது மிக அரிய பண்பு. எல்லோரையும் கவர்ந்திழுக்கும் பண்பு என்பதோடு மனிதனுக்கு இருக்கக்கூடிய தலைசிறந்த மனப்பக்குவமும் கூட.

கவலையை வெளிக்காட்டி மற்றவர்களை சங்கடத்தில் ஆழ்த்தக் கூடாது. சரி, மகிழ்ச்சியை ஏன் வெளிக்காட்டக்கூடாது? என்கிறவர்களுக்கு நம்முடைய மிதமிஞ்சிய மகிழ்ச்சி மற்றவர்களுக்கு எரிச்சலூட்டுகிறது. பொறாமையையும் தூண்டிவிடுகிறது என்பதே விளக்கம்.

ஒரு கவலைச் செய்தி வந்தவுடன் உடனே உன்மனத்தை உசுப்ப வேண்டும். நமக்குள் நாமே பார் பார்! உன் முகம் எவ்வளவு சிறுத்து விட்டது? ஏன் இப்படி சடசடவென்று சரிந்து சோகமாக ஆகிவிட்டாய்? யாரும் முகரேகையை வாசிப்பதற்குள் அதை உன் முகத்திலிருந்து விரட்டு என்று ஒரு முறைக்குப் பல முறை சொல்லிப் பார்த்துக் கொள்ள வேண்டும். இந்தப் பயிற்சியை மேற்கொண்டு வந்தால் நாளடைவில் இது சாத்தியம்.

இப்படிச் செயற்கையாக கற்க ஆரம்பிக்கின்ற பழக்கம் நம்மை எல்லோரும் விரும்பச் செய்வதோடு எத்தகைய சோகத்தையும் எத்தகைய மகிழ்ச்சியையும் அதிக வேறுபாடின்றி ஏற்கும் மன நிலையை வளர்த்து விடும். நாம் ஒப்பு ஆழமான மனிதராகிவிடுவோம். இதைவிட வேறு சிறந்த இலாபம் உண்டா என்ன?

**லேனா தமிழ்வாணன்**



# சிறுவர் அரங்கம்


## சீலனின் தந்திரம்!

வைரபுரி என்ற நாட்டில் பல கோடிகளுக்கு அதிபனான சீலன் என்பவன் வாழ்ந்து வந்தான். அவன் தயாள குணம் கொண்டவன். அந் நாட்டு மன்னன் பர்வதனனின் ஆருயிர் நண்பன். பொக்கிஷத்தில் பணக் குறைவு ஏற்பட்ட போதெல்லாம் மன்னனுக்குத் தேவைப்பட்ட பணத்தைக் கொடுத்து பிறகு வாங்கிக் கொள்வான் சீலன். அப்படி கிடைத்த வட்டிப் பணத்தை ஏழை எளியவர்களுக்கு கொடுத்து உதவி வந்தான் சீலன்.

ஓவியக் கலையில் கைதேர்ந்தவன் சீலன். மற்ற கலைகளிலும் அவனுக்கு மிகுந்த ஆர்வம் உண்டு. அழகான சிற்பங்கள், வண்ண ஓவியங்கள், வேலைப்பாடுடன் கூடிய கைவினைப் பொருள்கள் என்றால் என்ன விலை கொடுத்தாவது வாங்கி விடுவான். ஆனால், அப்படி வாங்கும் பொருள்களை யார் கேட்டாலும் கொடுக்கவும் மாட்டான்.

மன்னன் பர்வதனுக்கு, சீலனின் இந்தப் பிடிவாதக் குணம் ஒன்றுதான் பிடிக்காமல் இருந்தது. அதனால் சீலனிடமிருந்த அழகிய பொருள்களில் ஒன்றைக் கூடப் பெற முடியாமல் போனது.

ஒரு நாள் சீலனைக்காண



வாலிபன் ஒருவன் வந்தான். கிழிந்த ஆடைகளை அணிந்து தாடி வளர்த்துக் கொண்டிருந்த போதிலும் அவன் உயர் குடியில் பிறந்தவன் என்று சீலனுக்கு தெரிந்துவிட்டது. அவன் அந்த இளைஞனை வரவேற்று உட்காரும் படி சொன்னான்.

""ஐயா! என்னை இந்தக் கோலத்தில் கண்டவர்கள் எல்லாரும் விரட்டினார்களே ஒழிய என்னை "உட்கார்' என்று இது வரை யாரும் சொல்லியதில்லை. மிக்க நன்றி. நீங்கள் கலை அம்சம் கொண்ட பொருள்களை விலைக்கு வாங்கிக் கொள்வதாகக் கேள்விப்பட்டேன்.

"என் பெயர் சக்தி. என் முன்னோர்கள் ஜமீன்தாரர்கள். எங்களுக்குச் சொந்தமான அபூர்வ ஓவியம் ஒன்றைத் தங்களுக்கு விற்க எடுத்து வந்துள்ளேன்." எனக் கூறித் தான் கொண்டு வந்த ஓவியத்தை அவனிடம் காட்டினான்.

அந்த ஓவியத்தைக் கண்டு சீலன் பிரமித்தான். ஒரு தாய் குழந்தையை எடுத்துக் கொஞ்சுவது போன்ற படம் அது. குழந்தை தன் பொக்கை வாயை விரித்து சிரிப்பது மிக அழகாக தீட்டப்பட்டிருந்தது. வண்ணங்கள் கண்களுக்கு குளிர்ச்சி தரும் விதமாகத் தீட்டப்பட்டிருந்தன.

"இது கற்பனையில் தோன்றிய படமாக இல்லை. நேரில் நடப்பதை பார்த்து இதனை வரைந்திருக்கிறார் ஓவியர். என்ன நான் சொல்வது சரிதானே?" என்று கேட்டான்.

"நீங்கள் நினைத்தது சரியே. அந்த ஓவியத்தில் உள்ள பெண்மணி என் தாய். அந்தக் குழந்தை நானே. இதனை வரைந்த ஓவியனுக்கு என் தந்தை நூறு ஏக்கர் நிலம் பரிசாக அளித்தார். ஆனால், இப்போதோ நான் அந்த ஓவியத்தை விற்றுப் பிழைக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப் பட்டிருக்கிறேன்," என்றான்.

"இந்த ஓவியத்திற்கு என்ன விலை வேண்டுமானாலும் கொடுக்கிறேன். நீயே இதன் விலையைச் சொல்," என்றான் சீலன்.

"எனக்கு இதற்காக நூறு பவுன்கள் கொடுத்தால் போதும். அதைக் கொண்டு நான் முன்னுக்கு வந்துவிடுவேன்," என்றான்.

"இவ்வளவு குறைவாகக் கேட்கிறாயே" என்று கேட்டார் சீலன். "அதற்கு மேல் நான் கேட்கமாட்டேன்!" என்றான் சக்தி. நூறு பவுன்களைக் கொடுத்து அனுப்பினான் சீலன். (தொடரும்...)

## 11 10.2016 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1138 - சிரியாவில் பெரும் நிலநடுக்கம் ஏற்பட்டது. 200,000 பேர் வரையில் கொல்லப்பட்டனர்.
- 1634 - டென்மார்க், மற்றும் ஜெர்மனியில் இடம் பெற்ற பெரும் வெள்ளத்தினால் 15,000 பேர கொல்லப்பட்டனர்.
- 1801 - காளையார் கோயிலைக் கைப்பற்றிய ஆங்கிலேயர் அதனையும் சுற்றியுள்ள காடுகளையும் தீயிட்டுக் கொளுத்தினர்.
- 1811 - ஜோன் ஸ்டீவன்ஸ் கண்டுபிடித்த ஜூலியானா என்ற முதலாவது நீராவிப் படகுக் கப்பலின் சேவை நியூ யோர்க்கிற்கும் நியூ ஜேர்சிக்கு இடையில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1852 - ஆஸ்திரேலியாவின் மிகப் பழமையான சிட்னி பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1865 - ஜமைக்காவில் நூற்றுக்கும் அதிகமான கறுப்பின மக்கள் அரசுக்கெதிரான எதிர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்தனர். இது அன்றைய பிரித்தானிய அரசால் நசுக்கப்பட்டதில் நானூறுககும அதிகமான கறுப்பினத்தவர்கள கொல்லப்பட்டனர்.
- 1941 - மக்கெடோனியாவில் தேசிய விடுதலைப் போர் ஆரம்பமானது.
- 1944 - துவீனிய மக்கள் குடியரசு சோவியத் ஒன்றியத்துடன் இணைந்தது.
- 1954 - வட வியட்நாமை வியட் மின் படைகள் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தன.
- 1958 - நாசாவின் முதலாவது விண்கலம் பயனியர் 1 சந்திரனை நோக்கி ஏவப்பட்டது. இது சந்திரனை அடையாமலே மீண்டும் இரண்டு நாட்களில் பூமியில் வீழ்ந்து எரிந்தது.
- 1968 - நாசா முதற் தடவையாக மூன்று விண்வெளி வீரர்களை அப்பல்லோ 7 விண்கலத்தில் விண்ணுக்கு ஏவியது.
- 1987 - விடுதலைப் புலிகளுக்கு எதிராக இந்திய அமைதிப் படை பவான் நடவடிக்கை என்ற பெயரில் போரை ஆரம்பித்தனர்.
- 1998 - கொங்கோவில் வானூர்தி ஒன்று தீவிர வாதிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டதில் 40 பேர் கொல்லப்பட்டனர்.
- 2002 - பின்லாந்தில் கடைத் தொகுதி ஒன்றில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் ஏழு பேர் கொல்லப்பட்டனர்.
- 2006 - ஈழப்போர்: முகமாலையில் இடம்பெற்ற சமரில் 129 இராணுவத்தினரும் 22 விடுதலைப்புலிகளும் கொல்லப்பட்டனர். 300 இராணுவத்தினர் படுகாயமடைந்தனர்.

**பிறப்புகள்**

- 1738 - ஆர்தர் பிலிப், நியூ சவுத் வேல்ஸ் முதலாவது ஆளுநர். (இ. 1814)
- 1758 - ஹென்ரிச் ஒல்பெர்ஸ், செருமானிய மருத்துவர், வானியலாளர். (இ. 1840)
- 1820 - ஆணல்ட் சதாசிவம்பிள்ளை, ஈழத்தின் தமிழறிஞர், தமிழாசிரியர், இதழாசிரியர், புலவர். (இ. 1896)
- 1826 - மாயூரம் வேதநாயகம்பிள்ளை, தமிழ்ப் புதின முன்னோடி. (இ. 1889)
- 1884 - எலினோர் ரூசுவெல்ட், அமெரிக்க அரசியல்வாதி. (இ. 1962)
- 1896 - உரோமன் யாக்கோபுசன், உருசிய-அமெரிக்க மொழியியலாளர். (இ. 1982)
- 1902 - ஜெயபிரகாஷ் நாராயண், இந்திய அரசியல்வாதி. (இ. 1979)
- 1930 - கே. பி. உமர், இந்திய நடிகர். (இ. 2001)
- 1942 - அமிதாப் பச்சன், இந்திய நடிகர்
- 1947 - லூகாசு பாப்படெமோசு, கிரேக்கப் பிரதமர்.
- 1952 - ஐசக் இன்பராஜா, ஈழத்து நாடகக் கலைஞர். (இ. 2014)
- 1962 - ஆன் என்றைட், அயர்லாந்து பெண் எழுத்தாளர்
- 1973 - தகேஷி கனேஷிரோ, சப்பானிய நடிகர், பாடகர்.
- 1977 - மாட் போமேர், அமெரிக்க நடிகர்.

**இறப்புகள்**

- 1889 - ஜேம்ஸ் பிறிஸ்காட் ஜூல், ஆங்கிலேய இயற்பியலாளர். (பி. 1818)
- 1896 - ஆன்டன் புருக்னர், ஆத்திரிய இசையமைப்பாளர். (பி. 1824)
- 2006 - ஏ. ஜே. கனகரத்னா ஈழத்தின் பிரபல பத்திரிகையாளர், எழுத்தாளர். (பி. 1934)

**சிறப்பு நாள்**

- சர்வதேச பெண் குழந்தைகள் தினம்.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் | திருநெல்வேலி | சுன்னாகம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 50 | 50 | 60 | 60 | 60 | 50 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 120 | 120 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 80 | 55 | 60 | 100 | 80 | 80 | 60 |
| தக்காளி | 80 | 70 | 80 | 120 | 100 | 100 | 80-100 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 70 | 60 | 70 | 50 | 60 |
| கோவா | 80 | 70 | 70 | 100 | 80 | 80 | 100 |
| கரட் | 100 | 70 | 100 | 120 | 100 | 80 | 100 |
| பூசணி | 30 | 20 | 30 | 40 | 30 | 30 | 30 |
| புடோல் | 60 | 35 | 40 | 80 | 40 | 30 | 50 |
| வாழைக்காய் | 60 | 40 | 50 | 80 | 50 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 120 | 90 | 100 | 120 | 90 | 70 | 80 |
| பெரிய வெங்காயம் | 120 | 65 | 90 | 100 | 100 | 80 | 70 |
| பாகற்காய் | 200 | 110 | 120 | 160 | 100 | 100 | 200 |
| வெண்டிக்காய் | 150 | 70 | 80 | 120 | 80 | 80 | 100-160 |
| கருணைக்கிழங்கு | 150 | 100 | 120 | 120 | 100 | 90 | 100 |
| பயற்றங்காய் | 150 | 100 | 100 | 120 | 150 | 120 | 120-160 |
| லீக்ஸ் | 120 | 95 | 120 | 140 | 120 | 140 | 120 |
| பீற்றூட் | 40 | 40 | 30 | 80 | 50 | 40 | 40 |
| கறிமிளகாய் | 120 | 90 | 100 | 120 | 100 | 100 | 160 |
| முருங்கைக்காய் | 200 | 130 | 150 | 120 | 120 | 80 | 100 |
| போஞ்சி | 200 | 140 | 150 | 200 | 160 | 200 | 200 |
| கத்தரித்தம்பளை | 50 | 30 | 50 | 50 | 50 | 40 | 40 |
| கீரை (1பிடி) | 20 | 25 | 20 | 40 | 20 | — | 30 |
| தேசிக்காய் | 500 | 350 | 350 | 600 | 400 | 450 | 400-600 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 15-35 | 30 | 30-40 | 50 | 40 | 40 |
| இராசவள்ளி | — | — | — | — | 160 | — | — |
| வெங்காயப்பூ | — | — | — | 160 | 180 | 80 | 120 |
| முள்ளங்கி | — | 30 | — | 80 | 40 | 60 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 10 | 30 | 40 | 20 | 30 | 30 |
| வல்லாரை | 20 | 10 | 20 | 20 | 15 | 10 | 10 |
| ஈரப்பலா | 30 | — | — | — | — | — | — |

# பேருந்து திடீரென விபத்தில் சிக்கியதில் மாணவர்கள் உட்பட 72 பேர் படுகாயம்







(கொழும்பு)

அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தலவாக்கலை டயகம பிரதான வீதியில் தனியார் பேருந்து ஒன்று விபத்துக்குள்ளாகியதில் பாடசாலை மாணவர்கள் உட்பட 72 பேர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளதாக அக்கரப்பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

தலவாக்கலையிலிருந்து டயகம பகுதிக்கு சென்ற தனியார் பேருந்து ஒன்று தலவாக்கலை - டயகம பிரதான வீதியில் மொராயா ஆகரபகுதியில் வீதியை விட்டு விலகி மண்மேட்டில் மோதி இவ்வாறு விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

இந்த விபத்து நேற்றுக் காலை 8 மணியளவில் நேர்ந்துள்ளதாக அக்கரப்பத்தனை போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.

பேருந்தில் ஏற்பட்ட இயந்திரக்கோளாறு காரணமாகவே இவ்விபத்து நேர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

காயங்களுக்கு உள்ளாகியவர்கள் அக்கரப்பத்தனை பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சைகளை பெற்ற பின் வீடு திரும்புவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

விபத்தில் காயங்களுக்குள்ளாகியவர்களில் ஆண்கள் 40 பேரும், பெண்கள் 32 பேரும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, விபத்து குறித்து மேலதிக விசாரணைகளை அக்கரப்பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## யோஷிதவுக்காக நீதிமன்றில் ஆஜராகும் சட்டத்தரணிகள்

யோஷித ராஜபக்ஷ வெளிநாட்டில் வசிக்கும் காலப் பகுதியில் அவருக்கு எதிராக கல்கிசை நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் ஆஜராகுவதற்கு, கல்கிசை நீதவான் சஹாப்தீன் சட்டத்தரணிகளுக்கு அனுமதி வழங்கியுள்ளார்.

கடந்த 8ஆம் திகதியில் இருந்து எதிர்வரும் மாதம் 8ஆம் திகதி வரையிலான காலப்பகுதியினுள் இவ்வாறு சட்டத்தரணிகள் ஆஜராகுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கல்கிசை, மிஹிந்து மாவத்தையில் அமைந்துள்ள காணி ஒன்றை 521 மில்லியன் ரூபாவிற்கு கொள்வனவு செய்துள்ளதாக யோஷித ராஜபக்ஷ மற்றும் அவரது பாட்டியான டேசி பொரஸ்ட் என்பவருக்கு எதிராக கொழும்பு நிதி மோசடி விசாரணை பிரிவு கல்கிசை நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளது.

அந்த வழக்கு எதிர்வரும் 17ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. அன்றைய தினம் தான் வெளிநாட்டில் இருப்பதனால் தனக்கு பதிலாக சட்டத்தரணிகள் ஆஜராகுவதற்கு அனுமதி வழங்குமாறு மனு ஒன்றின் ஊடாக யோஷித ராஜபக்ஷ நீதிமன்றில் கோரியிருந்தார்.

அந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட நீதவான், யோஷித ராஜபக்ஷவுக்காக அவரது சட்டத்தரணிகள் ஆஜராகுவதற்கு அனுமதி வழங்கியிருந்தார். (இ-7-10)

## விஞ்ஞானபீட ஆசிரியர் நியமனத்தில் குறைபாடு

### இலங்கை ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டு


(கொழும்பு)

விஞ்ஞான பீட ஆசிரியர்கள் 3500 பேருக்கு வழங்கப்பட்டுள்ள நியமனக் கடிதங்களில் குறைபாடுகள் இருப்பதாக இலங்கை ஆசிரியர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

குறித்த ஆசிரியர்களுக்கு உரிய சம்பள அளவு அந்த நியமனக் கடிதங்களில் தவறாகக் குறிப்பிடப்பட்டிருப்பதாக அந்த சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். அத்துடன் கடந்த ஆண்டும், விஞ்ஞான பீட ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் போது கல்வியமைச்சின் அதிகாரிகள் இவ்வாறு கவனக் குறைவாக இருந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். குறித்த நியமனக் கடிதங்களில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பள அளவை திருத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கல்வியமைச்சின் செயலாளரிடம் கேட்டுக் கொண்டுள்ளதாக ஜோசப் ஸ்டாலின் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 865

**ராசி**



**சங்கர்**




**துசி**



**வின் ஜக்ஷன்**


இது ஒரு அபூர்வ மாதம்

### ஒக்டோபர் 2016

இம்மாதத்துக்கு ஒரு சிறப்பியல்பு உண்டு. அதுதான்
5 சனிக்கிழமைகளும்
5 ஞாயிற்றுக் கிழமைகளும்
5 திங்கட் கிழமைகளும் ஒரு சேர வந்திருப்பது.

இத்தகைய ஒரு அதிசய மாதத்தை நீங்கள் மீண்டும் காண **823** வருடங்கள் உயிர் வாழ வேண்டும். முடிந்தால் முயற்சித்துப் பாருங்கள்!

**பகி**



**சிந்து**




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

North Lanka IIT

Master of Philosophy [M.Phil.]

பட்டதாரி கற்கைநெறியை நிறைவு செய்த சகலருக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்
முதுதத்துவமானி [M.Phil.]
காலம் : 2 - 3 Years
பாடங்கள்:
பொருளியல் , அரசியல் விஞ்ஞானம் , தமிழ், ஆங்கிலம் , IT , இந்து நாகரிகம் , கிறிஸ்தவ நாகரிகம், இஸ்லாமிய நாகரிகம் , வரலாறு.
ஆகிய பாடங்களில் முதுதத்துவமானி கற்கைநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன
*மானிய ஆணைக்குழு அங்கிகாரம்
*உள்ளூர் பல்கலைக்கழக துறைசார் பேராசிரியர்கள் வழிகாட்டி
*விண்ணப்படிவத்தை சுயமாகத் தயாரித்து பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கவும்.
மேலதிக தொடர்புகளுக்கு : Dr.B.Thanabalan 0770681958

Diploma in IT

சகல அரச உத்தியோகத்தர்களின் பதவி உயர்வுக்குமான Diploma in IT கற்கைநெறி
காலம் : 9-12 மாதங்கள்
வகுப்புகள் யாவும் வார நாட்களில் மாலையில் நடைபெறும்
*விண்ணப்படிவத்தை சுயமாகத் தயாரித்து பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கவும்.
*விரிவுரைகள் யாவும் விஜயதசமி அன்று ஆரம்பமாகும்
மேலதிக தொடர்புகளுக்கு:
Mr.S.Mugunthan Reading Ph.D. - 0777880330
Director - 0767504535

D.Ed. , M.Ed. , B.Ed. , Degree in Physical Education & Sports , B.Sc. in Comp. Sc. , Top Up in B.Sc. in Comp. Sc. , Top Up in B.Sc. in Civil Engineering
வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

People's Bank Bulilding, Top Floor, Stanley Road, Jaffna.

# தமிழ் சினிமா வரலாறு

## சிவாஜியின் சிறந்த படங்களை இயக்கிய ஏ.பீம்சிங்

272

சிவாஜிகணேசன், ஜெமினி கணேசன், சாவித்திரி, சந்திரபாபு, விஜயகுமாரி ஆகியோர் நடித்த இந்தப் படம் பெரிய வெற்றிப்படமாக அமைந்தது.

இதைத் தொடர்ந்து பீம்சிங்கின் அதிர்ஷ்ட சக்கரம் வேகமாகச் சுழன்றது. சிவாஜி-பீம்சிங் கூட்டணியில் பாகப்பிரிவினை, படிக்காதமேதை, பாவமன்னிப்பு, பாசமலர், பாலும் பழமும், பார்த்தால் பசி தீரும், படித்தால் மட்டும் போதுமா, பார் மகளே பார் என்று ப வரிசைப் படங்கள் தொடர்ந்து வெளிவந்து மகத்தான வெற்றி பெற்றன.

### இந்திப் படங்கள்

இந்தி, கன்னடம், தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிப் படங்களையும் பீம்சிங் டைரக்ட் செய்தார்.

களத்தூர் கண்ணம்மாவை ஏவி.எம்.புரொடக்ஷன்ஸ் இந்தியில் எடுத்தனர்.பீம்சிங் டைரக்ட் செய்தார். படம் வெற்றி பெற்றது.

ஜி.என்.வேலுமணி தமிழில் தயாரித்த பாகப்பிரிவினை படத்தின் கதையை வாசுமேனன் வாங்கி கான்தான் என்ற பெயரில் இந்தியில் தயாரித்தார். தமிழில் சிவாஜி கணேசன் நடித்த வேடத் தில் சுனில் தத் நடித்தார்.

பீம்சிங் டைரக்ஷனில் உருவான இந்தப் படம் சுப்பர் ஹிட்டாக அமைந்தது. வட நாட்டில் 60 வாரம் ஓடி வசூலைக் குவித்தது. இந்தப்படத்தின் இலாபத்தைக் கொண்டு பிலிம் சென்டர் ஸ்டூடியோவை வாசுமேனன் வாங்கி வாசு ஸ்டுடியோ என்ற பெயரில் நடத்தினார்.

படிக்காத மேதை, முரடன் முத்து ஆகிய படங்களிலும் பீம்சிங் டைரக்ஷனில் இந்தியில் தயாரிக்கப்பட்டு வெற்றி பெற்றன.

### பழநி

பீம்சிங் சிவாஜிகணேசனை வைத்து சொந்தமாக பழநி என்ற படத்தை எடுத்தார். அவருக்கு ராசியான ப எழுத்தில் பெயர் வைத்தும் படம் ஓடவில்லை. இதே போல் பாதுகாப்பு என்ற படமும் வெற்றி பெறவில்லை.

இத்துடன் ப வரிசைப் படங்களின் பவனி முடிவுற்றது.

### சில நேரங்களில் சில மனிதர்கள்

பீம்சிங்கின் பிற்காலப் படங்களில் வெற்றிகரமாக ஓடியது சில நேரங்களில் சில மனிதர்கள். இது பிரபல எழுத்தாளர் ஜெயகாந்தன் எழுதிய நாவல்.

இப்படத்தில் சிறப்பாக நடித்ததற்காக அகில இந்திய சிறந்த நடிகைக்கான ஊர்வசி விருதை லட்சுமி பெற்றார்.



பீம்சிங் டைரக்ட் செய்த "பாவமன்னிப்பு" படத்தில் சிவாஜிகணேசன், தேவிகா.

### மாரடைப்பில் மரணம்

1977ஆம் ஆண்டுக் கடைசியில் பீம்சிங் உடல் நலம் இல்லாமல் இருந்தார். டிசம்பர் 30ஆம் திகதி மைலாப்பூர் இசபெல்லா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றார்.

16.01.1978 அன்று பிற்பகல் 2.30 மணி அளவில் பீம்சிங்குக்கு மாரடைப்பு ஏற்பட்டது. தீவிர சிகிச்சை அளித்தும் பலன் அளிக்காமல் மரணம் அடைந்தார்.


தஞ்சை மாவட்டம் சூரக்கோட்டைக்கு சென்றிருந்த சிவாஜிகணேசனுக்கு டைரக்டர் பீம்சிங் மரணச்செய்தி தொலைபேசி மூலம் தெரிவிக்கப்பட்டது. உடனே சிவாஜிகணேசன் சென்னைக்கு விரைந்து வந்து கண்ணீர் அஞ்சலி செலுத்தினார்.

நடிகைகள் பத்மினி, கே.ஆர்.விஜயா, லட்சுமி, சுமித்திரா,மனோரமா, ஜெயபாரதி, எம்.வி.ராஜம்மா, நடிகர்கள் நாகேஷ், சோ, டைரக்டர்கள் மாதவன், பஞ்சு, இசை அமைப்பாளர்கள் சங்கர்-கணேஷ், பட அதிபர்கள் ஜி. என். வேலுமணி, பெருமாள், அரங்கண்ணல், எழுத்தாளர் ஜெயகாந்தன் ஆகியோர் இறுதி மரியாதை செலுத்தினார்கள். (தொடரும்)

# 'எழுந்து நிற்போம்' கவனயீர்ப்பு - விழிப்புணர்வு


























படங்கள் ;-
சாளின், சோபிகா, மகாலிங்கம்

விபத்துக்களால் உயிரிழந்தவர்களின் நினைவாக 4 அம்ச கோரிக்கைகளை முன்வைத்து "எழுந்து நிற்போம்" எனும் தொனிப்பொருளில் ஒரு மணி நேர கவனயீர்ப்பு நிகழ்வு நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்.போதனா வைத்தியசாலை அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் கோரிக்கைக்கு அமைவாக அரச திணைக்களங்கள், வைத்தியசாலைகள், பாடசாலைகள், வங்கிகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் போன்றவற்றின் முன்னால் முற்பகல் 10 மணி தொடக்கம் 11 மணி வரை இந்த கவனயீர்ப்பு நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

வடபகுதியில் யுத்தத்துக்கு பின்னரான காலப்பகுதியில் வீதி விபத்துக்களால் இறப்பவர்கள், காயமடைபவர்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து செல்கிறது. அதிகரித்துச் செல்லும் வாகனப் பாவனை, கட்டுமீறிப் போகும் மதுபான போதைப்பொருள் பாவனை, வீதி ஒழுங்கு முறைகள் சரியாக அமுல்படுத்தப்படாமை போன்ற காரணங்களால் உயிரிழப்புக்கள் ஏற்படுகின்றன.

இந்த உயிரிழப்புக்களை தவிர்ப்பதற்கு 4 அம்ச கோரிக்கைகளை முன்வைத்து அரசிடம் அதை அமுல்படுத்த வலியுறுத்தி ஒரு மணி நேர கவனயீர்ப்பு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதாவது குறுகிய கால அறிவித்தலுடன் வீதி ஒழுங்கு முறைகளை சட்ட நடைமுறைகளுக்கு அமைய வடபகுதியில் முழுமையாக அமுல்படுத்தல். பொதுமக்களின் சேவையில் ஈடுபடும் எந்தவொரு வாகனமும் வீதி ஒழுங்கினை கடைப்பிடிக்காது விபத்துக்கு காரணமாக அமையுமாயின் அந்த வாகனத்தினையும் சாரதியினையும் முற்றாக பொது மக்களின் சேவையில் இருந்து நீக்கி விடுதல். வீதி ஒழுங்கினை கடைப்பிடிக்காது பயணிக்கும் பொதுமக்களின் சேவையில் ஈடுபடும் வாகனங்களை பற்றி பொதுமக்கள் உடனுக்குடன் போக்குவரத்து பொலிஸாரிடம் முறையிட வசதியாக அவசர தொலைத்தொடர்பு இலக்கங்களை மாவட்டம் தோறும் வெளியிடுதல், மதுபான விற்பனையும் மதுபான பாவனையும் கட்டுப்படுத்துவதுடன் போதைப் பொருட்களின் பயன்பாட்டை வடபகுதியில் முற்றாக ஒழித்தல் போன்ற 4 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து விபத்துக்களினால் உயிரிழந்தவர்களை நினைவுபடுத்தி இந்த "எழுந்து நிற்போம்" எனும் கவனயீர்ப்பு நடைபெற்றது.

வடபகுதி தொழில் சங்கங்களின் பிரதிநிதிகளினால் மேற்குறிப்பிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கையொப்பமிட்ட மனு ஒன்று யாழ். மாவட்ட அரச அதிபரின் ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டதுடன் அதன் பிரதிகள் பிரதமர், எதிர்க்கட்சித்தலைவர், நீதித்துறை அமைச்சர், வடமாகாண ஆளுநர், வடமாகாண முதலமைச்சர், சட்ட ஒழுங்கு அமைச்சர், பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (இ-9)

# வித்தைகள் பயில உகந்தநாள் விஜயதசமி

புராணங்கள் போற்றும் புனிதமான விரதம் நவராத்திரி விரதம் ஆகும். இப்புனிதமான நவராத்திரி விரதத்தினை எப்படிக் கொண்டாடுகின்றார்கள்? இதன் விதிமுறைகள் எத்தகையது என்பதனை ஆராய்வோம்.

விரதம் என்பது அகத்தூய்மையும் புறத்தூய்மையும் வாய்ந்ததாக இருக்க வேண்டும்.

இந்துக்களின் சிறப்பு வாய்ந்த விரதங்களினுள் நவராத்திரி விரதமும் மிகவும் சிறப்பு வாய்ந்த விரதமாகும்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த நவராத்திரி விரதத்தின் மகிமையை நோக்கிப் பார்ப்போம்.





நவராத்திரி விரதம் கும்பபூஜை முதல் ஆரம்பம்.

இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞானா சக்திகளை அருளும் பூமகள், மாமகள், நாமகள் மூவரையும் ஒரே அம்சமாக கலசம் ஒன்றில் எழுந்தருள வேண்டி நிற்பது தான் இந்தப் பூஜையின் நோக்கம்.

நவராத்திரி தொடங்கும் நாளன்று அதிகாலையில் எண்ணெய் தேய்த்துக் குளித்து விட்டு கொலு வைக்க போகின்ற இடத்தில் கிழக்குத் திசைநோக்கி அமர்ந்து பூஜை தொடங்குவது பாரம்பரியமான வழக்கம்.

முதலில் மரப்பலகை ஒன்றை எடுத்துக் கொண்டு அதனை நன்றாகத் தூய்மை செய்து கோலம் போடுதல் வேண்டும். அதற்கு மேல் தலை வாழையிலை வைத்து நெல் அல்லது அரிசியைப் பரப்பி தூயநீர் கலந்த செம்புக் கலசத்தை வைத்து கற்பூரம், சந்தனம், பூவிதழ்களை நீரில் கலந்து புதிய சில்லறைக் காசுகளையும் விட வேண்டும்.

கலசத்தில் (செம்பு) வாய்ப்பகுதியில் புதிய மாவிலைகள் ஒற்றை எண்பட வைத்து மஞ்சள் பூசப்பட்ட தேங்காயை கலசத்தின் மேல் வைக்க வேண்டும்.

கலசத்தின் கழுத்துப் பகுதியை சிவப்பு நிறப் பட்டுத்துணியால் கட்ட வேண்டும்.

சாமியறையில் விளக்கேற்றிய பின்பு கலசத்தின் முன்னேயும் விளக்கேற்றி வைத்து விடலாம்.

கலசத்தின் முன்பாக ஒரு வெற்றிலையை வைத்து மஞ்சள் பொடியினால் பிள்ளையார் பிடித்து வைத்து சந்தனம்,குங்குமம் பொட்டு, பூ வைத்து விட வேண்டும்.

அதன்பின் சாம்பிராணி தூபம் ஏற்றவேண்டும். முதல் வணக்கத்துக்குரிய விநாயகப் பெருமானை வழிபட்டு விட்டு துர்க்கை, இலட்சுமி, சரஸ்வதி போன்ற தெய்வங்களை கலசத்தில் எழுந்தருள வேண்டும் எனப் பிரார்த்தித்து தூபம், தீபம் காட்டி வழிபடவேண்டும்.

பால்பாயாசம், காய்ச்சிய இனிப்பான பசுப்பாலை நைவேத்தியம் செய்யலாம்.

இக் கலச அமைப்பினை அப்படியே வைத்திருந்து நவராத்திரியின் 9 நாட்களும் அடுத்த விஜயதசமியின் முதல் பூஜையை இதற்கே செய்ய வேண்டும்.

கொலு வைக்கும் பொழுது கொலுவுக்குரிய நிவேதனமும் முதலில் இக்கலச அமைப்பிற்கே செய்ய வேண்டும். சக்தி பற்றிய பாடல்களை படிக்கவும் கேட்கவும் வேண்டும்.

தினமும் இப்பூஜையை செய்து முடிக்கும் வரை உணவு உட்கொள்ளாமல் இருப்பது சிறப்பைத் தரும்.

இவ்வாறு அனுஷ்டிக்க முடியாதவர்கள் சிறிதளவு பால், பழம் எடுத்துக் கொள்ளலாம்.

முதல் நாள் வைத்த கலசத்திற்கே அடுத்தடுத்த நாட்களில் புதிய மலர்கள் வைத்து நிவேதனமும் செய்ய வேண்டும்.

ஒன்பது நாட்களும் அம்பிகைப் பாடல்களைப் பாடுவதும் கேட்பதும் தொடர வேண்டும்.

முதல் நாட்களில் துர்க்கையும் அடுத்த மூன்று நாட்கள் இலட்சுமியையும் கடைசி மூன்று நாட்களில் சரஸ்வதியையும் வணங்குவது வழக்கம்.

நவராத்திரியின் கடைசி மூன்று நாட்கள் சரஸ்வதிக்குரிய மூல நட்சத்திரம் உச்சமாக இருக்கும் நாளில் சரஸ்வதி தேவி தோன்றுகின்றாள் என்பது ஐதீகம்.

எதற்குமே ஒரு மூலம் என்பதை உணர்த்தும் விதமாக கலைமகள் மூல நட்சத்திரத்தில் அவதரித்தாள் என்பர்.

ஞானம், கல்வி இவை மட்டுமன்றி ஆயுள் ஆரோக்கியமும் அதிகரிக்க சரஸ்வதியின் கடாட்சத்தால் கிட்டும் என்கிறது பவிஷ்யோத்திர புராணம். நவராத்திரியின் ஒன்பது நாட்களிலும் பூஜை,விரதம் இவற்றை ஒழுங்காக அனுஷ்டிக்க வேண்டும் என்றும் இயலாதவர்கள் அஷ்டமி திதி வரும் நாளில் மட்டுமாவது அவசியம் விரதம் இருக்க வேண்டும் எனப் புராணங்கள் கூறுகின்றன.

விஜயதசமி தினத்தன்று அம்பிகை வெற்றிவாகை சூடினாள்.

ஆணவம் சக்தியாலும் வறுமை செல்வத்தாலும் அறியாமை ஞானத்தினாலும் வெற்றி கொள்ளப்பட்ட தினம் ஆகும்.

எனவே விஜயதசமி தினமானது மிகவும் சிறப்பானது.

அன்றைய தினம் புதிதாக தொடங்கும் எந்தக் கலையும் எளிதாக கிடைக்கும் என்ற நம்பிக்கை இந்துக்களிடையே இன்றும் நிலவுகின்றது.

நவராத்திரி பண்டிகையின் நிறைவு நாளும் இதுவாகும்.

பூஜையில் பயன்படுத்திய கலசத்தின் முன்பாக அமர்ந்திருந்து முப்பெரும் சக்தியை மனதால் வேண்டிக் கொண்டு ஆரத்தி எடுக்கலாம்.

முப்பெரும் தேவியரும் இக்கலசத்தில் நிறைந்திருப்பது போல இனி என்றென்றும் நமது இல்லத்தில் நிலைத்திருக்க வேண்டிக்கொண்டு கலசத்தில் உள்ள நீரை வீடு முழுவதும் தெளித்து பூஜையை முழுமை செய்ய வேண்டும்.



இவ்வாறு முப்பெரும் தேவிகளை முறைப்படி வழிபட்டு சிறப்புற வாழ்வோம் நாம்.

மிஷாந்தி செல்வராஜா
அரியாலையூர்.

ஆத்திரத்தில் எடுக்கப்பட்ட முடிவு வாழ்வின் சரிவுக்கு காரணமாகும்.

- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## முன்னாள் ஜனாதிபதியின் கர்ச்சிப்புக்கு காரணமானவர்கள் யார்?

ஜனாதிபதி மைத்திரியின் ஆட்சியை கவிழ்ப்பேன் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சூளுரைத்துள்ளார். இந்தச் சூளுரை சாத்தியமாகுமா என்பதற்கு அப்பால் மகிந்தவின் சூளுரைப்பு நல்லாட்சிக்கு குலைநடுக்கத்தை ஏற்படுத்தவே செய்யும்.

ஏனெனில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் நிறையவே ஆட்சியில் உள்ளனர் என்பதுடன் மகிந்த ராஜபக்ஷவும் எதற்கும் துணிந்து களமிறங்கக் கூடியவர்.

எனவேதான் தனிக்கட்சி அமைப்பது ஆட்சியைக் கைப்பற்றுவது என்ற மகிந்த ராஜபக்ஷவின் சூளுரையினை சாதாரண விடயமாகக் கருதி விடக் கூடாது.

ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் தோல்வியைத் தழுவியிருந்த மகிந்த ராஜபக்ஷ பதவி இழப்புக்குப் பிறகும் காட்டுகின்ற தடிப்பை, ஆட்சியைப் பெற்றுக்கொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரால் காட்ட முடியவில்லை என்பதுதான் இங்கு கவனிக்கப்பட வேண்டிய விடயம்.

அதாவது ஆட்சியில் இருப்பவர்களின் தடிப்பை விட பதவியை இழந்த மகிந்த ராஜபக்ஷவின் அதிகாரத் தொனி கூடுதலாகவே உள்ளது.

இதற்குக் காரணம் என்னவென்று ஆராயப்படுமாக இருந்தால் அதற்கான பதில் இரண்டு காரணங்கள் என்று கண்டறியப்படும்.

இதில் ஒன்று நல்லாட்சியின் பலவீனம். அதாவது நல்லாட்சியில் அபிவிருத்தித் திட்டங்களோ இனப்பிரச்சினைக்கான தீர்வுகளோ பலமாக முன்வைக்கப்படவில்லை.

இதுமட்டுமன்றி சாதாரண விடயங்களில் கூட நல்லாட்சியிடம் ஒரு அசமந்தத்தனமே காணப்படுகின்றது. சமகால உலகில் அதிவேக பயணத்தில் நல்லாட்சியில் இந்த காலங்கடத்தும் நிர்வாகப் போக்கு மக்களுக்கு வெறுப்பைத்தரும் என்பது தவிர்க்க முடியாத உண்மை.

தவிர முன்னாள் ஆட்சியாளர்கள் மீது உரிய நடவடிக்கை எடுப்பது நல்லாட்சியைக் காப்பாற்றுவதாக இருந்திருக்கும்.

எனினும் முன்னைய ஆட்சியாளர்களுக்கு எதிராக எடுக்கப்படுகின்ற சட்ட நடவடிக்கைகள் தமிழ் மக்களுக்கு சாதகமாக அமைந்து விடுமோ என்ற பயத்தின் காரணமாக முன்னைய ஆட்சிக்கு எதிரான நடவடிக்கைகள் கைவிடப்படுகின்ற நிலையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கர்ச்சிப்பு பலமாக எழுகை பெற்றுள்ளது.

இது ஒரு புறமிருக்க, மகிந்த ராஜபக்ஷவை ஆட்சியில் இருந்து இறக்கினால் அது தமக்கான வெற்றி என அமெரிக்காவும் இந்தியாவும் கருதின. இந்த கருத்துடன்பாட்டில் இந்தியா மறைமுகமான வகிபங்கையே கொண்டிருந்தது.

மகிந்த ராஜபக்ஷவை பதவி இறக்கம் செய்து மைத்திரியை ஜனாதிபதியாகவும் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராகவும் ஆக்கிவிட்டால் இலங்கை என்ற நாட்டில் சகல பிரச்சினைகளும் தீர்ந்து போகுமென்பது அமெரிக்காவின் நிலைப்பாடு.

இந்த நிலைப்பாடு காரணமாக வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை அவசியம் என்ற கோரிக்கையை ஜெனிவாவில் வலுக்குறைப்பு செய்ததில் அமெரிக்கா அதிகூடிய பங்கு வகித்தது.

கூடவே மைத்திரி-ரணில் ஆகியோரின் அரசும் போர்க்குற்றச்சாட்டில் இருந்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை காப்பாற்றுவதில் கடும் பிரயத்தனம் செய்தது.

இதன் விளைவுதான் மைத்திரியின் அரசைக் கவிழ்த்து புதிய அரசை அமைப்பேன் என்ற முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சபதமாகும். ஆக, சர்வதேச போர்க்குற்ற விசாரணையை மேற்கொள்ளாமல் தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்க நினைத்த அமெரிக்காவும் இந்தியாவும் நல்லாட்சிக்கு சதா ஏக்கத்தை ஏற்படுத்தி விட்டுவிட்டன.

சர்வதேச போர்க்குற்ற விசாரணையை முன்னெடுக்காமல் விட்ட அமெரிக்கா தமிழ் மக்களுக்கு எதிராகவே அதை செய்ய நினைத்ததாயினும் அதன் விளைவு இன்று நல்லாட்சிக்கு பாதகமாக மாறி வருகின்றது.

எதுஎப்படியாயினும் இன்னமும் காலம் கடந்து போகவில்லை. உடனடியாக சர்வதேச போர்க்குற்ற விசாரணை ஆரம்பிக்கப்பட்டால் எல்லாம் சரியாகும்.

இதை செய்வதற்கு நல்லாட்சி தயங்கும் ஒவ்வொரு கணப்பொழுதும் நல்லாட்சியின் ஆயுளை வலுவேகமாக குறையச் செய்யும் என்பது ஏற்புடைய உண்மை.

எனவே கிடைத்த அதிகாரத்தை - ஆட்சியை தக்க வைக்க வேண்டுமாயின் அதற்கான ஒரேவழி சர்வதேச போர்க்குற்ற விசாரணையும் இனப் பிரச்சினைக்கான தீர்வும் விரைந்து மேற்கொள்வதே ஆகும்.

# அதிகரிக்கும் விபத்துக்களை கட்டுப்படுத்த விதிமுறைகளை கடுமையாக்க வேண்டும்

## யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் அதிகரிக்கும் விபத்துக்களை கட்டுப்படுத்துவதற்கு பொலிஸார விபத்து விதிமுறைகளை கடுமையாக கடைப்பிடிக்க வேண்டும் எனயாழ்போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் என். சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார். விபத்து தொடர்பில் விழிப்பு ணர்வை ஏற்படுத்தும் வகை யில் எழுந்து நிற்போம் என்ற தொனிப் பொருளில் நேற்றைய தினம் வைத்தியசாலை முன்பாக கவனயீர்ப்பு ஒன்று இடம் பெற்றது. இதன் போது கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு மாகாணத்தில் விபத்துக்களால் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வயது வந்தவர்கள் மாண்டு போகின்றார்கள். பலர் அங்கவீனர்களாகியும் உள்ளனர். இந்த அவலம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். வீதி விபத்துக்களால் ஏற்படுகின்ற உயிர் மற்றும் பொருளாதார இழப்புக்களை நிறுத்துவதற்காக இந்த விழிப்புணர்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோம்.

எமது வைத்தியசாலை வைத்தியர்கள், ஊழியர்கள், தாதியர்கள் என அனைத்து சமூகத்தினரும் இணைந்து ஒரு மணித்தியால விழிப் புணர்வு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றோம். எங்களுடைய நோக்கம் அதிகரித்து வரும் விபத்துக்களை கட்டுப்படுத்துவதே, வீதி ஒழுங்கு நடைமுறைகளை சரியான முறையில் பின்பற்றுவதன் மூலம் விபத்துக்களை கட்டுப்படுத்த முடியும்.

இந்த நடைமுறைகளை சிறந்த முறையில் அமுல் படுத்துவதற்கு பொலிஸார் முன்வர வேண்டும். தங்களுடைய கடமைகளை பொலிஸார் சரிவரச் செய்ய வேண்டும். வீதிகளை பாதுகாக்கும் வீதி போக்குவரத்து திணைக்களம் மற்றும் மாநகர சபை ஆகியனவும் ஆலோசனைகளை மேற்கொள்ள வேண்டும். வீதி விபத்தினை தடுப்பது வெறுமனே பொலிஸ் தரப்பின்கடமையல்ல. அனைத்து தரப்பும் கவனமெடுத்து செயற்பட வேண்டும்.

இதன் மூலமே இங்கு நடைபெறும் வீதிவிபத்து இறப்புக்களை குறைத்துக் கொள்ள முடியும் என யாழ். போதனா வைத்திய சாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி என்.சத்தியமூர்த்தி மேலும். தெரிவித்தார். இதன் போது கருத்து தெரிவித்த வைத்தியர் கே.குலநாயகம், 3 ஆயிரத்திற்கும் அதிக மான விபத்து சம்பவங்கள் யாழில் மட்டும் ஒவ்வொரு வருடமும் பதிவாகின்றன.

இதில் 68 பேர் உயிரிழந்துள்ளனர். எனினும் இறப்பு மட்டும் தான் எமக்கான பிரச்சினை அல்ல, வீதி விபத்துக்களினால் உடல் அவயங்களை இழப்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்த வண்ணம் உள்ளன. இதுவும் ஒரு சமூகத்திற்கு பெரும பிரச்சினையாக உள்ளது. இதனால் இந்த வருடத்தில் முதல் காலாண்டில் ஐந்நூறுக்கும் அதிகமாகவும் இவ்வாறு நடைபெற்றுள்ளன.

வீதி விபத்துக்கள் ஏற்படுவதற்கு பிரதான காரணமாக அமைவது மதுபோதையில் வாகனம் செலுத்துவது தான். அடுத்து கனரக வாகனங்களால் ஏற்படும் உயிரிழப்பும் அதிகமாக உள்ளது. வைத்தியசாலைகளில் இரவு10 மணியளவில் வருவோர் மதுபோதையில் விபத்துக்குள்ளான நிலையிலேயே வருகின்றனர். இவ்வாறு விபத்துக்குள்ளானவர்களோடு மேலும் பத்துப் பேர் மதுபோதையில் வந்து வைத்தியசாலை பணிகளுக்கு இடையூறு விளைவிக்கின்றனர்.

இவ்வாறு தான் யாழ்ப்பாணத்தின் நிலை உள்ளது. இவை எல்லாவற்றுக்கும் முற் றுப்புள்ளி வைக்கும் முகமாகவும் விபத்துக்களால உயிரிழந்தவர்கள் தொடர்பிலும் கரிசனை செலுத்தும் முகமாகவும் இந்த விழிப்புணர்வு நடவடிக்கையை முன்னெடுக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

# முன்னாள் பொலிஸ்மா அதிபர் மகிந்த பாலசூரிய ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன் நேற்று ஆஜர்

(கொழும்பு)

முன்னாள் பொலிஸ்மா அதிபர் மகிந்த பாலசூரிய நேற்று பாரிய ஊழல் மோசடிகள் தொடர்பிலான விசாரணைகளுக்கான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் அமைச்சராக இருந்த விமல் வீரவன்சவின் கோரிக்கைக்கு அமைய அவரது கட்சியான தேசிய சுதந்திர முன்னணியின் ஐந்து உறுப்பினர்களுக்கு சட்ட விரோதமான முறையில் பாதுகாப்பு வழங்கியதாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலான விசாரணைகளுக்காகவே மகிந்தபாலசூரிய நேற்று விசாரணைக்கு அழைக்கப்பட்டார்.

மகிந்த தலைமையிலான கூட்டு எதிர்க்கட்சியின் முக்கியஸ்தரான நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவின் கட்சியைச் சேர்ந்த முகமட் முஸம்மில், சிசிர குமார திஸாநாயக்க, உட்பட ஐவருக்கு 2010 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை ஆயுதங்களுடன் கூடிய பொலிஸ் பாதுகாப்பை வழங்கியதாக மகிந்த பாலசூரிய மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

முன்னாள் பொலிஸ்மா அதிபரின் இந்த நடவடிக்கையால அரசாங்கத்திற்கு மூன்று கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய நேற்று இடம்பெற்ற விசாரணைக்காக காலை 9 மணிக்கே முன்னாள் பொலிஸ்மா அதிபர் மகிந்த பாலசூரிய, ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகியுள்ளார்.

இதேவேளை சண்டே லீடர் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை தொடர்பிலான சாட்சியங்களை அழிப்பதற்கும், விசாரணைகளை மூடி மறைப்பதற்கும் முன்னாள் பொலிஸ்மா அதிபர் மகிந்த பாலசூரிய அழுத்தம் கொடுத்திருந்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளார்.

இந்த குற்றச்சாட்டிற்காக ஏற்கனவே அவர் குற்றப் புலனாய்வுப் பிரிவு பொலிஸாரினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்.

அது மாத்திரமன்றி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.ஸ்ரீரங்கா சென்ற வாகனமொன்று 2011 ஆம் ஆண்டு வவுனியா செட்டிகுளம் பகுதியில் விபத்துக்குள்ளானதில் அவரது பாதுகாப்பு அதிகாரி உயிரிழந்த சம்பவம் தொடர்பான விசாரணைகளிலும் தலையிட்டு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரை காப்பாற்றியதாகவும்முன்னாள்பொலிஸ்மா அதிபர் மகிந்த பாலசூரிய மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

2011 ஆம் ஆண்டு மார்ச மாதம் 30 ஆம் திகதி வவுனியா செட்டிகுளம் பகுதியில் அதிகாலை 4.30 அளவில் இடம்பெற்ற இந்த வாகன விபத்தின் போது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.ஸ்ரீரங்காவே வாகனத்தை செலுத்திச் சென்றதாக குற்றப்புலனாய்வுப் பிரிவு பொலிஸார் நடத்தி வரும் புதிய கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

எனினும் பதிவுசெய்யப்படாத லேண்ட் குரூஸர் ரக வாகனத்தை மதவாச்சி - மன்னார் வீதியில் வாகனத்தை செலுத்தி, செட்டிகுளம் வைத்தியசாலை மதிலில மோதியது அவரது மெய்ப்பாதுகாவலர் என விசாரணை அறிக்கையை அரசியல் அழுத்தம் காரணமாக அப்போதைய பொலிஸ்மா அதிபர் மகிந்த பாலசூரிய தலையிட்டு மாற்றியமைத்ததாக அவர் மீதான குற்றச்சாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## வாணிவிழா இன்று

யாழ்ப்பாணம் நீர்வேலி சி.சி.த.க. பாடசாலையின் வாணி விழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம் பெறும்.

பாடசாலை முதல்வர் த.ரவீந்திரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சிவஸ்ரீ மயூரகிரிசர்மா (பழைய மாணவன்), சிறப்பு விருந்தினராக யாழ். கல்வி வலய சைவநெறிப்பாட ஆசிரிய ஆலோசகர் திருமதி பா.பாலசிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன் கிழமை காலை 8.30மணியிலிருந்து 6 மணி வரை யாழ். பிரதேசத்தில வறுத்தலைவிளான், டச்சு வீதி தெல்லிப்பழை, தோப்பு, அச்சுவேலி, அச்சுவேலி வல்லை வீதி பலாலி தெற்கு, செல்வநாயகபுரம், பத்தமேனி, பாரதி வீதி, தம்பாலை, இடைக்காடு, வளலாய், அச்செழு, காங்கேசன்துறை கரிசன் 5ஆவது பொறியியல் படைமுகாம், காங்கேசன்துறை வடக்கு கடற்படை முகாம், பலாலி இராணுவத் தலைமைக் காரியாலயம், மயிலிட்டி கரிசன் 5வது பொறியியல் படைமுகாம், பலாலி இலங்கை விமானப் படை முகாம், மயிலிட்டி கரிசன் 5வது பொறியியல் படைமுகாம் (புதியது), பலாலி விமானப்படை ஓய்வு காலவிடுதி ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில அரிப்பு, சவேரியார்குளம், CECB ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# ரி.ஆர்.ஆர்.ராஜன் ஞாபகார்த்தமாக ரோட்டறி கழகங்களுக்கிடையிலான கிரிக்கெட் போட்டி

## நல்லூர் ரோட்டறி இரண்டாமிடம்



கண்டி ரோட்டறி கழகம் நடத்திய ரி.ஆர்.ஆர்.ராஜன் ஞாபகார்த்த 14 ஆவது கிரிக்கெட் போட்டியில் நல்லூர் ரோட்டறி கழகம் இரண்டாம் இடத்தை பெற்றுக்கொண்டது. 5 பந்துப்பரிமாற்றம் 6 பேர் கொண்ட இப்போட்டியின் இறுதிப் போட்டி கண்டி அஸ்கிரிய சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.இதில் அநுராதபுரம் ரோட்டறிக்கழகத்துக்கும் நல்லூர் ரோட்டறி கழகத்துக்கும் இடையில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அநுராதபுர அணி 5 ஓவர் முடிவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 76 ஓட்டங்களைப்பெற்றது.பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நல்லூர் அணி 5 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 61 ஓட்டங்களைப் பெற்று இரண்டாம் இடத்தை பெற்றது. இப்போட்டியில் இலங்கையிலுள்ள 30 ரோட்டறி கழகங்கள் போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கது. (கு)

# இன்றைய போட்டிகள்

வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண வல்லவன் உதைபந்தாட்ட தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 8மணிக்கு நடைபெறும் போட்டியில் கில்லரி அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ். மாவட்ட ரீதியிலான 11பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டியில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் கொலின்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து புத்தூர் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகமும் மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சென்ஜேம்ஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (கு)

# தற்பரன் வெற்றிக்கிண்ணம் ஞானவைரவர் அணி வசம்



கோல்ட்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்திய தற்பரன் வெற்றிக் கிண்ணம் மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப்போட்டி நடைபெற்றது.

11 அணிகள் விலகல் முறையில் சுற்றுக்கள் நடைபெற்று இறுதிப் போட்டிக்கு முரசொலி மற்றும் ஞான வைரவர் அணிகள் இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றன.

இறுதிப்போட்டியானது நேற்று முன்தினம் யூனியன் மைதானத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

இறுதிப்போட்டி நிகழ்வில் சிறப்பு விருந்தினராக 521 ஆவது படைப்பிரிவின் கேணல் நுனுவில,மேஜர் செனவீரட்ன ஆகியோரும் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக கோல்ட் அணியின் ஆலோசகர் கஜேந்திரன் (ISA,வலிகாமம் பிரிவு) உடற்பயிற்சி ஆசிரியர், தர்சா தமிழ் பதிப்பக உரிமையாளரும் கோல்ட்ஸ்ரார் அணியின் ஆலோசகருமாகிய தனுசனும் நிகழ்வில் கலந்து சிறப்பித்தார்கள்.

இவ் இறுதிப்போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய முரசொலி அணி 9பந்துப்பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 61 ஓட்டங்களை பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஞான வைரவர் அணி 4பந்துகள் மீதமிருக்க 9.2 ஓவர்களில் 5 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இறுதிப்போட்டியின் ஆட்ட நாயகனாக ஞானவைரவர் அணியின் கயூரனும் தொடர் நாயகனாக ஞான வைரவர் அணியின் விதுரனும் தெரிவாகினர். (கு)

# சோமஸ்கந்தன் வி.க. கரப்பந்தாட்ட முடிபுகள்

புத்தூர் சோமஸ்கந்தன் விளையாட்டுக்கழகம் நடத்தும் மின்னொளியிலான கரப்பந்தாட்டப் போட்டியில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற போட்டியில் முதலாவது போட்டியில் கலைமதி B2 (வி.க) எதிர்த்து அம்பாள்(வி.க) போட்டியிட்டது. இதில் கலைமதி B2 (வி.க) 25:12,25:22 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றது. 2 ஆவது போட்டியில் நவஜீவன் (வி.க) எதிர்த்து சங்கானை ஐக்கிய (வி.க) போட்டியிட்டது. இதில் நவஜீவன் (வி.க) 25:16,25:16 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றது. (கு)

# வடக்கின் சுப்பர் கிங் போட்டி முடிபுகள்

யாழ்.லீக் அனுசரணையுடன் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் நடத்தும் வடக்கின் சுப்பர் கிங் பட்டத்திற்கான மாபெரும் உதைபந்தாட்டப் போட்டியில் கடந்த சனிக்கிமை நடைபெற்ற போட்டியில் புத்தூர் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யாழ். பாரதி விளையாட்டுக் கழகம் மோதியது. இதில் 2:1 என்ற கோல் கணக்கில் விக்னேஸ்வரா அணி வெற்றி பெற்றது.

நடைபெற்ற மற்றைய போட்டியில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழகம் 4:1என்றகோல்கணக்கில் இளைஞர் அணி வெற்றி பெற்றது. (கு)

# மாகாணங்களுக்கு இடையேயான நட்பு ரீதியான உதைபந்தாட்டப் போட்டி

## வடமாகாண தெரிவு அணி வெற்றி



அம்பாறையில் இடம்பெற்ற கிழக்கு மாகாண தெரிவு அணி மற்றும் வடக்கு மாகாண தெரிவு அணிகளுக்கு இடையிலான நட்புரீதியான உதைபந்தாட்டப் போட்டியில் வடக்கு தெரிவு அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

வடக்கு அணி சார்பில் பிறேம்குமார், கஜந்தன் ஆகியோர் கோல்களை தமது அணிக்காக பெற்றுக் கொடுத்ததுடன் வடக்கு அணிக்கு பிறேம்குமார்(பீமா) தலைவராகவும் அன்ரன் சாள்ஸ்(தங்கன்) உபதலைவராகவும் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது. வடமாகாண அணிக்கு பரவலாக எல்லா மாவட்டத்தில் இருந்தும் எல்லா லீக்கில் இருந்தும் வீரர்கள் தெரிவு செய்யப்பட்ட போதிலும் இறுதி நேரத்தில் தவிர்க்க முடியாத காரணங்களினால் சில மாவட்ட வீரர்கள் மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள சில லீக்கின் வீரர்களும் கலந்து கொள்ளாத காரணத்தினால் ஏற்பாட்டாளர்கள் பெரும் சிரமத்தின் மத்தியிலும் மேலதிகமான யாழ். மற்றும் வவுனியா மாவட்ட வீரர்களை உள்ளடக்கியே நட்பு ரீதியான போட்டியினை நடத்தியமை குறிப்பிடத்தக்கது. (கு)

## இனியும் அரசியலில்...

என்பதை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த தேர்தலின்போது தெரிவித்திருந்தார். நாட்டின் ஐக்கியம், பௌத்த மதத்திற்கு வழங்கப்பட்டுள்ள முன்னுரிமை, வேறு மதங்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகள் தேசிய கொடி, தேசிய கீதம் என்பவற்றை மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் மாற்றியமைக்க முடியாது. இவற்றை மாற்றுவதாயின் பொதுமக்கள் கருத்துக்களும் பெறப்பட வேண்டும். எனினும் தங்கள் மீதுள்ள ஊழல் மோசடி குற்றச்சாட்டுக்களை மூடி மறைக்கவே பொய்யான விடயங்களை பரப்புகின்றனர். இந்த புதிய அரசியலமைப்பு உருவாக்கம் என்பது மூடிமறைத்து செய்யப்படுவது அல்ல. இதில் தேர்தல் முறை மாற்றமே பிரதான நோக்கமாக உள்ளது என்றார்.

மேலும் கடந்த ஆட்சியில், ஊழல் மோசடியில் ஈடுபட்டவர்களுக்கு விரைவில் தண்டனை வழங்கப்பட வேண்டும். நீதிமன்றத்தின் முன்பாக வரவழைத்து விசாரணை நடத்தி காலதாமதம் ஏற்படுவதன் அர்த்தம் நீதி நிறைவேறாமைக்கு ஒப்பானதாகும். எனவே 2015ஆம் ஆண்டு ஜனவரி 21ஆம் திகதி ஊழல் மோசடிகளை விசாரணை செய்ய விசேட நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டுமென யோசனை முன்வைத்திருந்தேன். எனினும் விசேட நீதிமன்றம் அமைக்க அதற்காக சட்டமொன்றை கொண்டு வர வேண்டும் என்றதால் தற்போதுள்ள நீதிமன்ற கட்டமைப்பில் விசாரணை செய்வதற்கு இணக்கம் வெளியிடப்பட்டது. எனினும் நீதி நிலைநாட்டப்படாமை இன்று அனைவராலும் அறியமுடிகிறது. எனவே தற்போது உள்ள நீதிமன்றங்களிலாவது விசாரணைகள் முழுமை பெற்று நீதி நிலைநாட்டப்படுவது அவசியமாகும் என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார். (செ-11)

## புதிய கட்சி...

பட்டுள்ள பசில், நேற்று காலை 9.30 அளவில் கொழும்பிலுள்ள ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகியிருந்தார்.

ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகி சாட்சியமளித்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில் அவர் இந்த விடயங்களை குறிப்பிட்டுள்ளார்.

மக்களுக்கு ஏற்படும் இடையூறுகளை கலைவதற்கே நாம் எதிர்பார்க்கின்றோம். ஆனால் அரசாங்கம் மிகவும் கடுமையாக நடந்துகொள்வதோடு, நாட்டின் இறையாண்மையை இல்லாமல் செய்ய முயற்சிக்கின்றது.

விசேடமாக எட்கா உடன்படிக்கையின் ஊடாக நாட்டிலுள்ள இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படும். பெருந்தோட்ட மக்களின் வேலை வாய்ப்புகளும் இல்லாமல் போகும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. பொருளாதார ரீதியாக மாத்திரமல்ல வேறு வழிகளிலும் நாட்டிற்கு அச்சுறுத்தல்ஏற்பட்டுள்ளது. அவற்றை நிறுத்த வேண்டும்.

புதிய கட்சியை உருவாக்குவதற்கான பணிகள் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இலட்சினை, கட்சியின் பெயர் மற்றும் தலைவர் தொடர்பில் பின்னர் அறிவிக்கப்படும் என ஊடகங்களிடம் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதேவேளை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் அமைக்கப்படவுள்ள புதிய அரசியல் கட்சிக்கு பல்வேறு தரப்புகளிலிருந்தும் இதுவரை 11,622 பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டிருப்பதாகவும்,

7,000 கடிதங்கள் மற்றும் 4,622 மின்னஞ்சல்கள் ஆகியவற்றின் மூலம் இந்தப் பெயர்கள் வந்து சேர்ந்திருப்பதாகவும், அவற்றில் பொருத்தமான பெயர்களைத் தேர்ந்தெடுக்க எட்டுப் பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டிருப்பதாகவும் பொது எதிரணி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேலும் புதிய கட்சிக்கான அரசமைப்பையும், கொள்கைப் பிரகடனத்தையும் தயாரிக்க மூன்று ஜனாதிபதி சட்டத்தரணிகள், இரண்டு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மூன்று பிரபல கட்சிகளின் பிரதிநிதிகள் ஆகியோரைக் கொண்ட குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (செ-11)

## பௌத்த மத...

குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு கொலன்னாவ பகுதியிலுள்ள விகாரையில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற மதவழிபாட்டு நிகழ்வில் கலந்துகொண்டு அங்கு கூடியிருந்த மக்கள் மத்தியில் உரையாற்றும் போதே பிரதமர் இந்தத் தகவல்களைத் தெரிவித்திருக்கின்றார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

## ஐ.நா விசேட...

கார அமைச்சர் மங்கள சமரவீரவை ஐ.நா அறிக்கையாளர் நேற்றையதினம் சந்தித்திருந்தனர். அக் குழுவினர் எதிர்வரும் 20ஆம் திகதி வரை இங்கு தங்கியிருந்து, சிறுபான்மையினரின் பிரச்சினைகள் குறித்து நேரடியாக தகவல்களை பெற்றுக் கொள்ளவுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இதன்பொருட்டு இவர் கொழும்புக்கு அடுத்து வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு ஆகிய மாகாணங்களுக்கும் செல்லவுள்ளதாக, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் றீட்டா கிசாக் நேரடியாக அரசாங்க அதிகாரிகள், தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் சிவில் சமூக உறுப்பினர்கள் உள்ளிட்ட பலருடன் பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபடவுள்ளார்.

மேலும் பயண முடிவான எதிர்வரும் 20 ஆம் திகதி கொழும்பு ஐக்கிய நாடுகள் அலுவலகத்தில் இடம்பெறவுள்ள ஊடகவியலாளர் சந்திப்பிலும் இவர் கலந்து கொள்ளவுள்ளார்.

இதேவேளை றீட்டா கிசாக் நேரடியாக உள்ளிட்ட குழுவின் இலங்கைக்கான விஜயம் குறித்து எதிர்வரும் மார்ச் மாதம் இடம்பெறவுள்ள ஐநா மனித உரிமைகள் அமர்வில் முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## 6 இலட்சம் பேர்...

களில் வரட்சியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 61 ஆயிரத்து 337 ஆக அதிகரித்துள்ளது.

இவற்றுள் பொலநறுவை மாவட்டமே அதிக பாதிப்பை எதிர்கொண்டுள்ளது.

அந்த மாவட்டத்தில் 1 லட்சத்து 30 ஆயிரத்து 513 பேர் பாதிக்கப்பட்டிருப்பதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது. வரட்சியான காலநிலை காரணமாக நாட்டின் பல பிரதேசங்களில் குடிநீர் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

தமக்கு விரைவாக குடிநீரை வழங்கு மாறு கோரி மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டம் காரணமாக திஸ்ச கதிர்காமம் பாதையில் நேற்று மாலை வாகன போக்குவரத்திற்கு பாதிப்பு ஏற்பட்டது. வரட்சி காரணமாக மக்களுக்கு மாத்திர மல்லாது விலங்குகளுக்கும் பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

யால, வில்பத்து போன்ற சரணாலயங்களின் நீர் நிலைகள் வற்றிய நிலையில் காணப்படுவதாகவும் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர். (செ-11)

# ரணில் கைது செய்யப்படுவது உறுதி; ஆதாரங்கள் விரைவில் வெளிவரும்

## வாசுதேவ சவால்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் இருவரும் கைது செய்யப்படுவது உறுதியாகி உள்ளதாக கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

கோப் குழுவின் அறிக்கை பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் போது அதில் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனின் ஊழல்கள் வெளிப்படும். அவ்வாறு அர்ஜுன் மகேந்திரன் ஊழல்களில் மாட்டிக் கொண்டாரானால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஊழல் தொடர்பில் சிக்கிக்கொள்வார் என்று தெரிவித்தார்.

கோப் குழுவின் அறிக்கைகளின்படி அர்ஜுன் மகேந்திரன் கைது செய்யப்படுவார். அவரைத் தொடர்ந்து பிரதமரும் நிச்சயம் கைது செய்யப்படுவார், அதற்கு காரணம் அர்ஜுன் மகேந்திரனுக்கும் பிரதமருக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு உள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

எந்த ஒரு பொய்யான காரணங்களுக்காகவும் இவர்கள் கைது செய்யப்பட மாட்டார்கள். பாராளுமன்றில் முன்வைக்கப்படும் கோப் குழுவின் அறிக்கையில் அனைத்து விடயங்களும் தக்க ஆதாரங்களுடன் காணப்படும். அதற்கமையவே இவர்கள் கைது செய்யப்படுவார்கள் எனவும் சவால் விடுத்தார். தற்போது அரசாங்கத்தின் ஒரு முக்கிய பதவியில் இருக்கும் அர்ஜுன் மகேந்திரன் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்வதுடன், முக்கிய ஒப்பந்தங்களின் போதும் அரசுடனேயே இருக்கின்றார்.

விசாரணைகள் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கும் ஒருவருக்கு இந்த அளவு சுதந்திரம் கொடுப்பதும், முக்கிய பொறுப்புக்களை ஒப்படைப்பதும் குற்றச்செயல் எனவும் வாசுதேவ தெரிவித்தார்.

மேலும் பலம் பொருந்திய நாடுகளுக்கு பயணம் மேற்கொள்வதும், அந்த நாடுகளுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தங்களும், மற்றும் டிசெம்பர் மாதம் செய்துகொள்ள உள்ள எட்கா ஒப்பந்தமும் எதிர்காலத்தில் நாட்டுக்கு எவ்வாறான ஒரு பாதிப்பை ஏற்படுத்தப்போகின்றது என்பது யாருக்கும் தெரியாது.

அந்த அளவிற்கு பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் எனவும் கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார குற்றம் சுமத்தினார். (இ-7,10)

## ரயிலில் மோதுண்டு...

இதில் யாழ்.திருநெல்வேலி பல்கலைக்கழக வீதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான நித்தியானந்தன் முகுந்தன் (வயது 44) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இது தொடர்பில் கோப்பாய்ப் பொலிஸில் முறைப்பாடு பதியப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-30)


# பிரபாவின் உருவப்படம் பொறித்த சுவரொட்டியால் நேற்று பரபரப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் உருவப்படம் பொறித்த சுவரொட்டி வீதியில் ஒட்டப்பட்டமையால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. யாழ். மருதனார்மடம் ஆஞ்சநேயர் ஆலயத்திற்கு முன்பாக உள்ள பஸ் தரிப்பிடத்திற்குள்ளேயே இவ்வாறு ஒட்டப்பட்டுள்ளது. இந்த சம்பவத்தினால் அங்கு புலனாய்வு பிரிவினர் வருகை தந்து விசாரணை மேற்கொண்டதனால் நேற்று அப்பகுதியில் பதற்றம் நிலவியது.

கறுப்பு வெள்ளை சுவரொட்டியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் புகைப்படமும், தமிழீழத்தின் தேசிய அடையாளம் சிறுத்தைப்புலி, தேசிய மலர் கார்த்திகைப் பூ, தேசிய பறவை செண்பகம், தேசிய மரம் வாகை ஆகிய தேசிய அடையாளங்கள் பொறிக்கப்பட்ட சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. விடுதலைப் புலிகளின் எழுச்சி நாட்கள் குறித்த துண்டுப்பிரசுரங்களும் ஒட்டப்பட்டுள்ளன.

பஸ் தரிப்பிடத்திற்கு வந்த பொதுமக்கள் குறித்த துண்டுப்பிரசுரத்தினை பார்த்துவிட்டு சுன்னாகம் பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்கியுள்ளனர். குறித்த தகவலின் பிரகாரம் பஸ் தரிப்பிடத்திற்கு இராணுவத்தினரும், பொலிஸாரும் வருகை தந்து துண்டுப் பிரசுரங்களை கிழித்து விட்டுச் சென்றுள்ளனர். இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-4)



புதிய அரசியல் யாப்பில் பௌத்த மதத்தை பாதுகாப்பதற்கு முன்னுரிமை வழங்குவது தொடர்பில் எந்த சிக்கலும் இல்லை எனவும் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட அனைத்துக் கட்சிகளும் பௌத்த மதத்தைப் பாதுகாப்பதற்கும் முன்னுரிமை கொடுப்பதற்குமான விதந்துரைகளை தொடர்ந்தும் அப்படியே வைத்திருக்க முழுமையான இணக்கத்தைத் தெரிவித்திருக்கின்றன.

அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மாத்திரமன்றி கத்தோலிக்கத் திருச்சபையின் அதிமேற்றிராணியாரான கர்தினாலும் இதனை அங்கீகரித்துள்ளார்.

அதேபோல் இந்து, இஸ்லாம் மதங்களின் தலைவர்களும் பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்கி அதனைப் பாதுகாக்க வேண்டும் என்பதை முழு மனதுடன் ஏற்றுக்கொண்டிருக்கின்றனர்.

அதனால் அரசியல் யாப்பிலுள்ள பௌத்த மதம் தொடர்பான சரத்து தொடர்பில் பிரச்சினையாக்கிக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. அரசு என்ற ரீதியில் ஜனாதிபதியும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் நாங்களும் இவற்றை பிரசாரப்படுத்துவதில்லை.

பௌத்த மதத்தையும், சாசனத்தையும் பாதுகாக்க நாம் செயல் ரீதியாக நடவடிக்கை எடுத்துள்ளோம். வார்த்தைகளால் அல்ல. சிலர் வார்த்தை ஜாலங்களால் பாதுகாப்பதாக பிரசாரம் செய்யத் திறமையானவர்கள். ஆனால் அவர்கள் செயல் ரீதியாக இருப்பதையும் அழித்து விடுகின்றனர்.

ஆனால் நாம் செயல் ரீதியாக பௌத்த மதத்தை பாதுகாத்து, அதனை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றோம் என்று ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

## பொதுநலவாய...

ஜனாதிபதி மற்றும் பிரதமர் உள்ளிட்ட அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களுடன் சந்திப்புகளில் கலந்துகொள்ள உள்ளார்.

16 ஆவது உலக ஏற்றுமதி அபிவிருத்தி ஒன்றியத்தின் மாநாடு நாளை ஆரம்பமாக உள்ளது. பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த மாநாடு புதன் மற்றும் வியாழன் ஆகிய இரு தினங்கள் நடைபெறவுள்ளது.

இதில் கலந்து கொள்வதற்காக பாகிஸ்தான் மற்றும் சீனா உள்ளிட்ட நாடுகளின் வர்த்தக அமைச்சர்கள் கலந்துக் கொள்ள உள்ள நிலையில் பன்னாடுகளையும் பிரதிநிதித்துவம் செய்யும் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துக் கொள்ள உள்ளனர். மேலும் ஹங்கேரி வெளிவிவகார அமைச்சர் பீற்றர் ஸ்ஜெடோவும் உலக ஏற்றுமதி அபிவிருத்தி ஒன்றியத்தின் மாநாட்டில் கலந்துக் கொள்வதற்காக இலங்கை வர உள்ளனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்ற உள்ள உலக ஏற்றுமதி அபிவிருத்தி ஒன்றியத்தின் மாநாட்டில் உலக ஏற்றுமதி துறையில் காணப்படும் சவால்கள் மற்றும் பல்துறைசார் வர்த்தக பிரச்சினைகள் குறித்து இதன் போது கவனம் செலுத்தப்பட உள்ளது. இதன் போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வலய வர்த்தக சவால்கள் குறித்து விசேட உரையாற்ற உள்ளார்.

இலங்கையின் ஏற்றுமதி பொருளாதாரத்தை ஊக்குவிப்பதற்கான சிறந்த வாய்ப்பாக இந்த மாநாடு அமையும் என எதிர்பார்க்கப்படுவதோடு மேலும் உறுப்பு நாடுகளுக்கு இடையிலான வர்த்தக ரீதியிலான உறவுகளை வலுப்படுத்துவதும் மாநாட்டின் நோக்கமாகும். (செ-11)

## 4 பொலிஸ் அதி...

பில் விசாரணைகளை முன்னெடுத்த குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்றைய தினம் சந்தேக நபரான பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரைக் கைது செய்து மன்றில் ஆஜர் செய்த போதே ஏனைய சந்தேக நபர்களான முன்னாள் சுன்னாகம் பொலிஸ் பொறுப்பதிகாரி சிந்தக பண்டார உள்ளிட்டோரைக் கைது செய்யுமாறு கிளிநொச்சி நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜா உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இந்த படுகொலை விவகாரம் தொடர்பில் ஏற்கெனவே பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய பொலிஸ் சார்ஜன்ட் தர அதிகாரியான டபிள்யூ.டி.சோமதாஸ வீரசிங்க என்பவர் குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் சரணடைந்த நிலையில் கைது செய்யப்பட்டு நேற்று கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

இதன்போதே அவரை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட நீதிவான் ஏனைய சந்தேக நபர்களான சுன்னாகம் முன்னாள் பொலிஸ் பொறுப்பதிகாரி சிந்திக பண்டார, ஆர்.எம்.ராஜபக்ஷ, ஜயந்த மற்றும் மயூரன் ஆகிய பொலிஸ் உத்தியோகத்தர்களை உடனே கைது செய்து மன்றில் ஆஜர் செய்ய நீதிவான் உத்தரவு பிறப்பித்தார்.

கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்த புன்னாலைக்கட்டுவன் தெற்கு சுன்னாகத்தைச் சேர்ந்த ஸ்ரீஸ்கந்தராசா சுமன் என்ற நபர் 2011 ஆம் ஆண்டு உயிரிழந்திருந்தார்.

களவு தொடர்பான வழக்கொன்றில் கைது செய்யப்பட்டு சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்த போதே இவர் உயிரிழந்தார். இந்த நிலையில் சுமன் எனப்படும் சந்தேகநபர் பொலிஸ் நிலையத்திலிருந்து தப்பிச்சென்ற நிலையில் கிளிநொச்சி - இரணைமடுக்குளத்தில் வீழ்ந்து உயிரிழந்ததாக அப்போது பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது.

எனினும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது குறித்த நபர் மீது பொலிஸார் தாக்குதல் நடத்தியதுடன் சித்திரவதைகளுக்கும் உட்படுத்தப்பட்டார் என்று அவருடன் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஏனைய சந்தேகநபர்கள் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் குளத்திலிருந்து கைப்பற்றப்பட்ட சடலத்தில் தாக்குதல் நடத்தப்பட்டமைக்கான அடையாளங்கள் காணப்பட்டமை பிரேத பரிசோதனைகளின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில் இந்த சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகள் உறவினர்களின் கோரிக்கைக்கு அமைய நீதிமன்றத்தால குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் கையளிக்கப்பட்டிருந்தது.

இதன்படி இரகசிய பொலிஸ்துறையினரால நடத்தப்பட்ட விசாரணைகளின் ஊடாக இதுவொரு கொலை என நம்பக்கூடியவாறான சாட்சியங்கள் உள்ளதென குற்றப் புலனாய்வுப் பிரிவினர், சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அறிவித்திருந்தனர்.

அவரின் ஆலோசனைக்கு அமைவாகவே சுன்னாகம் முன்னாள் பொலிஸ் பொறுப்பதிகாரி உள்ளிட்ட அறுவர் மீது கொலை குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## சிறுப்பிட்டி இளை...

றைய தினம் உத்தரவிட்டுள்ளார்.

சிறுப்பிட்டி பகுதியில் இரு இளைஞர்கள் இராணுவத்தினரால் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட வழக்கு சுமார் 18 வருடங்களின் பின்னர் நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவருவதாவது,

மட்டுவில் வடக்கை சேர்ந்த செல்வரத்தினம் ஜெயசீலன், நாகமணி சௌந்தரராஜன் ஆகிய இளைஞர்கள் இருவர் கடந்த 1997 ஆம் ஆண்டு ஒக்டோபர் 28 ஆம் திகதி மயிலங்காட்டு பகுதிக்கு உறவினருடைய திருமணத்துக்காக சென்றுள்ளனர்.

இதன்போது அவர்கள் இருவரும் சிறுப்பிட்டி. புத்தூர் வாதரவத்தையில் அமைந்திருந்த இராணுவ முகாமில் உள்ள இராணுவத்தினரால் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தாக குற்றஞ்சாட்டப்பட்டது.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகத்தின் பேரில் அச்சுவேலி பொலிஸாரால் 1998 ஆம் ஆண்டு காலப்பகுதியில் குறித்த இராணுவ முகாமில் கடமையாற்றிய 16 இராணுவ வீரர்களுக்கு எதிராக யாழ்.நீதவான நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டு கொலைக் குற்றம் சாட்டப்பட்டு பின்னர் 16 இராணுவத்தினரும் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர். பின்னர் இவ்வழக்கு கோவை சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டு கிடப்பில் இடப்பட்டது.

சுமார் 18 வருடங்களின் பின்னர் சட்டமா அதிபரினால் இவ்விடயம் தொடர்பாக பரிசீலிக்கப்பட்டு மேற்குறித்த இரு இளைஞர்களையும் கொலை செய்ததன் அடிப்படையில் குறித்த 16 இராணுவ வீரர்களுக்கு எதிராக வழக்கை தொடர்ந்து நடத்துமாறு யாழ்.நீதவான் நீதிமன்றுக்கும் அச்சுவேலிப் பொலிஸாருக்கும் அறிவிக்கப்பட்டது. அதன் பிரகாரம் குறித்த 16 இராணுவ வீரர்களுக்கும் யாழ் நீதவான் நீதிமன்றால் அழைப்பு கட்டளை அனுப்பப்பட்டது.

அந்த வகையில் கடந்த 26 ஆம் திகதி யாழ் நீதவான் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்ட இவ்வழக்கில் 16 இராணுவத்தினரில் 5 இராணுவத்தினரே மன்றில் ஆஜராகியிருந்தனர். ஐந்து பேரையும் நேற்றைய தினம் வரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டதுடன் ஏனைய 11 இராணுவத்தினரையும் கைது செய்து மன்றில் முற்படுத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

அதன்படி குறித்த வழக்கு நேற்றைய தினம் மன்றில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது தளபதி வீரசிங்க உட்பட சுமன்குமார, பிரேமதிலக, ஜெனக,சுனில், சமரசிங்க, பிரேமஜெயந்த, சுதக், பெரேரா, கேரத், சந்தரே, ஜெயக்கொடி, ரத்நாயக்க, ஜெகத் ஆகிய 14 இராணுவத்தினர் ஆஜராகியிருந்ததுடன் பீரிஸ் மற்றும் நிமால் எனும் 2 இராணுவத்தினர் கடந்த யுத்தத்தின் போது உயிரிழந்துள்ளதாக மன்றில் தெரிவிக்கப்பட்டது.

இராணுவத்தினரின் சார்பாக 6 சட்டத்தரணிகள் மன்றில் ஆஜராகியிருந்ததுடன் குறித்த வழக்கில் கொலைக்குற்றம் சாட்டப்பட்ட 16 இராணுவத்தினரும் கடந்த 1998 ஆம் ஆண்டு பிணையில் விடுவிக்கப்பட்டதாகவும் அத்தோடு அவர்கள் இதுவரை பிணை நிபந்தனை எவற்றையும் மீளவில்லை எனவே நீதவான் நீதிமன்றில் வழங்கப்பட்ட பிணையை மேல் நீதிமன்று அல்லது குறித்த பிணையை வழங்கிய நீதவானே மாற்றவேண்டும் என தெரிவித்ததுடன் அவர்களுக்கு பிணை வழங்க வேண்டும் என கோரியிருந்தனர்.

இதன்படி வழக்கை பரிசீலித்த நீதவான் பிணை விண்ணப்பம் தொடர்பான கட்டளையிடுவதற்காக 14 இராணுவத்தினரையும எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.(செ-9)

## சந்திரிகா, மனோ...

உறுமய கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேறறு இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர், நல்லிணக்கத்திற்கு தடையாக தாம் இருப்பதாக வட மாகாண சபை உறுப்பினர் செ.மயூரன் தெரிவித்திருந்த கருத்தையும் உதய கம்மன்பில நிராகரித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு, ஞானசார தேரர், விமல் வீரவன்ச மற்றும் நான் உள்ளிட்டவர்கள் தடையாக இருப்பதாக வட மாகாண சபை உறுப்பினர் செ.மயூரன் தெரிவித்துள்ளார். எங்களை கைது செய்ய வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளார். நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு நாங்கள் தடையாக இருக்கவில்லை என்பதை அவருக்கு தெரிவிக்க விரும்புகின்றேன்.

யார் நல்லிணக்கத்திற்கு தடையாக இருப்பது? யாரை கைது செய்ய வேண்டும்? முன்னாள ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள நல்லிணக்க செயலணி கடந்த 20 மாதங்களாக நல்லிணக்க செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளது. இது தொடர்பிலான பிரேரணைக்கு அமைச்சரவை அனுமதியை ஜனாதிபதியால் பெற்றுக்கொள்ள முடியவில்லை காரணம் இதற்கு அமைச்சர் மனோ கணேசன் எதிர்ப்பு வெளியிட்டார். பிரேரணையில் கூறப்பட்டுள்ள விடயங்களுக்காக அல்ல, சந்திரிகா தமது அமைச்சின் செயற்பாடுகளில தலையிடுவதாகவே அவர் குற்றம்சாட்டினார்.

ஆகவே நல்லிணக்கம் தொடர்பில் தலைமை வகிக்கும் இருவருக்கும் இடையில் நல்லிணக்கம் இல்லாமல்போயுள்ளது. மயூரன் கூறுவது போல நல்லிணக்கத்திற்கு தடையாக இருப்பவர்களை கைது செய்ய வேண்டுமாயின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவையும், அமைச்சர் மனோ கணேசனையுமே கைது செய்ய வேண்டும் என தெரிவித்தார். (செ-11)

## விமலின் சகோத...

எதிர்வரும் 24ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க, நீதவான் லங்கா ஜெயரத்ன உத்தரவு பிறப்பித்துள்ளார்.

மேலும் அன்றையதினம் முஹம்மட் முஸாமிலுக்கு எதிரான வழக்கும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தின் வாகனங்களை துஷ்பிரயோகம் செய்ததாக இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(செ-11)

## இனியும் அரசி...

உரையாற்றிய அமைச்சர் சம்பிக்க ரணவக்க, மகிந்த ராஜபக்ஷவிற்கு இலக்கங்களில் பிரச்சினை இருப்பதாகவும், அதனாலேயே கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் தோல்வியைத் தழுவியதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் மீண்டும் ஆட்சியை கைப்பற்ற கனவு கண்டுகொண்டிருக்கும் மகிந்த ராஜபக்ஷ, அரசியலில் நீடித்தால் அவமானப்படுவதைத் தவிர வேறு வழியில்லை என்றும் சம்பிக்க எச்சரித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

இரத்தினபுரிக் கூட்டத்திற்கு லட்சக் கணக்கான மக்கள் வந்ததாக கூட்டு எதிரணியினர் பெருமை பாராட்டிக்கொண்டாலும், கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கூட்டங்களுக்கு அநேகர் வருகைதந்திருந்தனர். எமது ஜாதிக ஹெல உறுமயவின் நிறைவாண்டு விழாவிற்கும் பலர் வந்திருந்தனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 65ஆவது நிறைவாண்டு விழாவின்போதும் குருநாகலுக்கு இதைவிடவும் 10 மடங்கு அதிகமானவர்கள் வந்தனர். இந்த அரசாங்கத்தை 2020 ஆம் ஆண்டுவரை கவிழ்க்க முடியாது. நாட்டின் இரண்டு பிரதான கட்சிகள் இணைந்து இந்த அரசாங்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

மகிந்த ராஜபக்ஷ இலக்கங்கள் தெரியாத காரணத்தினால்தான் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்தார். மக்களுக்காக இன்னும் தேர்தல்களில் தோல்வியடைந்து கேவலமாக அவமானப்படுவதை விடவும் மிகவும் கௌரவமாக அரசியலில் இருந்து ஓய்வுபெறுவதே மகிந்த ராஜபக்ஷவுக்கு பொருத்தமானதாகும்.

அவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை இரண்டாகப் பிளவுபடுத்துவதையே செய்கின்றார். ஐக்கிய தேசியக் கட்சியை பிளவடையச் செய்வதாக கூறினாலும் அவரும் அவரது சகோதரர்களான பசில் ராஜபக்ஷ, கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரும் உண்மையிலேயே சுதந்திரக் கட்சியை பிளவுபடுத்தி 20 வருடங்களுக்கு ஆட்சியமைப்பதற்கான சந்தர்ப்பத்தை ஐக்கிய தேசியக் கட்சிக்கு வழங்க முயற்சிக்கின்றனர்.

அத்தோடு தமிழீழ விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக தோற்கடித்ததற்கான உரிமையை கோரிவரும் ராஜபக்ஷ குடும்பத்தினரும், அவரது சகாக்களும், மீண்டும் ஆட்சியை கைப்பற்றுவதற்காக தமிழீழ விடுதலைப் புலிகளை மீண்டும் உயிர்ப்பிக்க முனைகின்றனர்.

இந்த நாட்டில் போலியான வதந்திகள் பரவிவருகின்றன. தமிழீழ விடுதலைப் புலிகளிடம் பீரங்கிகள் இருந்தகாலத்தில் மதவாச்சி மற்றும் ஹபரணைக்கு அப்பால் செல்வதற்கு அஞ்சியவர்கள் இன்று விடுதலைப் புலிகளின் வெருளி ஒன்றை உருவாக்கி அதன் மீது தாக்குதல்களை நடத்திக்கொண்டு சிலர் அரசியல் செய்கின்றனர்.

மகாநாயகர்கள் விடுதலைப் புலிகள் இருந்தகாலத்தில் அகிம்சையான சாகும் வரையான உண்ணாவிரதத்தை மேற்கொண்டு இந்நாட்டின் இறைமையை பாதுகாத்தவர்கள்.

விடுதலைப் புலிகள் செயற்பட்ட காலத்திலும் எமது பலம் குறையவில்லை. இந்த நிலையில் புலிகள் இல்லாததினால் நாட்டின் ஐக்கியம், பௌத்த மதத்திற்கான தனித்துவம் என்பவற்றை இல்லாமல் செய்யப்போவதாக பலரும் பொய்யான பரப்புரைகளை செய்துவருகின்றனர்.

இப்படிப்பட்ட கருத்துக்களை உடையவர்கள் இருக்கலாம், எனினும் புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தில் பொதுமக்களின் கருத்துக்கணிப்புக்களை நடத்தாமல் எந்த விடயத்தையும் மேற்கொள்ள மாட்டோம்

23ஆம் பக்கம் பார்க்க...


ஆங்கில வகுப்பு
தரம் 02, 03, 04, 05, 06, 07, 08, 09, 10 ஆம் O/L, A/L மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தொழில் புரிபவர்களுக்குமான English Spoken with Grammar வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு : 0767070069
(6192) M.Suren

America DV Lottery visa
அமெரிக்கா லொத்தர் வீசா விண்ணப்பங்கள் செய்து கொடுக்கப்படும்.
UK, Norway, Denmark, France போன்ற நாடுகளுக்கான Visa விண்ணப்பங்கள் Online மூலம் விண்ணப்பித்து கொடுக்கப்படும்.
இந்தியாவுக்கான Visa Online மூலம் சில மணி நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.
SUN Travels
கைலாசபிள்ளையார் கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
077 2259 030

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

அமெரிக்க லொத்தர் விசா
2018ல் நீங்களும் அமெரிக்காவில்...
ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!
பதிவுகள் 04-10-2016 தொடக்கம் 07-11-2016 வரை 0768226230
VISA இளைஞர்களே, யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா?
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற ஓர் அரிய சந்தர்ப்பம்
இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் 50'000 பேருக்கான அதிஷ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்
இந்தியா,பங்களாதேஸ்,பாகிஸ்தான்,சீனா போன்ற சனத்தொகை கூடிய நாடுகள் இவ்வருடம் விண்ணப்பிக்க தகுதி இல்லாதமையால் ஆசியாவில் இலங்கையர்களுக்கான வாய்ப்புக்கள் மிகமிக அதிகம்
எம்மூடாக விண்ணப்பித்தவர்கள் விசா பெற்று அமெரிக்கா சென்றுவிட்டார்கள்.
சென்ற வருடம் (2015) எம்மூடாக விண்ணப்பித்தவர்களுள் 12 பேர் அமெரிக்க விசாவிற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்
அலுவலகங்களில் நன்மை கருதி சனி, ஞாயிறு உட்பட இரவு 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்
V2 TRAVELS
#49A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் 0768226241
A9 வீதி கிளிநொச்சி 0768226240
முடக்கோட்டு சந்தி நெல்லியடி 0776699892
No-324, யாழ் பிரதான வீதி பருத்தித்துறை 0768226230
யாழ் வீதி, வல்வெட்டி வல்வெட்டித்துறை 0776697960

FALC FRENCH LANGUAGE CENTRE
FOR THE BEST FRENCH FOREVER
பிரெஞ்சு மொழி வகுப்பு
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர் எம்மிடமே கற்கின்றனர்
விரிவுரையாளர் : France இல் ஆசிரியப் பயிற்சி - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவர்.
(C6061)
DELF A1, A2,B1பரீட்சைகளில் 100 % சித்தி. 1145 மாணவர்கள் French கற்றுள்ளனர்.
No. 40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 22.10.16 சனி 8 am.
பிரதான வீதி, நெல்லியடி TP: 021 3202973 ஆரம்பம்: 24.10.16 Mon @ 3.30pm.
Bus நிலையம் → ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → FLCentre


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.10.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.